விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 15 புதன்கிழமை (30.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347

## எனது குடும்பத்துக்கு பாதுகாப்புத் தேவை!

### உண்மையைக் கூறும் குழுமத்திடம் பெண் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புலனாய்வுத்துறையினர் எமது வீட்டில் கஞ்சாவை வைத்துவிட்டு எனது கணவரை கைது செய்ய முற்படுகிறார்கள்.

எனது குடும்பத்துக்கு பாதுகாப்புத் தேவை என குடும்பப் பெண் ஒருவர் உண்மையைக் கூறும் குழுமம் முன்னிலையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

வட மாகாண உண்மையைக்

23ஆம் பக்கம் பார்க்க....

## கருணா குழுவுடன் பல கொலைகள்

(கொழும்பு)

கருணா குழுவினருடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் பல கொலைகளை தான் செய்ததாக, பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் அரச சாட்சியான முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் பிரித்திவிராஜ் மனம் பேரி நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.

ரவிராஜ் கொலை வழக்கின் இர

23ஆம் பக்கம் பார்க்க....

## கருணா கைதாகி விளக்கமறியலில்



23ஆம் பக்கம் பார்க்க....

# மாவீரர் தினத்தை தடுக்கும் அதிகாரம் எமக்கு இல்லை!



## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**மாவீரர் தினத்தை தடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு தரப்புக்கு கிடையாது. மாவீரர் தினத்தை தடுக்க வேண்டுமா? அல்லது நடத்த அனுமதிக்க வேண்டுமா? என்பதை பொலிஸ் மற்றும் சிவில் நிர்வாகமே தீர்மானிக்க வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

வடக்கில் இராணுவ பாதுகாப்பை அதிகரிக்கக்கோரி எந்த கோரிக்கைகளும முன்வைக்கப்படவில்லை. அங்கு சிவில் மற்றும் பொலிஸ் நிர்வாக நகர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றமையால் இராணுவப்பாதுகாப்புக்களை பலப்படுத்த எந்தத் தேவையும் ஏற்படவில்லை எனவும் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது மாவீரர் தின அனுஷ்டிப்புகள் மற்றும் வடக்கின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-1)

## வடக்கு-கிழக்கில் 4வது, 5வது குழந்தைகளின் பராமரிப்புக்கு

## படுகொலைப் பட்டியலில்



# பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**மாவீரர் தினத்தை தடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு தரப்புக்கு கிடையாது. மாவீரர் தினத்தை தடுக்க வேண்டுமா? அல்லது நடத்த அனுமதிக்க வேண்டுமா? என்பதை பொலிஸ் மற்றும் சிவில் நிர்வாகமே தீர்மானிக்க வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

வடக்கில் இராணுவ பாதுகாப்பை அதிகரிக்கக்கோரி எந்த கோரிக்கைகளும முன்வைக்கப்படவில்லை. அங்கு சிவில் மற்றும் பொலிஸ் நிர்வாக நகர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றமையால் இராணுவப்பாதுகாப்புக்களை பலப்படுத்த எந்தத் தேவையும் ஏற்படவில்லை எனவும் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது மாவீரர் தின அனுஷ்டிப்புகள் மற்றும் வடக்கின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-1)

## வடக்கு-கிழக்கில் 4வது, 5வது குழந்தைகளின் பராமரிப்புக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கில் 4 ஆவது, 5 ஆவது குழந்தைகளைப் பெற்றெடுத்தால் அந்தக் குழந்தைகளின் பராமரிப்புக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கு சிவசேனை அமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழர் தாயகத்தில் வீழ்ச்சியடைந்து வருகின்ற சைவத் தமிழரின் இன விகிதாசாரத்தையும் சிவபூமியின் பூர்வீக கிராமங்களில் இருப்பையும் நிலைநிறுத்துவதை நோக்கமாகக்கொண்டு இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சிவசேனையின் இணைத்

23ஆம் பக்கம் பார்க்க....

## படுகொலைப் பட்டியலில் திருத்தம் செய்த கெஹலிய

(கொழும்பு)

முன்னைய ஆட்சிக்காலத்தின் போது 13 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்த தகவலில் 24 பேர் படுகொலை செய்யப்பட்டதாக, முன்னாள் ஊடகத்துறை அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல திருத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் வெகுஜன ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னைய ஆட்சியின் போது 13 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதாக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்த கருத்து பிழையானது.

முன்னைய ஆட்சிக்காலத்தின் போது 24 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதனை நாம் ஒப்

24ஆம் பக்கம் பார்க்க....

## 500 ஏக்கர் காணி இறுதித் தீர்மானம் இன்னும் இல்லை

(கொழும்பு)

அனல் மின் நிலைய உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள திருகோணமலை சம்பூரில் உள்ள 500 ஏக்கர் காணியில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டம் தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## விடுதலைப்புலிகளை நினைவுகூர எவருக்கும் அனுமதியில்லை–சாந்த



(கொழும்பு)

சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நினைவுகூர இலங்கையில் எவருக்கும் சட்டரீதியான அனுமதி கிடையாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணித் தலைவர் சாந்த பண்டார,நாட்டில் இடம்பெறும

23ஆம் பக்கம் பார்க்க....

## அரச மருத்துவ அதிகாரிகள் நாடு தழுவிய பணிப் பகிஷ்கரிப்பு

### வடக்கிலும் சேவைகள் இல்லை

(கொழும்பு)

முன் மொழியப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்திற்கு அமைய அரச சுகாதாரத் துறைக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நாடு தழுவிய ரீதியில் ஒருநாள் (24 மணித்தியாலம்) பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தினை இன்று காலை 8மணியிலிருந்து நாளை வியாழக்கிழமை காலை 8 மணிவரை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு ஆதரவாக வடமாகாணத்தில் பணி புரியும் வைத்தியர்கள் அனைவரும் இப்பணிப்

23ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-6510)

**English Language**
Grade 6 to O/L Cantact :-
**P.N.Shutharson** 0773144527
(6714)

**வேலை ஆட்கள் தேவை**
யாழ், வன்னி பிரதேசங்களுக்கு
- மேசன்
- கூலியாட்கள்
- வாகன சாரதி (டிப்பர்)

தொடர்பு :- 0768622764
(6766)

**ஆரம்பப் பிரிவு, உயர்பிரிவுகளுக்கான வேலைத்திட்டம், பாடப் பதிவேடுகளை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.**

**பாரதி பதிப்பகம்**
E-mail: bhaarathiiprint@gmail.com
663C, K.K.S. Road, Jaffna. | T.P: 021 222 3081
(C-6520)

25 YEARS OF SERVICE EXCELLENCE 1991-2016
**செய்மதி தொலைக்காட்சி சேவை**
**(Direct to Home)**
டிஷ் அன்டெனா மூலம் (Digital SD/ HD) தரத்தில் இடையூறு அற்ற முறையில் குறைந்த கட்டணத்தில் (ரூபா 400/- தொடக்கம்) உங்கள் விருப்பம் போல் டிவி சானல்களை கண்டுகளிக்க கூடிய செட் 1 வருட உத்தரவாதத்துடன்*
அனைத்து டிவி ரிசார்ஜ்ற்கும் RECHARGEக்கும் 20% வரை விலைக்கழிவு.




**Rs.2750/-***
**SATS-TECH ENGINEERS**
NO. 298 K.K.S.ROAD JAFFNA. PH:- 021 222 8812. Hotline : 0777710785
(C-6518)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
07.02.1944
உதிர்வு
31.10.2016

## அமரர் சின்னப்பு பத்மநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கடந்த 31.10.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னப்பு பத்மநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.11.2016) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

—குடும்பத்தினர்

(6738)

# கிளி / முருகானந்தா கல்லூரி, முரசுமோட்டை

## சேவைநலன் பாராட்டு

எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக
தனது உயரிய, அர்ப்பணிப்பான சேவையை
வழங்கிய முன்னாள் அதிபர்

## திருவாளர் தில்லையம்பலம் வரதன்

**(SLPS - II) [ B.B.A (Hons), PGDE (Merit), M.Ed (Merit) ]**



அவர்களை நீண்ட ஆயுளுடனும் சிறந்த புகழுடனும்
வாழ மனமார வாழ்த்துகின்றோம்.



காலம் :- 30.11.2016 (புதன்கிழமை) இன்று
இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்
நேரம் :- நண்பகல் 12.00 மணி

வான் புகழ் வரதனாய்...
கல்வி உலகின் வரமாய்...
மாணவர் வாழ்வு வளம்பெற
ஆசிரியர் வாண்மை விருத்திபெற
அயராது உழைத்து – உயர்
ஆளுமைப் பண்பை தன்னகத்தே கொண்ட
எம் தானைத்தலைவன்
கல்லூரியின் முதுகெலும்பாய்
முகிழ்த்த முத்தான வித்தகன்!
உங்கள் வாழ்வு வளம்பெற வாழ்த்துகின்றோம்

- கல்லூரிச் சமூகம்

(6765)

# தேர்தலை அரசு திட்டமிட்டு பிற்போடவில்லை

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலை அரசாங்கம் திட்டமிட்டு பிற்போடவில்லை என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார். மகிந்த தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் முன்வைத்த கேள்விக்கு பதில் வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்.


உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போட வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை. தற்போது எல்லை மறுசீரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான அறிக்கை நிறைவு செய்யப்பட்டதன் பின்னர். தேர்தல் நடத்தப்படும் என தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பாராளுமன்றத்தை நோக்கி படையெடுத்த மூவாயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள்



களனியிலிருந்து கொழும்பு நோக்கி அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வைத்தியபீட மாணவர்கள் செயற்பாட்டுக் குழுவும் இணைந்து நேற்று முன்னெடுத்துள்ள ஆர்ப்பாட்டம் பாராளுமன்றத்தை நோக்கி பேரணியாக சென்றது. இதில் 3000 இற்கும் அதிகமான மாணவர்கள் பங்கு கொண்டனர் . (இ-7-10)

## நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு ஞானசார தேரருக்கு அழைப்பாணை



கிறிஸ்தவ தேவாலயமொன்றின் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் விடுதலை செய்யப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்றைய தினம் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடுவலை - மாலம்பே தலாஹேனே பிரதேசத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு தேவாலயமொன்றுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பாக ஞானசார தேரருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எனினும். இந்த வழக்கில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட்ட குழுவினரை விடுவிப்பதாக தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் சார்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும் ஞானசார தேரர் மன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

எனவே. குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள ஞானசார தேரரை எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிப்பதாக நீதிமன்றம் நேற்று அறிவித்தது. (இ-7-10)

## தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன வளாகத்தில் குழப்ப நிலை



சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்ள பெருந்திரளானவர்கள் வந்திருந்தமையால் நேற்றுக் காலை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன வளாகத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் உரிய அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்களை செலுத்தினால் 25 ஆயிரம் ரூபாய் அபராதம் அறிவிடப்படும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்ள பெருந்திரளானவர்கள் ஒன்றுகூடுகின்றனர்.

இதனால் நாட்டிலுள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன வளாகங்களில் குழப்ப நிலை ஏற்படுகின்றது.

சில தவறுகளுக்கான அபராதத் தொகையை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க யோசனை முன்வைத்தமையே இதற்குக் காரணம் என. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத் தலைவர் ரோஹண புஸ்பகுமார தெரிவித்தார். (இ-7-10)

# தமிழ்த்தேசிய போராட்டத்தை கொச்சைப்படுத்த வேண்டாம்

## மனோவை சாடிய சிவாஜிலிங்கம்

ஏணியில் ஏறி யானையில் இருக்கின்றீர்கள். எனவே தமிழ்தேசிய போராட்டத்தினையும் தேசிய இயக்கத்தினையும் கொச்சைப்படுத்த வேண்டாம் என அமைச்சர் மனோ கணேசனை வட மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் சாடியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு சாடினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் காலியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினை பயங்கரவாத இயக்கம் என்றும் மாவீரர் தினத்தினை அனுஷ்டிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் உரையாற்றியுள்ளார். அந்த உரைக்கு பதிலளிக்கும் வகையில் பத்திரிகையாளர்களை சந்தித்து தனது கருத்துக்களை சிவாஜிலிங்கம் முன்வைத்தார்.

அமைச்சர் மனோ கணேசன் விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அந்த இயக்கத்திற்கு ஆதரவான நிகழ்ச்சிகளை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

அந்த தவறினை செய்தால் குற்றமாக கருதப்படுமென்றும் கூறியிருக்கின்றார். மனோ கணேசன் வட கிழக்கு மக்களின் வாக்குகளினால் தான் மாகாண சபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். 2002 ஆம் ஆண்டு வேலுப்பிள்ளை பிரபாகரன் அனைத்து தமிழ் கட்சிகளையும் அழைத்துப் பேசிய போது, திருப்தியான பல கருத்துக்களை முன்வைத்து அறிக்கை ஒன்றினை மனோ கணேசன் வெளியிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து பல விடயங்களை செய்வோம் என கூறியதுடன், அன்று பயங்கரவாதிகள் என தெரியாத போது இன்று பயங்கரவாதிகள் எனத் தெரிகின்றதா? என்று அவர் கேள்வி எழுப்பினார். சிங்கள மக்கள் மத்தியில் பேசும் போது இனிக்கிறதா என்றும் அவர் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது எமது உரிமை. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் அனுஷ்டிக்கப்பட்டு வந்த மாவீரர் தினத்தினை அனுஷ்டிப்பது தமிழ் மக்களின் பிறப்பு உரிமை. இவற்றினை உரிமையாகத் தர வேண்டியதும் இல்லை. நடவடிக்கை எடுப்போம் என கூறியிருந்தீர்கள். அமைச்சர் ராஜித சேனாரட்ன பார்க்கலாம் என்றார். ஆனால், உடனடியாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பதிலளித்தார்கள்.

அமைச்சர் பதவி வேண்டுமென்றால் தாராளமாக குளிர்காயலாம், அல்லது ஒட்டிக்கொண்டிருக்கலாம். எமது மக்களிடம் வந்து விட்டு எமது தேசிய போராட்டத்தினையும் தேசிய இயக்கத்தினையும் கொச்சைப்படுத்த வேண்டாம். எந்த சக்தி வந்தாலும் தலை வணங்கப் போவதில்லை. பல்லாயிரக் கணக்கான மக்கள் உட்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் பலர் மாவீரர்களை நினைவு கூர்ந்து நிலைமையினை புரிய வைத்துள்ளார்கள். அவற்றினை நன்கு புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். (இ-4)

## வட மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்திற்கு நான் பதிலளிக்க விரும்பவில்லை-அமைச்சர் மனோ

நிலைத்தன்மையற்ற கோமாளி அரசியலை எப்போதும் செய்யும் வடமாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்துக்கு பதிலளிக்க நான் விரும்பவில்லை என்றாலும் இவரது கருத்துகள் ஒரு சிலரை கூட தவறாக வழிநடத்தி விடக்கூடாது என்பதால், இந்த பதிலை தர விரும்புகிறேன்.

உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டாம் என நான் ஒருபோதும் கூறவில்லை. உண்மையில் தம் பிள்ளைகளை இழந்து வாழும் தமிழ் தாய், தந்தையர்களினதும், கணவனை இழந்து நிற்கும் தமிழ் சகோதரிகளினதும், மூத்தோரை இழந்து நிற்கும் தமிழ் இளையோரினதும், உணர்வுகளையும், இழந்துபோன உறவுகளை நினைந்து அவர்கள் தம் சோகங்களை பகிர்ந்து கொள்வதையும், சிங்கள மக்கள் புரிந்து கொள்ள முயல வேண்டும் என நான் சொன்னேன். ஜே.வி.பி. அமைப்பிற்கு, தம் 1971, 1989 ஆகிய ஆண்டுகால போராட்ட மாவீரர்களை கொண்டாட இருக்கின்ற அதே உரிமை, வடக்கில் கிழக்கில் தமிழர்களுக்கும் இருக்கின்றது என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென சொன்னேன்.

இந்நிலையில் குறுக்கிட்ட ஊடகவியலாளர்கள், ஜே.வி.பி. அன்று தடை செய்யப்பட்டிருந்த போது அந்த உரிமை அவர்களுக்கு அன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. இன்று புலிகள் தடை செய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பு. எனவே இது சட்டவிரோதம் இல்லையா? என்று கேள்வி எழுப்பியபோது, புலிகள் இன்று ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற காரணத்தால், அவர்களது பெயர்களை குறிப்பிடாமல் தமிழ் மக்கள் நினைவஞ்சலிகளை நடத்துவதில் சட்டப்பிரச்சினை இல்லை என்றும், எதிர்காலத்தில் அந்த தடை நீக்கப்படுமானால், அப்போது ஜே.வி.பியை போன்று, புலிகளின் பெயரிலேயே நிகழ்வுகளை தமிழ் மக்கள் நடத்தலாம் என்றும் நான் கூறினேன்.

இதை சிங்கள மொழியில், ஒருமுறை அல்ல, நான்கு முறைகள், கடந்த ஒருவார காலத்தில், நான்கு இடங்களில் சொன்னேன்.

தென்னிலங்கை ருஹூனு சிங்கள தேசத்தில், சிங்கள மொழியில், இக்கட்டான இறுக்கமான சூழலில், நான் கூறிய இந்த கருத்துகளுக்காக சிவாஜிலிங்கம் போன்றோர் உண்மையில் என்னை பாராட்ட வேண்டும். ஆனால், வெறுமனே உணர்ச்சி வசப்பட்டு வாய் வீரம் பேசுவதிலேயே காலத்தை கழித்தபடி, தமிழ் மக்களை மீண்டும், மீண்டும் துன்பத்தில் இழுத்துவிடும் அரசியலையே செய்துவரும் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு செய்திகளை பகுத்தாயும் தகைமை இல்லாமல் போனதையிட்டு நான் ஆச்சரியமடையவில்லை என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மொஹாலியிலும் வெற்றிக் கொடி நாட்டியது இந்தியா

## சுழலில் சிக்கி நான்கு நாட்களில் காலியானது இங்கிலாந்து

இந்திய அணியின் வெற்றிக் கோட்டையாக மீண்டும் மொஹாலி ஜொலித்தது. ஜடேஜா சகலதுறை வீரராக அசத்த, 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது இந்தியா. 'சுழலில்' சிதறிய இங்கிலாந்து நான்கே நாளில் 'சரண்டர்' ஆனது.

இந்தியாவக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னலை வகித்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் மொஹாலியில் நடந்தது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 283, இந்தியா 417 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்கு 78 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

### ஜோ ரூட் அரை சதம்

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. கேரத் டக்-அவுட்டானார். பட்லர் (18) ஜெயந்த் 'சுழலில்' ஆட்டமிழந்தார். கை விரல் காயத்தை பொருட்படுத்தாத ஹமீட், பின் வரிசையில் களமிறங்கினார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த ஜோ ரூட், அரை சதம் கடந்தார். இருவரும் போராடியதால், இங்கிலாந்து இன்னிங்ஸ் தோல்வியை தவிர்த்தது.

### ஹமிட் ஆறுதல்


ஜோ ரூட், 78 ஓட்டங்களில் ஜடேஜா 'சுழலில்' சிக்கினார். பின் வோக்ஸ், ஹமீட் சேர்ந்து விவேகமாக ஆடினர். இவர்களை பிரிக்க ஹோலி, ஷமியை அழைத்தார். ஆட் டத்தின் 84ஆவது ஓவரை இவர் 'பவுன்சராக' வீசி, அவர்களை நிலை குலைய செய்தார். முதல் பந்தில் தப்பித்த வோக்ஸ், அடுத்த பந்தில் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதே ஓவரில் ரஷிட்டையும்(0) வெளியேற்றினார். அஷ்வின் பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட ஹமட், அரை சதம் கடந்தார். அண்டர்சன் (5) ரன்-அவுட்டாக, இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 236 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது ஹமீது (59) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய அணி சார்பில் அஷ்வின் 3, ஷமி, ஜடேஜா, ஜெயந்த் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

### பார்த்திவ் அரைசதம்

எளிய இலக்கான 103 ஓட்டங்களை துரத்திய இந்திய அணிக்கு முரளி விஜய் (0) ஏமாற்றினார். பார்த்திவ், புஜாரா ஜோடி சிறபபாக செயல்பட் டது. ஒரு நாள் போட்டி போல ஆடிய பார்த்திவ், ரஷித் பந்து வீச்சில் ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்து அரை சதம் கடந்தார். புஜாரா 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கேரத் பந்தை பார்த் திவ் பவுண்டரி அனுப்ப,



இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இதன்மூலம் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. பார்த்திவ் (67), ஹோலி (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

துடுப்பாட்டம் (90 ஓட்), பந்துவீச்சில் (4 விக்கெட்) கலக்கிய ஜடேஜா, ஆட்ட நாயகன் விருதை வென்றார். நான்காவது டெஸ்ட் மும்பையில் வரும் டிசம்பர் 8இல் ஆரம்பமாகிறது.

### தப்பிய ஹமீட்

அஷ்வின் வீசிய 58ஆவது ஓவரின் இரண்டாவது பந்து, இங்கிலாந்தின் ஹமட் துடுப்பில் உரசி, விக்கெட் காப்பாளர் பார்த்திவ் கைக்கு சென்றது. இதை, பார்த்திவ் நழுவவிட, ஹமீட் அரை சதம் கடந்தார்.

### சபாஷ் ரகானே

ஆட்டத்தின் 66ஆவது ஓவரின் 3ஆவது பந்தை ஜடேஜா வீசினார். ஜோ ரூட் 'பேட்டில்' உரசிய பந்து, 'சிலிப்' பகுதியில் நின்றிருந்த ரகானேவுக்கு சென்றது. துடிப்பாக செயல்பட்ட ரகானே, இடது கையால் பிடி எடுத்து அசத்தினார்.

### 'ஹெல்மெட்டில்' அடி

ஷமி வீசிய 84ஆவது ஓவரின் முதல் பந்தை வோக்ஸ் எதிர்கொண்டார். இது, பவுன்சராக அமைய, கழுத்துப்பகுதி பாதுகாப்பிற்கு அமைக்கப்பட்டிருக்கும் 'ஹெல்மெட்டின் கிளிப்' பகுதி மீது பந்து பட்டது. இதனால், இந்தப்பகுதி மட்டும் உடைந்து பறந்தது. உடனடியாக, வோக்ஸ் அருகில் சென்று ஹோலி, ஷமி விசாரித்தனர். பின், தண்ணீர் குடித்து விட்டு, வோக்ஸ் விளையாடினார்.

### தொடரும் ராசி

மொகாலியில் இந்திய அணியின் வெற்றி தொடர்கிறது. கடைசியாக இங்கு பங்கேற்ற 12 டெஸ்டில் 7 வெற்றி, 5 'டிரா' பெற்றது. ஒரு முறை கூட வீழ்ந்தது இல்லை. கடந்த 20 ஆண்டுகளில் ஒரு அணி தொடர்ந்து (1997□2016) அதிக வெற்றி பெற்ற மைதானத்தின் வரிசையில் இது 3வது இடம் பிடித்தது. முதல் இடத்தில் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் (19 போட்டி, 14 வெற்றி, 1997□2015), இரண்டாவது இடத்தில் இந்தியாவின் ஈடன் கார்டன் மைதானங்கள் (9 போட்டி, 8 வெற்றி, ஈடன் கார்டன், 1999□2015) உள்ளன.

### தோனி சாதனை சமன்

அணித் தலைவராக பொறுப்பேற்ற முதல் 20 டெஸ்டில், அதிக வெற்றி(12) தேடிந்தந்த இந்திய அணித் தலைவர் என்ற சாதனையை தோனியுடன், ஹோலி பகிர்ந்து கொண்டார்.(க)

---

# 20ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**நடராசா மாரிமுத்து**

தோற்றம் 16-04-1950 மறைவு 30-11-1996

அன்பின் திருவுருவே தியாகத்தின் ஜோதியே
எம்மையெல்லாம் வாழவைக்க உம்மையே
உருக்கிய எமது அம்மையே!
ஆறுமோ சோகம் தீருமோ உங்கள் நினைவு
ஆண்டுகள் இருபதென்ன
மறு ஜென்மம் போனாலும்
ஆறாது அன்புத் தாயின் சோகம்
மீண்டுமோர் ஜென்மம் இருந்தால் பிறக்க வேண்டும்
உங்கள் மடியில்...

பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(6760)

46, கொண்டலடி வீதி,
நல்லூர்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி கதிர்காமநாதன் பராசக்தி



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமநாதன் பராசக்தி நேற்று (2016.11.29) செவ்வாய்க்கிழமை சிவபதடைந்துவிட்டார்.

அன்னார் கந்தையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும் கதிர்காமநாதனின் அன்பு மனைவியும் பிரதீபன் (கண்ணன்), துஸ்யந்தி, துஸாந்தி ஆகியோரின் தாயாரும் வரதாஸ் (ஜேர்மனி), மதனராஜா (மதன் பந்தல் சேவை-மல்லாகம்), சிவகலா ஆகியோரின் மாமியாரும் உதயசீதா, துலக்ஷன், துளசிகாந், ஆரணி, ஆராபி, அருண்ஸா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2016.11.30) புதன் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் பாலவித்தாள் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6522)

கச்சாய் வீதி,
கொடிகாமம்

தகவல்
மகன் கண்ணன்
(கண்ணன் பந்தல் சேவை)
T.P 0777 493 848, 077 988 5858

---


## வாடகைக்கு


யாழ்.நகரில் பிரபலமான ஹோட்டல் ஒன்றில் சிறிய பகுதி கொமிசன் அடிப்படையில் வழங்கவுள்ளோம். அச்சிறிய பகுதியில் ஐசிங் கேக், வெதுப்பக வகைகள், பிஸ்கட் வகை, சுவீட்ஸ் வகை, சொக்லேட் வகைகள் போன்ற பொருட்களையே விற்க முடியும்.

(6759)

தொடர்புகளுக்கு:
077 907 9888


---

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி ஜெயரூபி - முருகதாஸ்
அவர்களின் அன்புத் தந்தை

**வைத்திலிங்கம் இராமகிருஷ்ணன்**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரது
ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(6761)

---


## கருத்தரங்கு

பேராதனை
வெளிவாரி
நுழைவுக்கு
G.K, ICT
Analytical Skill
வியாழன் (1/11)
9.30 - 3.30
மணிவரை
அச்சுடிக்கப்பட்ட
குறிப்புக்களுக்கு
மட்டும் ரூபா 150
அறவிடப்படும்.

(C-6521)

076 688 3394

யாழ்ப்பாணக்
கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி
கொமர்ஷல் வங்கியருகில்

# சிவபூஜா மாநாடு

யாழ்ப்பாணம் இந்து சம யப் பேரவையின் சிவபூஜா மாநாடு எதிர் வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை காலை 7மணிக்கு பேரவை நடராஜர் மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் இந்து சமயப் பேர வையின் செயலாளர் ஸ்ரீசிவ சக்திகி ரீவன் தொடக்க வுரையினையும் தலைமையு ரையினை கிரியாக் கிரம ஜோதி சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குரு க்கள், ஆசியுரையினை நகுலேஸ் வர ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷ. இரத்தி னசபாபதி தீக்ஷிதர், இணுவில் சாஸ்தா குருகுல அதிபர் சிவா கம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ. தா.மகா தேவக் குருக்கள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கலாநிதி சித்தாந்த பண் டிதர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ் வரக்கு ருக்கள், இந்துக்குரு மார் ஒன்றியத் தலைவர், சிவா கம ஞானதிலகம் சிவஸ்ரீ ச.மனோகரக்குருக்கள், சுன் னாகம் கதிரமலைச் சிவன் கோயில் கிரியாக்கிரமஜோதி சிவஸ்ரீ ஞா.சர் வேஸ்வரக் குருக் கள், ஸ்ரீலஸ்ரீ தண் டபாணிக தேசிகர் (வல்வெட்டித் துறை முத்துமாரி அம்மன் கோவில்), சிறப்புரைகளை கலாபூஷணம் சிவஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்), சைவக் குருமார் ஒன்றியம், சர்வ மதப் பேரவை ஆகியவற்றின் தலை வர் சிவஸ்ரீ.க.கிருபானந்தக் குருக் கள், சமஸ்கிருத பண்டிதர் பிரம் மஸ்ரீ சுவாமி பஞ்சாட்சர ஐயர், பண் டிதர். தி.பொன் னம்பலவாணர் (பொன் னாலை), சைவப்புலவர் மு.திரு ஞான சம்பந்தபிள்ளை, இந்து சம யப் பேரவை பொருளாளர் ச.சற்கு ணராஜா ஆகியோர் வழங்கவுள் ளனர். (இ-3)

# கண்காட்சிக்கூடங்களை இலவசமாகப் பெற முடியும்

(யாழ்ப்பாணம்)

ஏற்றுமதி அபிவிருத்தித் திச் சபையினால் ஏற்றுமதிப் பொருட் களை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் 2017 இல் நடை பெறும் கண் காட்சியில் இலவச கண்காட்சிக் கூடங்களை பொருத்த மான ஏற்றுமதியாளர்களுக்கு வழ ங்க தீர்மானக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான இலவச மான கண்காட்சிக் கூடங்களைப் பெற விரும்பும் பொருத்தமான ஏற்று மதியாளர்கள் 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணி கர் கழகப் பணிமனையில் விண் ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண் ணப்பப்படி வங்கள் 07.12.2016 ஆம் திகதிக்கு முன் அனுப்பப் படல் வேண்டும்.

எனவே யாழ்ப்பாணத் தில் உற்பத்தியாகும் பொருட் களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள் இவ் வரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொ ள்ளுமாறு யாழ்.வணிகர் கழ கம் அறிவித்துள்ளது. (இ-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி நடராசா இலட்சுமி



திதி: சதுர்த்தி

ஆண்டு ஒன்று ஓடி
மறைந்து விட்டாலும்
எங்கள் இதயம்
என்றும் நிறைந்து நிற்கும்.
என்னைப் பெற்ற தாயே
உங்கள் நினைவுடனேயே
வாழ்ந்து வருகின்றோம்.
நீங்கள் எல்லாம்வல்ல
இறைவன் திருவடியில்
இளைப்பாறுகிறீர்கள்
என்ற மனத்துடன்
வாழ்கின்றோம்.
நீங்கள் எங்கு
இருந்தாலும் எங்களை
ஆசீர்வதித்திடுங்கள்
அம்மா...

பிரிவால் துயருறும் மகன்
ந.பாலச்சந்திரன்
குடும்பம்.

295/48, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(674-3)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி பரராஜசிங்கம் மகேஸ்வரி



தோற்றம்
07.10.1923

மறைவு
26.11.2016

இல.132/1, 4 ஆம் கட்டை, முரசுமோட்டை, பரந்தனை நிரந்தர வதிவிடமாகவும் இல.123/2, நாகபூஷணி அம்மன் கோவிலடி, ஆலடி வீதி, தோணிக்கல், வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் திருமதி பரராஜசிங்கம் மகேஸ்வரி** அவர்கள்

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளின் பராமரிப்பு, கல்வி வளர்ச்சிக்காக ஆரம்ப காலம்தொட்டு தன்னுடைய முழு ஈடுபாட்டினையும் காட்டி அயராது உழைத்து வருபவரும் எமது சிறுவர் இல்லத்தினுடைய அவுஸ்திரேலியா கிளை தலைவருமாகிய திரு.ப.நவநீதராஜா அவர்களின் பாசமிகு தாயாரின் இவ்வுலக மறைவானது அவரது குடும்பத்தாருக்கு மட்டுமன்றி எமக்கும் எமது இல்லக் குழந்தைகளுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பே.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகைவிட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பலகடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலைமாறிப் போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பு இணைந்தது
எனினும் உங்கள் இழப்பை நெஞ்சம் ஏற்பதில்லை

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்- தி.இராசநாயகம், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி-6508)

## இராசி பலன்

30.11.2016
(கார்த்திகை 15, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
பிரதமை முன்னிரவு 7.58 மணிவரை
கேட்டை பின்னிரவு 2.54 மணிவரை
சுபநேரம் 4.44-6.14 மணிவரை
இராகுகாலம் 12.14-1.44 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | |
| செவ் | ரோகினி இரவு 2.52 மணிக்கு தனு-சந் | | ராகு |
| புத சுக் | சனி சூரி சந் | | குரு |

**மேடம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, வார்த்தைகளில் நிதானம் தேவை, விரயங்கள் கூடும்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத் தில் சுகங்களும் சந்தோசங் களும் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, வீட்டுப் பிரச்சினையைத் தீர்த் துக் கொள்வீர்கள், உற்சாகத் துடன் பணிபுரிவீர்கள், எடு த்த காரியங்களில் முன்னேற் றம் காண்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர் கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங் களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** வியாபார விருத்திக்கு வித்திடு வீர்கள், தாய்வழி உறவினர் களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மன தில் தோன்றும், உறவினர் வழியில் ஒத்தாசைகள் கிடை க்கும், பொருளாதார நிலை யில் முன்னேற்றம் காண்பீர் கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** புத்திசாதுரியமாகச் செயற் பட்டு காரியங்களை சாதிக் கும் நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், தொழில் வளர்ச்சியுண்டு, புதிய பாதை புலப்படும் நாள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப் பீர்கள், உறவினர் பகை அகலும், தொலைபேசி வழி யில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், மனதில் தேவை யற்ற சஞ்சலங்கள் ஏற்பட லாம், சுப செலவுகள் அதிக ரிக்கும், சயன சுகக் குறை வான நாள்.

**மகரம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவா கும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும்.

**கும்பம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**மீனம்:** பித்த சம்பந்தமான ரோக பய முண்டு, தடைகள் விலகி தன வரவுகள் கிடைக்கும், உடல் நலனில் அக்கறை காட்டுவீர் கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

# ஓய்வூதியர்களுக்கான புகையிரத ஆணைச்சீட்டுக்களை வழங்குதல்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர்களுக்கான புகையிரத ஆணைச்சீட்டுக்களை வழங்குதல் மற்றும் அவற்றுக்கான பயணச் சீட்டுக்களை வழங்கும் புதிய நடைமுறையொன்று நாளை முதலாம் திகதி தொடக்கம் புகையிரதத் திணைக்களத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சியொன்றின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி பதிவு செய்துள்ள ஓய்வூதியர்களுக்கான சாதாரண புகையிரத ஆணைச்சீட்டு வழங்கல்கள் இணைய வழி முறைமையின் ஊடாகவே மேற்கொள்ளப்படும். பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் ஆணைச்சீட்டுக்குரிய பயணச் சீட்டுக்கள் புகையிரத நிலைய அதிபர்களால் முன்னையவாறே மேற்கொள்ளப்படும்.

எனினும் பிரதேச செயலகங்களில் பதிவு செய்துள்ள ஓய்வூதியர்கள் மீண்டும் பிரதேச செயலகங்களுக்கு வருகை தராது பின்வரும் புகையிரத நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று ஓய்வூதிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை சமர்ப்பிப்பதன் மூலம் புகையிரதப் பயணச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களை கொழும்பு கோட்டை புகையிரத நிலையம்-011-243 2908

கண்டி புகையிரத நிலையம்- 081-222 2271

பதுளை புகையிரத நிலையம்-055-222 2271

அநுராதபுரம் புகையிரத நிலையம்-025-222 2271

வவுனியா புகையிரத நிலையம்-024-222 2271

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம்-021-222 2271 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

மேலும் பதிவு செய்துள்ள ஓய்வூதியர்கள் நேரடியாக பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள இயலும். மேற்படி புகையிரத நிலையங்கள், புகையிரதத் திணைக்களத்தின் கட்டளைப்படி எதிர்காலத்தில் விஸ்தரிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான மாற்றங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தால் பிரதேச செயலகங்களுக்கு உடனடியாக அறிவிக்கப்படும்.

அதுமட்டுமன்றி புகையிரத ஆணைச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பதிவு செய்துள்ள ஓய்வூதியர்கள் மீளவும் பிரதேச செயலகங்களுக்கு வருகை தராது வீட்டில் இருந்தவாறே மொபிட்டெல் தொலைபேசி இலக்கம் 365 இனை அழைத்து தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும் தமது புகையிரத ஆணைச்சீட்டுக்கான பயணச் சீட்டுக்களை நேரடியாகவே ஒதுக்கிக் கொள்ள முடியும்.

(இதற்கானதோர் தொலைபேசி அழைப்புக் கட்டணம் தொலைபேசிக் கொடுப்பனவுப் பட்டியலுடன் அறவிடப்படும்)

மேலும் ஓய்வூதியரில் தங்கி வாழும் விவாகமாகாத தொழிலற்ற பிள்ளைகளுக்கு வயதெல்லை அல்லது பாலினைக் கருத்தில் கொள்ளாது புகையிரத ஆணைச்சீட்டுக்களை வழங்க முடியும். எனினும் பிள்ளைகள் ஓய்வூதியரில் தங்கி வாழ்வதனை உறுதிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் குறித்த கிராம அலுவலரின் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் பிரதேச செயலாளர் திருப்தியடையும் பட்சத்தில் மட்டுமே ஆணைச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள சிபார்சு செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சேவையினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு முதலில் ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியங்களைப் பெற்றுக் கொள்ளும் பிரதேச செயலகங்களூடாக ஒருமுறை மட்டும் இணையவழி முறையில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்காக சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் PD7 மாதிரிப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களின் அறிவுறுத்தலுக்கமைய நேரடியாகவோ அன்றி கிராம அலுவலர் ஊடாகவோ குறித்த பிரதேச செயலகங்களுக்கு காலதாமதமின்றி அனுப்பி வைக்க வேண்டும் எனவும் யாழ்.மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)




## கழிவு வாய்க்காலுக்குள் காணாமற்போகும் பாதை





யாழ்ப்பாணம் சுண்டிக்குளி தெற்கு 75 கிராம சேவையாளர் பிரிவுக்குள் அடங்கும் குருசோ வீதியில் அமைந்துள்ள கழிவு வாய்க்கால் 04 வருடங்களுக்கு முன் வெள்ள அனர்த்தம் காரணமாக இடிந்து விழுந்தது. இது யாழ். மாநகர சபைக்குச் சொந்தமாக இருப்பதால் தகவல் உடனே அறிவிக்கப்பட்டது. எனினும் இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மதிலும் விழுந்து அத்திபாரமும் வாய்க்காலுக்குள் அமிழ்ந்து விட்டது.

வருடத்திற்கு ஒரு தடவை வரும் சுத்திகரிப்பு மேற்பார்வை உத்தியோகத்தர்களிடம் மீண்டும் மீண்டும் இப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது. டெங்கு ஒழிப்பு உத்தியோகத்தர்களிடம் கூட பல தடவை இப்பகுதி மக்களால் இப் பிரச்சினை கூறப்பட்டது. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வாய்க்கால்கள் திருத்தி அத்திபாரம் இட்டு அடித்தளம் செப்பனிடும் வேலை நடைபெறும் போதும் இவ் விடயம் பற்றி கூறப்பட்டது.

இவ் வாய்க்கால் யாழ். பிரதான வீதிக்கு அப்பால் தொடங்கி பிரதான வீதி, குருசோ வீதி ,மத்தியூஸ் வீதி , சொலமன் வீதி, திருநகர், கடற்கரைவீதிவழியாகஇறுதியில்குருநகர் கடலுடன் கலக்கிறது.

குருசோ வீதியில் இருந்து கடற்கரை வரையுள்ள பகுதி அடித்தளம் சீமெந்து இட்டு பாதுகாப்பான அத்திபாரம் ஒரு முழுமையான கழிவு வாய்க்காலாக உள்ளது. ஆனால் திருத்தப்பட்ட இப் பகுதி உயரமாக இருப்பதால் பிரதான வீதியில் இருந்து குருசோ வீதி வரையான அடித்தளம் சீமெந்து தளம் இடப் படாத தார் நிலப் பகுதியாக இருப்பதால் 365 நாளும் கழிவு நீர் தேங்கி நிற்கும் இடமாக மாறிவிட்டது.

கடந்தமாத தேசிய டெங்கு ஒழிப்புக்கு வருகை தந்த வைத்திய அதிகாரி , சுகாதாரப் பணியாளர்கள், பொலிஸார் ஆகியோர்களுக்கு இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. சிரட்டைக்குள், மூடிக்குள் நீர் தேங்கி நின்றால் குற்றமாக கருதப்படும்சூழலில் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக இப் பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி பற்றியும் கூறப்பட்டது. ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இரு வாரங்களுக்கு முன் கனரக இயந்திரம் (பெக்கோ) மூலமாக கழிவுகள் அகற்றப்பட்டன. ஏற்கனவே அத்திபாரம் பாதிப்படைந்த இப் பகுதிக்குள் அவ் வியந்திரம் வந்து சென்ற சில நாட்களின் பின் முழு அத்திபாரமும் வாய்க்காலுக்குள் வீழ்ந்து விட்டது என அப்பகுதி மக்கள் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அன்பே சிவம் அமைப்பால் மரக்கன்றுகள் விநியோகம்




(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தை முன் னிட்டு அன்பே சிவம் அமைப்பு மரக்கன்று களை வழங்கி வருகிறது. இதன் ஒரு கட்டமாக, நேற்று செவ்வாய்க்கிழமை இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலயத்தில் தென்னந் தோட்டம் ஒன்றை அமைப்பதற் காக 100 தென்னங்கன்றுகள் வழங்கி வைகக்கப்பட்டுள்ளன.

அன்பே சிவம் அமைப்பு சுவிட்சர்லாந்தில் சூரிச் சிவன் ஆலயத்தின் நிதியூட்டலில் இயங்கிவரும் ஒரு சமூகத் தொண்டு நிறுவனம் ஆகும். இவ்வமைப்பு இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. அத்தோடு, ஆண்டு தோறும் வடமாகாண மரநடுகை மாதக் காலப் பகுதியில் மரநடுகையிலும் ஈடுபட்டு வருகின்றது.


இளவாலை திருக்குடும் பக் கன்னியர்மட மகா வித்தியாலயம் அண்மையில் கொள்வனவு செய்துள்ள தனது காணியில் தென்னந் தோட்டம் அமைப்பதற்குத் தேவையான தென்னங்கன்றுகளை வழங்கி வைக்குமாறு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கர நேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அதன் அடிப்படையிலேயே அன்பே சிவம் அமைப்பு இப்பாடசாலைக்கு நூறு நல்லின தென்னங்கன்றுகளை வழங்கி வைத்துள்ளது.

தென்னங்கன்றுகளை வழங்கி வைக்கும் இந்நிகழ்ச்சியில் வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கர நேசன் மற்றும் அன்பே சிவம் நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் அ.அருளானந்தசோதி ஆகியோர் கலந்து கொண்டு தென்னங் கன்றுகளை வழங்கினர். (இ-10)

## புனருத்தாரண அபிஷேகமும் மூல விக்கிரக பிரதிஷ்டையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு வழியிற் பிள்ளையார் கோவில் புனருத்தாரண அபிஷேகமும் மூல விக்கிரக பிரதிஷ்டையும் நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.05 முதல் பிற்பகல் 12.30மணிவரைக்குள் இடம்பெறும். காலை 7 மணி தொடக்கம் 9மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ-3)




## யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியர் வட்ட ஒன்றுகூடல்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியர் வட்டத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் பிரிவுபசார விழாவும் இன்று புதன்கிழமை ஆசிரியர்வட்டத்தலைவர் எஸ்.சுகீரதன் தலைமையில் கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழவில் பிரதம விருந்தினராக கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் கலந்து கொள் வார்.

இந் நிகழ்வில் இடமாற்றம் பெற்ற , பதவி உயர்வு பெற்றுச்சென்ற மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப் படவுள்ளனர். மேலும் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-7-10)

## சைவப் புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் மாதாந்த விசேட செயற்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி செயற்குழுக் கூட்டத்தில் சைவப்புலவர் , இளஞ் சைவப்புலவர் பட்டமளிப்பு விழா , சைவமாநாடு நடத்துதல், சைவநாதம் நூல் வெளியீடு மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதனால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க உப செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி. குமரன அறிவுறுத்தியுள்ளார். (இ-10)

## வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வும்

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வும் எதிர்வரும் 3, 4 ஆம் திகதிகளில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் மாலை 4மணி வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, அமைச்சின்செயலாளர்இ.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

## Amendment to Invitation for Bids

Bid No 1: Design,Construction and Commissioning of Two Storied Building,Services and Related Structures for the Department of Information and Communication Technology,Faculty of Applied Science,Vavuniya Campus.
Bid No 2:Design,Construction and Commissioning of Staff Quarters for Faculty of Engineering,University of Jaffna at Ariviyalnagar,Killinochi

1.This refers to the above procurement notice published on 24.11.2016 in Valampurii ,Thinakural and 25.11.2016 in Daily News.
2.The 9th clause of the above notice to be Corrected as "Pre Bid meeting Will be held in the Board Room of the Faculty of Agriculture,Ariviyal Nagar,Killinochi at 14.00hrs on 8th December,2016 for bid No.2 and in the Board room, Vavuniya Campus at14.00hrs on the 9th December ,2016 for the bid No.1"
3.All other terms and conditions given in the previous advertisement remain unchanged.

**Vice Chanceller,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna**
**28.11.2016**

(C-6514)

# மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு இன்று

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் மாணவர் பாராளுமன்றத்திற்கான கன்னியமர்வு இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் திருமதி.சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்விப் பணிப்பாளர் நாகலிங்கம் சிவநேசன், கௌரவ விருந்தினராக கோப்பாய் அரச வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர் திருமதி. ஜெயரேகா சசிகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


யாரிடம் பேசுவது ?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

*யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.*

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

**(021) 222 8117 / 077 900 8776**
(தினமும் காலை 9.00-1.00)

**வவுனியாவில்** (024) 324 4444
சனி, ஞாயிறு காலை 9.00—1.00

*(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*
*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*


# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,கரவெட்டி
# மீள் கேள்வி அறிவித்தல்-2017

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான மீள் கேள்விகள் 04/11/2016 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதி திகதி :-15/12/2016 பி.ப. 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :-16/12/2016 காலை 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :-16/12/2016 காலை 10.30 மணி

மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ.இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 01 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 84900.00 | 900.00 | 500.00 | - |
| 02 | கொட்டடிச்சந்தை | 5370.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 03 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 822420.00 | 8300.00 | 500.00 | 100.00 |
| 04 | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 394915.00 | 4000.00 | 500.00 | 100.00 |
| 05 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 63460.00 | 700.00 | 500.00 | 100.00 |
| 06 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 261780.00 | 2650.00 | 500.00 | 100.00 |
| 07 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 479000.00 | 5050.00 | 500.00 | 100.00 |
| 08 | நெல்லியடி மீன் சந்தை | 700680.00 | 7100.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 09 | உடுப்பிட்டி சந்தை | 889450.00 | 8900.00 | 500.00 | - |
| 10 | உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 550720.00 | 5600.00 | 500.00 | 100.00 |
| 11 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 257070.00 | 2600.00 | 500.00 | 100.00 |
| 12 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 730740.00 | 7400.00 | 500.00 | 100.00 |
| 13 | சாண்டா சந்தை கோழிக்கடை | 69000.00 | 700.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | - |
| 14 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 42200.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 15 | துன்னாலை வடக்குச் சந்தை | 34650.00 | 500.00 | 500.00 | - |

அ.வினோராஜ்
செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
30/11/2016

(C-6513)

# காஸ்ட்ரோவின் அஞ்சலிக்கூட்டம்

உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப்போராளிதோழர் பிடல் காஸ்ட்ரோவின் அஞ்சலிக்கூட்டம்எதிர் வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.பொது நூலக உணவக மண்டபத்தில் தோழர் கோ.தேவராஜா தலைமையில் இடம் பெறும். (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983RC<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6544 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 9செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/6542 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 40<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/6548 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 18செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/6545 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/6549 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27செவ் 8 இல<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BBA<br>தொ.இ: G/6546 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 56<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: B/6553 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/6547 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
அலுவலக நேரம் காலை 9.00-5.00 மணிவரை
ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினமாகும்



அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber

# முறிகண்டியில் கோரவிபத்து பதினேழு பேர் படுகாயம்



(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 17 பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் கவலைக்கிடமான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதன்போது மினிபஸ்ஸின் முன்பகுதி பலத்த சேதமடைந்தது. இச்சம்பவம் நேற்று காலை 7 மணியளவில் கிளிநொச்சி அறிவியல் நகர்ப்பகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

அக்கரைப்பற்றில்இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தைக் கோட்டைகட்டிய குளம் கிராமத்திலிருந்து பிதிர்க் கடன் நிறைவேற்றுவதற்காக யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் நோக்கி சென்று கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான மினிபஸ் அறிவியல் நகர் பகுதியில் 246 மைல் கல் பகுதியில் வைத்து முந்திச் செல்ல முற்பட்ட வேளை இக் கோர விபத்து நேர்ந்துள்ளது.

குறித்த விபத்தில் தனியார் மினி பஸ்சில் பயணித்துக் கொண்டிருந்த ஆண்கள் பத்துப் பேரும் பெண்கள் நான்கு பேரும் படுகாயம் அடைந்தனர்.

சம்பவம் அறிந்த மாங்குளம் பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் தடைப்பட்ட ஏ-9 வீதி போக்குவரத்தையும் சீர்படுத்தினர். அத்து டன் விபத்துக்குள்ளான வாகனங்களை மாங்குளம் பொலிஸ் நிலையம் கொண்டு சேர்த்தனர்.

மாங்குளம் பொலிஸாரினால் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. (2-15-312)




# ஒத்திகைப் பயிற்சியே குழப்பம் வேண்டாம்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையுடன் இணைந்து எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை தண்ணீரூற்று சந்திப்பகுதியில் விபத்துக்கான விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும் நடைபெறவுள்ளது.

இது பாரியளவிலான விபத்தின் போது வைத்தியசாலை முன்னாயத்தம் மற்றும் அதன் பதிலுறுத்தல் செயற்பாடு தொடர்பான முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைய மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பலகு மற்றும் அனைத்து பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது.

இது ஒரு ஒத்திகைச் செயற்பாடென்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார். (2)

# கட்டாக்காலி மாடுகள் அடைக்கப்படாமையினால் காலபோக நெற்செய்கை அழிக்கப்படுகின்றது



கட்டாக்காலி மாடுகள் பொதுச் சந்தை, பிரதான வீதிகள் ஆகியவற்றில் இரவுவேளைகளில் நடமாடுவதால் பாதசாரிகளுக்கும் சந்தை உரிமையாளர்களுக்கும் இடையூறாகவுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது காலபோக நெற்செய்கை, சிறுதானிய செய்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் உரிய நேரத்தில் கால்நடைகளை இரவு வேளைகளில் அடைக்கப்படாத நிலையில் பிரதான வீதியோரங்களிலும் பொதுச்சந்தை வளாகத்திலும் விவசாய செய்கைகளுக்குள்ளேயும் இரவு வேளைகளில கட்டாக்காலி மாடுகள் நடமாடுவதால் பயிர்ச்செய்கை அழிக்கப்படுவதாகவும் பொதுச் சநதைக்கட்டடம் சுகாதார மற்ற நிலையல் காணப்படுவதாகவும் வீதிகளில போக்குவரத்திற்கு இடையூறாகவும் இருப்பதாக பாதிக்கப்பட்டவர்களால் குற்றம் சாட்டப்படுகின்றது. வவுனியா வடக்கு பிரதேச சபையால் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# யுத்தத்தில் பலவற்றை இழந்துள்ளோம் நடக்கக் கூடாதவை நடந்தேறிவிட்டது

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

நாங்கள் முப்பதாண்டுகள் நடைபெற்று முடிந்த யுத்தத்தில் பல விடயங்களை இழந்துள்ளோம். உயிர்கள், உடைமைகள் மட்டுமலல எங்களது சமுதாயத்திலே நாங்கள் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை, இழந்தவர்களாக இருக்கிறோம். பல விடயங்கள் இந்த நாட்டில் நடக்கக் கூடாது நடந்துவிட்டது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கல்மடு பகுதியில் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரதேசம் ஒரு முக்கியமான பிரதேசம். நீண்ட நாட்களாக இந்த மண்ணிலே இடம்பெற்ற போராட்டத்தில் பல மாவீரர்களை ஈன்ற புனிதமான மண். இந்தப் பிரதேசத்திலே விடுதலைப் புலிகளில் மாத்திரமில்லை பெருந்தொகையான இளைஞர்கள் போராட்ட காலங்களில் பல விடுதலை அமைப்புக்களில் இணைந்து தமது இன்னுயிர்களை ஈகம் செய்துள்ளார்கள். போராட்டத்திலே தங்களது உயிரை தியாகம் செய்த நவம்பர் 27 மாவீரர்களுடைய நாள். அந்த நாளில் பல ஆண்டுகளுக்கு பிறகு இராணுவ கட்டுப்பாட்டில் முன்னர் செய்யாத பல விடயங்கள் நடைபெற்றன.

எங்களுடைய மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பின்னர் அடித்து உடைக்கப்பட்டு அங்கு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு இறந்த பின்னர் கூட அவர்களுக்குரிய மரியாதை கொடுக்கப்படாமல் அவை நொருக்கப்பட்டன.

தற்போதைய நிலையில் இந்த நாட்டில் நல்லதொரு நிர்வாகம், ஆட்சி இடம்பெற வேண்டும் என இரு தரப்பினரும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இரண்டு பக்கத்தில் இருந்தும் இந்த விடயங்களை குழப்பும்முயற்சியில் சிலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் முப்பதாண்டுகள் யுத்தத்தில் பல விடயங்களை இழந்து நிற்கின்றோம். உயிர்கள், உடைமைகள் மாத்திரம் அல்ல எங் களது சமுதாயத்திலே நாங்கள் கல்லை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை இழந்தவர்களாக இருக்கின்றோம். பல விடயங்கள் இந்த நாட்டிலே நடக்கக்கூடாது நடந்து விட்டது.

ஆகவே இவை மீண்டும் நடைபெறாமல் இருக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் எங்களை ஆழக்கூடிய இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்து இனங்களும் சமாதானமானவர்களாக வாழக் கூடிய வகையில் அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்றம் ஒரு அரசியல் யாப்பு உருவாக்கும் சபையாக மாற்றம் பெற்றிருக்கின்றது. அவற்றில் ஆறு உபகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு உபகுழுக்களும் இந்த ஆலோசனை சபைக்கு தங்களுடைய அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளார்கள்.

அது பாராளுமன்றத்தின் இணையத்தளத்தில் மூன்று மொழிகளிலும் இருக்கின்றது. எவரும் அதை வாசித்து பார்க்கலாம். பல முன்னுதாரணமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து டிசெம்பர் மாதம 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பான இடைக்கால அறிக்கை வரவிருக்கின்றது.

இவற்றையெல்லாம் வாசிக்காமல் இவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் சிலர் இருக்கிறார்கள். இந்த நாட்டிலே வாழுகின்ற சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளினுடைய எண்ணங்கள் பிரதிபலிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கை இதுவரை வந்த அறிக்கைகளை விட ஒரு முன்னேற்றகரமான அறிக்கையாக இருக்கின்றது.

நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் வராமல் நாம் சமமமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்துவதற்கு நாம் நிச்சயமாக சேர்ந்து உழைக்க வேண்டும். நாங்கள் உண்மையாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (2-250)

# நாகதம்பிரானுக்கு கும்பாபிஷேகம்

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நாகதம்பிரானுக்கு கும் பாபிஷேகம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வெள் ளிக்கிழமை மாலை கர்மாரம்பம் நடைபெற்று இரவு ஸ்தூபி நாகதம்பிரான் பிரதிஷ்டை நடைபெறும்.

எனவே மறுநாள் சனிக்கிழமை அடியவர்கள் காலை தொடக்கம் மாலை வரை தமது கைகளினால் நாகதம்பிரானுக்கு பாலாபிஷேகம் செய்ய முடியும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மூலவர் அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து நாகதம்பிரானுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்று விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

எனவே அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு எம்பிரானின் பேரருளை பெற்றுக் கொள்ளுமாறு ஒட்டுசுட்டான் ஆலய இறைபணி செம்மல்கள் முகாமைத்துவ சபையினரும் உபயகாரரும் கேட்டுள்ளனர். (2-15)

## 3 கோடி 35 இலட்சம் ரூபா நிதி

# 2 ஆயிரத்து 164 விவசாயிகளுக்கு உரமானியக் கொடுப்பனவாக பகிர்ந்தளிப்பு

### துணுக்காய் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட சிறு குளங்களின் குளக் காணிகளின் கீழும் மற்றும் வவுனிக்குள நீர்ப்பாசனத்திணைக்களத்திற்குட்பட்டதும் துணுக்காய் கமநல சேவை நிலையப்பிரிவிற்குள் உள்ளடங்குவதுமான பெரிய நீர்ப்பாசனக்குளங்களிலும் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையானது மானாவாரியாகவும் குளக்காணிகளின் கீழும் 2 ஆயிரத்து 164 விவசாயிகள் 6 ஆயிரத்து 707 ஏக்கரில் நெற்செய்கை மேற் கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 3 கோடி 35 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக துணுக்காய் கமநலசேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

உரமானியக் கொடுப்பனவிற்கான விண்ணப்பங்கள் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டு அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் விபரப்பட்டியல் தயாரிக்கப்பட்டு உரமானியக் கொடுப்பனவிற்காக அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இம்முறை ஏக்கர் ஒன்றிற்கு 5 ஆயிரம் ரூபா வீதம் விவசாயி ஒருவருக்கு ஆகக் கூடியது 5 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா நிதி உரமானியக் கொடுப்பனவாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய துணுக்காய் கமநல சேவை நிலையப் பிரிவிலுள்ள ஆயிரத்து 340 விவசாயிகளுக்கு இலங்கை வங்கியூடாக 4 ஆயிரத்து 114 .75 ஏக்கருக்கு 2 கோடி 5 இலட்சத்து 73 ஆயிரத்து 750 ரூபாவும் மக்கள் வங்கியூடாக 820 விவசாயிகளின் 2 ஆயிரத்து 576.25 ஏக்கருக்கு ஒருகோடி 28 இலட்சத்து 81 ஆயிரத்து 250 ரூபாவும் தேசிய சேமிப்பு வங்கியூடாக 4 விவசாயிகளின் 15 ஏக்கருக்கு 75 ஆயிரம் ரூபா நிதியும் உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளின் வங்கிக் கணக்கு ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதேவேளை சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள 3 விவசாயிகளின்1.75 ஏக்கருக்கு7 ஆயிரம் ரூபா நிதி இலங்கை வங்கியூடாக அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்டவர்கள்மீது மதுபோதையில் வந்தவர்களால் தாக்குதல்

### புனரமைப்பு வேலை இடைநிறுத்தம்



(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலிநகர் கிராமத்திலுள்ள மு/பாலிநகர் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக செல்லும் 1.400 மீற்றர் வீதியின் புனரமைப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது சில விசமிகள் மது போதையில் வீதி வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள், ஒப்பந்தக்காரர் ஆகியோருடன் முரண்பட்ட நிலையில் அவர்களைத் தாக்கியதன் காரணமாக வீதிப் புனரமைப்புப் பணிகள் இடை நிறுத்தப்பட்டன.

இச் சம்பவம் கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வடக்கு மாகாண சபையின் 50 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குச் செல்லும் பிரதான வீதியின் தொடக்கமாகவுள்ள 1.400 மீற்றர் வீதிக்கு கல்லிட்டு தார் ஊற்றும் பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இந்நிலையில் மது போதையில் அவ்விடத்திற்கு வந்த 15 இற்கும் மேற்பட்ட விசமிகள் வீதி வேலை நடைபெறுவதாக போடப்பட்டிருந்த சமிக்ஞைகளை பிடுங்கி எறிந்ததுடன் தார் ஊற்றப்பட்டுக் கொண்டிருந்த வீதியூடாக மோட்டார் சைக்கிள்களில் செல்ல முற்பட்ட போது வீதிப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் அவர்களை தடுத்தனர். இதனை அடுத்து பணியாளர்களுடன் முரண்பட்ட நிலையில் அவ்விடத்திற்கு வந்த ஒப்பந்தகாரருடனும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் பணியாளர்கள், ஒப்பந்தகாரரையும் மது போதையில் இருந்தவர்கள் தாக்கினர்.

இதனையடுத்து வீதி புனரமைப்புப் பணி இடை நிறுத்தப்பட்டதுடன் மல்லாவி பொலிஸ் நிலையத்திலும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரிடத்திலும் தாக்குதலுக்குள்ளானவர்கள் முறைப்பாடு செய்தனர்.

மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் வீதிப் புனரமைப்புப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு செல்லும் பிரதான வீதியான இப்பாதை வழியூடாக 13 கிராமங்களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (2-15)

## சமுர்த்தி பயனாளிகளுக்கான

# வீடமைப்பு அதிர்ஷ்ட குலுக்கல் போட்டியில் இருவர் தெரிவு

### கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அறிவிப்பு

(மல்லாவி)

சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்பு அமைச்சினால் சமுர்த்தி பயனாளிகளுக்கிடையில் நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்டு வரும் வீடமைப்பு அதிர்ஷ்ட பரிசுப் போட்டியில் கடந்த செப்டெம்பர் மாதம் நடத்தப்பட்ட போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் இருந்து இரண்டு சமுர்த்திப் பயனாளிகள் வெற்றியீட்டியுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களுக்கு இடையில் மாதம்தோறும் நடத்தப்பட்டு வரும் வீடமைப்பு அதிர்ஷ்ட குலுக்கல் போட்டியில் செப்டெம்பர் மாதத்திற்கான குலுக்கலில் யாழ். மாவட்டத்தில் ஏழு பேரும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு தலா இரண்டு பேர் வீதம் எட்டுப்பேருமாக மொத்தம் 15 பேர் வடபகுதி சமுர்த்திப் பயனாளிகளில் இருந்து வெற்றி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளான டி.சுமதி (366719), கே.பாலசரஸ்வதி (185066) ஆகிய இருவரும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வீடமைப்பு பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் இப் பரிசிலின் ஊடாக வீடு அமைத்தல் அல்லது காணி ஒன்றை கொள்வனவு செய்தல் அல்லது வாழ்வாதாரத்திற்கான தொழில் முயற்சியொன்றை ஆரம்பித்தல் அல்லது உயர்தரத்தில் கல்வி பயிலும் தமது பிள்ளைகளுக்கான கல்விக்குச் செலவிடுதல் போன்றவற்றில் ஏதாவது ஒன்றை மேற்கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (2-15)




## அக்கராயனில் மேய்ச்சல் தரவைகள் இன்றி கால்நடை வளர்ப்போர் அவதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயனில் மேய்ச்சல் தரவைகள் இன்மையால், கால்நடை வளர்ப்பாளர்கள், தங்களது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அக்கராயன்குளத்தின் கீழ், 4 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிலையில் அக்கராயன்குளத்தின் கீழ் 5 ஆயிரம் வரையான கால்நடைகள் உள்ளன.

இவற்றுக்கான மேய்ச்சல் தரவையொன்றை உருவாக்கித் தருமாறு, கடந்த காலங்களில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று, கால்நடை வளர்ப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னைய காலங்களில் காணப்பட்ட மேய்ச்சல் தரவைகள், உவர் நிலமானதும் குடியிருப்புகள் அமைக்கப்பட்டதும், தற்போது மேய்ச்சல் தரவைகளுக்கான புதிய நிலங்கள் இனங்காணப்படாமையும் இந்த நெருக்கடிக்கு காரணமாகவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## இலவச சைவநெறி செயலட்டை வழங்கல்

(வவுனியா)

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் சைவ அறிவை மேம்படுத்தும் நோக்கில் இலவசமாக சைவநெறிப் பாடச் செயலட்டை ஒன்றை தரம் 6 வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

எனவே இச்செயலட்டையைப் பெற விரும்பும் அறநெறிப் பாடசாலைகள் 077 069 1582 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும் என சேக்கிழார் மன்ற செயலாளர் க.ஆனந்தகணேஸ் தெரிவித்துள்ளார். (2)

# இலங்கையின் முப்படைத் தளபதிகளுடன் அமெரிக்க பசுபிக் கட்டளைத் தளபதி பேச்சு










(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தளபதி அட்மிரல் ஹறிஹறிஸ், நேற்று முன் தினம் இலங்கையின் முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

கொழும்பில் நேற்று முன் தினம் ஆரம்பமாகிய காலி கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக, அட்மிரல் ஹறிஹறிஸ் இலங்கைக்கு வந்துள்ளார்.

அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

நேற்று முன்தினம் கோல்பேஸ் விடுதியில் ஆரம்பமாகிய காலி கலந்துரையாடலில் பங்குபற்றிய அட்மிரல் ஹறி ஹறிஸ், இலங்கையின் முப்படைத் தளபதிகளுடன் தனித்தனியாக பேச்சுக்களை நடத்தினார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜெயம்பதி ஆகியோருடன் அமெரிக்கத் தளபதி இந்தப் பேச்சுக்களை நடத்தினார்.

இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக் கொள்வது மற்றும் பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்புகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. (இ-7-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## புளி

**Botanical Name** - Tamarindus indica
**Family Name** - Caesalpinaceae
**English Name** - Tamarind tree
**Sinhala Name** - Siyambala

சுமாரானது முதல் பெரிய அளவுடைய பசுமைமாறா மரம். 25 மீற்றர் வரை உயரமும் 7 மீற்றர் வரை அகலமுடையது . பட்டை நீள வாக்கிலும் குறுக்கு வாட்டிலும் பிளவுற்றது. அடர்ந்த சாம்பல் பழுப்பு நிறம் உடையது. மாற்றிலை அடுக்கம் கொண்டது. இரு சிற்றிலைகளில் முடியும் . சிறகு கூட்டிலைகள் 15 செ.மீ நீளமுடையவை. சிற்றிலைகள் 10-20 ஜோடிகள் சிறு காம்புகள்உடையது. நீள்உருளை வடிவம் உடையவை. 8-30 மீ.மீ×5-10மி.மீ மலர்கள் தளர்ந்த சில மலர்கள் கொண்ட ரெசீம்களாக உள்ளன. மலர்கள் சிறியவை. மஞ்சள் நிறம் கொண்டு இளஞ்சிவப்பு கோடுகள் கொண்டவை. வெடிகனிகள் தட்டையானவை. தலைகீழ் முட்டை வடிவம் கொண்டவை. 7.5-20 செ.மீ நீளம், 2-2.5 செ.மீ அகலம் உடையவை. விதைகள் தட்டையானது பளபளப்பானது.

### பரம்பலும் இன விருத்தியும்

யாழ்.மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் இதன் பரம்பலை அவதானிக்கலாம். விதைகள் மூலம் இன விருத்தியடையும்.

### மருத்துவப் பண்புகள்

❖ புளியந்துளிர்பருப்புடன் சேர்த்து கடைந்து உண்ணலாம். இதை துவையல் செய்தும் கூட்டு செய்தும் பயன்படுத்தலாம். பித்த வாந்தி, குமட்டல் தணியும்.

❖ இலையை நசுக்கி நீர் விட்டு கொதிக்க வைத்து வீக்கங்களின் மீது பற்றிட வலி தணியும்.

❖ புளியமிலை,வேப்பமிலை ஆகியவற்றை சம எடை எடுத்து 8 பங்கு நீர் சேர்த்து காய்ச்சி அத் தண்ணீரை கொண்டு புண்களை கழுவி வர ஆறாத புண் ஆறும்.

❖ புளி இலைகளை எடுத்து அதனுடன் தேவையானளவு வேப்பெண்ணெய் விட்டு நன்றாக இறுக்கிக் கட்டினால் வீக்கம் தணியும்.

❖ புளியம் பூவுடன் காரம், உப்புச் சேர்த்து துவையல் செய்து உண்ண நீர்க்கடுப்பு, மூலச்சூடு தணியும் . பூவைச் சிறிது நெய் விட்டு வதக்கி துவையல் செய்துண்ண பித்த நோய், சுவையின்மை நீங்கும்.

❖ புளியம் இலையில் இளம் கொழுந்துகளை புதினா, வல்லாரை , கொத்தமல்லி, கறிவேப்பிலை இவற்றுடன் சிறிதளவு தேங்காயும் சேர்த்து சட்னி செய்யலாம். இதனால் உயிர்ச் சத்துக்கள் உடலிற்கு கிடைக்கும்.

❖ நரம்புவலிகுணமாகபுளியிலைகளை எடுத்து சட்டியில் போட்டு அது நனையும் அளவுக்கு தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து நன்றாக கொதிக்க வைக்க வேண்டும்.

❖ ஜலதோசம் குணமாக புளி யம் பூவை சேகரித்து ஒரு கைப்பிடி அளவு பூவை ஒரு சட்டியில் போட்டு 1 1/2 டம்ளர் நீர்விட்டு ஒரு டம்ளர் சுண்ட வைத்து இறக்கிவடிகட்டிவேளைக்கு 1/2 டம்ளர் வீதம் காலை, மாலை 2 நாட்கள் கொடுக்க ஜலதோசம்குணமாகும்.

❖ கொதிநீர் , சூடான எண்ணெய் பட்ட புண் ஆற : புளிய மரத்தின் மேலுள்ள பழுப்பு நிறமான பட்டை கொண்டு வந்து உரலில் போட்டு இடித்து அரிதட்டில் அரித்து ஒரு கிண்ணத்தில்வைத்துக்கொள்ள வேண்டும்.புளியம் பட்டைத் தூளை புண்மேல் தூவி தேங்காய் எண்ணெயை எடுத்து பட்டைத் தூள் நனையும் அளவுக்கு மேலே விட வேண்டும். தேங்காய் எண்ணெயை பட்டைத் தூள் இழுத்துக் கொள்ளும். இதேபோலகாலை,மாலையாக தூளைப்பரவலாகபோட்டு எண்ணெயை விட வேண்டும். புண் நன்றாக ஆறும்.



குறிப்பு- புளியை உணவில் அதிகம் சேர்த்து வர நாளடைவில் வயிற்றில் அமிலத் தன்மை (Acidity) உண்டாகி ஜீரணநீரின்தன்மையைமாற்றி ஜீரண கோளாறு உண்டாகும். புளியேப்பம் , வாந்தி உண்டாகும். எனவே உணவில் அளவுடன் பயன்படுத்தவேண்டும்.

❖ புளியிலை,குப்பைமேனி 2 ஐயும் சம அளவு சேர்த்து அரைத்து சொறி, சிரங்கு , படை , நமைச்சல் போன்றவற்றுக்கு பூசிவர குணமாகும். 'காட்டில் கொல்லுவது புலி வீட்டில்கொல்லுவது புளி' என்ற பழமொழியின் கருத்தாவது புதிய புளிக்கு தான் கெடுதலை விளைவிக்கும் குணம் உண்டு. ஆனால் பழைய புளியை மிதமான அளவுடன் உணவில் சேர்க்கலாம். பழைய புளிக்கு வாத, பித்த , கப நோய்கள் நீங்கும்.

❖ பழம் புளியினால் தயாரிக்கப்படும் புளியஞ்சோறு/புளிக்காய்ச்சல்/புளியோதரை என்ற மருந்தே உணவு தயாரிப்பு முறையானது மிளகாயை எண்ணெயிலிட்டு நன்றாக வதக்கிக் கொண்டு அதில் உழுத்தம் பருப்பு , கடலைப் பருப்பு , கடுகு , கொத்தமல்லி விதை ,கறிவேப்பிலை , பெருங்காயம் முதலானவைகளை போட்டு அளவுடன் உப்பும், பழப்புளியும் நீரில் கரைத்து கொண்டு அத னுடன் கலந்து பக்குவமாய் காய்ச்சி எடுத்து எடுப்பது தான் இந்தப் புளிக்காய்ச்சல் பல நாள் கெடாமலிருக்கும். இது வாந்தி, குமட்டல், வாத, பித்த , கப அதிகரிப்பு நிலைகளில் குணப்படுத்த பயன்படும்.

❖ புளி, உப்பு இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து உள் நாக்கில் தடவி வரின் உள் நாக்கு வளர்ச்சி ( Ton cilitis) கரைந்துவிடும்.

❖ புளியங்கொட்டைத்தோலை காய வைத்து பொடியாக்கி தினமும் காலையில் சுண் டைக் காயளவு சாப்பிட்டால் பேதி, நீர்க்கடுப்பு,வெள்ளை படல் குணமாகும்.

❖ புளியிலை,மஞ்சள், மருதாணிஇலை மூன்றையும் சம அளவு எடுத்து சேர்த்து அரைத்து சேற்றுப் புண் மீது தடவ மூன்றுநாட்களில்புண் ஆறும்.

❖ புளி,பூண்டு , மிளகு, தக்காளி,கொத்த மல்லி சேர்த்த ரசம் சளி மற்றும் நுரையீரல் கோளாறு உடனே குண ப்படும். கொதித்த பின் இலையை மட்டும் எடுத்து துணியில் வைத்து ஒத்தடம் கொடுக்க குணமாகும்.

❖ தேள் கொட்டினால் அவ்விடத்திற்குபுளியம்பழத்தின் சதைப் பகுதியை எடுத்து சுண்ணாம்புடன் சேர்த்து கடிவாயிற்குப் பூசலாம்.

❖ ஆஸ்துமா நோயிற்கு புளி இலைகளை காம்புடன் ஆய்ந்து எடுத்து அதை சாதம் வடித்தவுடன் சூடாக இருக்கும் கஞ்சி நீரில் இந்த இலையை போட்டு அமிழ்த்திவிட வேண்டும். மறுநாள் காலையில் கஞ்சி நீரில் உள்ள புளியிலையை எடுத்து அம்மியில் வைத்து அரைத்து அதனுடன் சிற்றரத்தை இட்டு அரைத்து சாறெடுத்து 10-15 மில்லி அளவு 10 மில்லி தூய தேனுடன் கலந்து கொடுக்க ஆஸ்துமாநோயால் ஏற்படும் வெளிமூச்சு கஷ்டம் குறையும்.

❖ தாது விருத்தி உண்டாக புளியங்கொட்டைகளை சிவக்க வறுத்து உடைக்க வெண்ணிறப் பருப்பு வரும். அதை உரலில் இடித்து எடுத்து ஒரு தேக்கரண்டி அளவு ஒரு டம்ளர் காய்ச்சிய பசுப் பாலில் இட்டு அதனுடன் சிறிது கற்கண்டு சேர்த்து இரவில் அருந்த தாது விருத்தியாகும்.

❖ புளியம் கொழுந்தை எடுத்து பருப்புச் சேர்த்து கடைந்து சோற்றுடன் சாப்பிட உடல் பலம் பெறும்.




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

100 கிராம் புளியங்காய், புளியங்குருத்து, புளியம்பழத்திலுள்ள சத்துக்கள்.

| | புளியங்காய் | புளியங்குருத்து | புளியம்பழம் |
|---|---|---|---|
| ஈரலிப்பு(கிராம்) | 79.5 | 70.5 | 38.7 |
| புரதம் (கிராம்) | 2.4 | 5.8 | 2.3 |
| கொழுப்பு(கிராம்) | 0.1 | 2.1 | 0.2 |
| காபோவைதரேற்(கிராம்) | 17.2 | 18.2 | 56.7 |
| கல்சியம் (மி.கி) | 58 | 101 | 81 |
| பொஸ்பரஸ்(மி.கி) | 29 | 140 | 86 |
| இரும்பு (மி.கி) | 0.7 | 5.2 | 1.3 |
| கரோட்டின் (மைக்ரோ கிராம்) | 10 | 170 | 10 |
| தயமின் (மைக்ரோ கிராம்) | 150 | 240 | 220 |
| விற்றமின் சி (மி.கி) | 12 | 3 | 3 |
| ரைபோபிளேவின் (மை. கி) | 50 | 170 | 80 |
| நியாசின் (மை.கி) | 0.4 | 4.1 | 11 |

# பட்ஜெட் - 2017



# காங்கேசன்துறையிலிருந்து பொன்னாலை வரை புகையிரதப் பாதையை விஸ்தரிப்புச் செய்தல்

(தொடர்ச்சி)

246.சுமார் 6 பில்லியன் முதலீட்டுடனான மத்திய அதிவேகப் பாதையும் மற்றும் ருவன்புர அதிவேகப்பாதையும் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளதோடு, இம்முயற்சியானது குறிப்பிடத்தக்க சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கத்துடன் முக்கிய முதலீட்டு மாற்றங்களையும் ஏற்படுத்தும். நாம் கட்டுநாயக்க அதிவேகப் பாதையையும் புத்தளம் வரை நீடிப்போம்.

மேலும், 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முடிவுறுத்தப்படவுள்ளகொடகமையிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலான தெற்கு அதிவேகப்பாதையினை நீடிப்பது தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதோடு, கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய வரையிலான வெளிவட்டப் பாதையானது 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

247. நாம் 2017 ஆம் ஆண்டில் புதிய களனிப் பாலத்திலிருந்து அதுருகிரிய வரையிலான களனிப் பாலத்திலிருந்து துறைமுகப் பிரதேசம் வரையிலுமான இணைக்கும் தூண்களின் மேல் உயர்த்தப்படும் நெடுஞ்சாலைகள் தொடர்பான வேலைகளையும் ஆரம்பித்துள்ளோம். கொழும்பு பெருநகர்ப் பிரதேசத்தில் உள்ள போக்குவரத்து நெருக்கடியை சுமுகப்படுத்துவதற்காக பின்வரும் பிரதேசங்கள் உள்ளடங்கலாக மேற்குப் பிராந்தியத்தில் உள்ள இனங்காணப்பட்ட 7 நுழைவாயில்களின் ஊடாக இலகு ரயில் போக்குவரத்து (LRT) முறைமையினையும் அறிமுகப்படுத்துவோம்.

I.பொறளை - பத்தரமுல்ல- மாலபே

II.கொட்டாவை - மாலபே

III.மாலபே - கடுவளை

IV.பேலியகொடை - கடவத்தை

V.கோட்டை - மருதானை - மட்டக்குளி - பேலியகொடை

VI.தெமட்டகொடை - கிருலப்பனை - பம்பலப்பிட்டி

கோட்டை - பம்பலப்பிட்டி - பொறளை - மருதானை

248. சபாநாயகர் அவர்களே, பல தசாப்தங்களாக இலங்கைப் புகையிரதத் திணைக்களமும் இலங்கை போக்குவரத்துச் சபையும் அரசாங்க நிதியிலிருந்து வருடாந்தம் கிட்டத்தட்ட ரூபா 25பில்லியன் செலவில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயினும், நாட்டிலுள்ள பொதுப்போக்குவரத்து முறைமையானது எமது பொதுப்போக்குவரத்து முறைமையின் வினைத்திறனின்மையின் காரணமாக நாட்டிற்கான பொருளாதாரச் செலவினமானது அதிகமாகவுள்ளது. ஆகவே, 2018 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைப்புகையிரதத் திணைக்களமும் இலங்கைப் போக்குவரத்துச்சபையும் சுயநிதியைப் பயனபடுத்தக்கூடிய வழிவகைகளை உருவாக்கக்கூடிய வகையில் பயன்படுத்தப்படாத சொத்துக்களை கூடிய வரை பயன்படுத்துவதன் மூலம் வர்த்தக ரீதியாக சாத்தியமான வர்த்தகத் திட்டங்களை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

249.பேருந்துகள், ரயில்கள், மற்றும் புகையிரதப் பாதைகளைப் பகிர்ந்து கொள்ளல் போன்றன தொடர்பான விளம்பரப்படுத்தல் போன்ற அவர்களது வருமானத்தினை விருத்தி செய்வதற்கான மார்க்கங்களை தேடுமாறும் இலங்கைப் புகையிரதத் திணைக்களமும் இலங்கைப் போக்குவரத்துச் சபையையும் ஊக்குவிக்கின்றோம்.

250.கொழும்பு மாநகர சபையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் அரச போக்குவரத்து நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொழும்பு நகரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தனிவரிசைகளை ஒதுக்குதல் அல்லது பேருந்து முன்னுரிமை வரிசைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

251.அதேவேளை, வியாங்கொடையிலிருந்து பாணந்துறைப் பிரிவு வரையிலான கொழும்பு புறநகர் புகையிரத வீதியை மின்மயமாக்குவதற்கான சாத்தியவள ஆய்வானது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

252. பொல்கஹவலை குருநாகலை மற்றும் அலுத்கம காலிப் பிரிவுகளின் இரட்டைப் பாதைகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, இதற்காக ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் காரைநகர் ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு உதவும் வகையில் காங்கேசன்துறையிலிருந்து பொன்னாலை சந்தி வரை புகையிரதப் பாதை ஒன்றினை நீடிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

இந்நோக்கத்திற்காக ரூபா 50 மில்லியனையும் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

253.சுமார் ரூபா 3,000 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள களனி வெலியிலிருந்து இரத்தினபுரி வரையிலான புகையிரதப் பாதையின் நீடிப்பானது அரச, தனியார் பங்கேற்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

254.புத்தளம் - கொழும்பு, கொழும்பு-காலிவரையிலான நீர்நிலைகளின் ஊடான போக்கு வரத்தினையும் நான் ஊக்குவிக்கின்றேன்.

இதற்கான படகுத்துறைகளில் அரசாங்கம் முதலிடுவதோடு, இந்நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

விரைவான கடற்போக்குவரத்திற்கான பயணிகள் படகுகளிலும், விரைவுப் படகுகளிலும் முதலீடு செய்வதற்கும் தனியார் துறையினை ஊக்குவிக்கின்றேன். இதற்கு வரிவெகுமதிகளும் வழங்கப்படும்.

255.இன்று எமது வீதிகளில் கிட்டத்தட்ட 1.3 மில்லியன் முச்சக்கர வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றதோடு, அவையே பெரும்பாலும் விபத்துக்களினால் பாதிப்புக்குள்ளாகின்றன. ஆகவே, அவ் வண்டிகளின் சாரதிகளினதும் மற்றும் பயணிகளினதும் பாதுகாப்பினை விருத்தி செய்யும் நோக்கு டன் முச்சக்கர வண்டிகளுக்குப் பதிலாக மின்சாரக் கார்களை மாற்றுவதற்கு நான் ஊக்குவிக்கின்றேன்.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கையாக, அரசாங்கம் கொழும்பு மாவட்டத்தில் அவ்வாறான 1,000 மின்சாரக் கார்களை கொள்வனவு செய்வதற்காக வங்கிகளினூடாக கடன்திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் தனது ஆதரவினை வழங்கவுள்ளது.

இதற்கான வட்டி வீதத்தில் 50 சதவீதத்தினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவுள்ளதோடு, இந்நோக்கத்திற்காக ரூபா 200 மில்லியனையும் ஒதுக்கீடு செய்கின்றேன்.

256.பாடசாலை வான்களை 32 ஆசனங்களைக் கொண்ட பேருந்துகளாகத் தரமுயர்த்துவதற்கும் நான் ஊக்குவிப்பதோடு, இதற்கு ஆதரவளிப்பதற்காக 75 சதவீத வட்டி மானியமொன்றினை நாம் வழங்குவோம். இதற்காக ரூபா 150 மில்லியனை ஒதுக்கீடு செய்யவும் நான் முன்மொழிகின்றேன்.

257. சபாநாயகர் அவர்களே, கிராமிய மற்றும் நகர்ப் பிரதேசங்களின் பிரதான போக்குவரத்து முறையாக முச்சக்கர வண்டிகள் காணப்படுவதோடு, ஒழுங்குமுறைப்படுத்தும்பொறிமுறையின்இடைவெளியானது இக்கைத்தொழிலின் சீரற்ற வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

இந்நிலைமையானது, பாடசாலை வான் போக்குவரத்துத் துறைக்கும் பொருத்தமானதாகவுள்ளது. முச்சக்கர வண்டிகளைச் செயற்படுத்துவோரும் மற்றும் பாடசாலை வான்களைச் செயற்படுத்துவோரும் இவ்வொழுங்கு முறைப்படுத்தும் பொறிமுறையானது இக்கைத்தொழிலின் அபிவிருத்திக்கு உதவி செய்வதோடு, நம்பகத்தன்மையையும் விருத்தி செய்வதன் மூலம் சகல தரப்பினருக்கும் நன்மை பயக்கும் என்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

ஆகவே, முச்சக்கர வண்டிகள் மற்றும் பாடசாலை வான் கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவசியமான வேலைச் சட்டகமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

முன்மொழியப்பட்டுள்ள இவ்வொழுங்கு முறைப்படுத்தும் பொறிமுறையின் கீழ் சகல முச்சக்கர வண்டிகளையும் பாடசாலை வான்களையும் செயற்படுத்துவோர் தமது சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

அதேவேளை, ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையானது, இக்கைத்தொழிலில் ஈடுபடுவோருககு குறிப்பிட்ட காலங்களில் பயிற்சிகளையும் போட்டிப் பரீட்சைகளையும் நடத்தும்.

258.இலங்கை போக்குவரத்து சபையும் மற்றும் தனியார் பேருந்துச் சங்கமும் பயணிகளுக்குச் சிறந்த சேவைகளை வழங்கும் பொருட்டு கூட்டு நேர அட்டவணையொன்றினைத் தயாரிக்குமாறும் மற்றும் சொத்துக்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துகிறோம் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அரச தனியார் பங்கேற்பொன்றாக மெட்ரோ போக்குவரத்துக் கூட்டுத்தாபனத்தினை ஒன்றிணைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

259.விருத்தியுற்ற சேவைகளுககாக வீதி மற்றும் ரயில் போக்குவரத்திற்காக முன் செலுத்தப்பட்ட, காசில்லா அட்டைகளை அறிமுகப்படுத்துவதற்கும் முன்மொழிகின்றேன். வருமானச்சேகரிப்பின்விருத்தியுடன் பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் சுத்தம் செய்வோர் போன்றோருக்கான ஓய்வூதியத் திட்டமொனறினைத் தயாரிக்குமாறு உரிமையாளர்கள் கேட்கப்படுவார்கள்.

**விமான சேவைகள்**

260.அதே நேரம், 2017 மார்ச் மாதம் 31 ஆம் திகதி புதிய உள்நாட்டு விமான சேவையொன்று அறிமுகப்படுத்தப்படும். இவ்விமான சேவையானது, அரச தனியார் பங்கேற்பில் மேற்கொள்ளப்படவுள்ள ஒரு முயற்சியாக உள்ளதோடு, அவை இலங்கை விமானப்படை,ஹோட்டல் கைத்தொழில், பிரயாண முகவர் நிலையங்கள் மற்றும் ஏனைய தனியார் துறை பங்கேற்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கும். இந்நோக்கத்திற்காக அரசாங்கத்தின் ஆரம்பப்பங்களிப்பாக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

261. சபாநாயகர் அவர்களே, எமது நாடு விமானத்துறை கேந்திர நிலையமாக தன்னை நிலைப்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. இது தொடர்பில் விமான பயிற்சித்துறை வளர்ச்சியடையும் தொழிற்துறையென்ற பண்பை வெளிக்காட்டியுள்ளது.

எனவே இத்துறைக்கு உதவுவதற்கு விமான எரிபொருளை போட்டி விலைகளில் வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அழைப்புவடுக்கிறேன். சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் சிபாரிசின் பேரில் அத்துறைசார் உதிரிப் பாகங்களை சகல வரிகளிலிருந்து விலக்களிக்கவுள்ளோம்.

**பொது வசதிகளின் சிறந்த முகாமைத்துவம்**

**நீர்**

262.சபாநாயகர் அவர்களே, தற்போது மொத்தச் சனத்தொகையில் 46 சதவீதம் அல்லது 9.6மில்லியன் மக்கள் பாதுகாப்பான குழாய் நீரைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் காணப்படுவதோடு, இவ் வசதியளிப்பானது 2020 ஆம் ஆண்டளவில் மொத்தச் சனத்தொகையில் 60 சதவீதத்தை அல்லது 12.6 மல்லியன் உள்ளடக்கத்தினை அதிகரிக்கும். ஒரு நாளைக்கு சுமார் 600,000 கனமீற்றர் மேலதிக நீர் வழங்கல் இதற்குத் தேவைப்படும்.

ஒழுங்கற்ற மழை, நிலக்கீழ் நீரின் பற்றாக்குறை மற்றும் தரைக்கீழ் நீர் மாசுபடல் போன்றன உள்ளடங்கலான சூழல் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளும் போது இது ஒரு சவாலான ஒரு நடவடிக்கையாகவே அமைந்துள்ளதோடு, இதற்கு எதிர்வரும் 3 வருடங்களில் குறைந்தது ரூபா 300 பில்லியன் முதலீடு தேவைப்படும்.

ஆயினும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதிலுள்ள எமது அர்ப்பணிப்பு மாத்திரமல்லாமல் சகல மக்களினதும் மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பினையும் கருத்திற்கொண்டு சகல பிரஜைகளும் தூயநீரைப் பெற்றுக் கொள்வதற்கான வசதியுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

ஆகவே, மொத்தம் கிட்டத்தட்ட ரூபா 428 பில்லியன் தேவைப்பாட்டைக் கொண்ட கிட்டத்தட்ட 35 கருத்திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கருத்திட்டங்கள் ஆனமடுவை நீர் வழங்கல் கருத்திட்டம், களனி வலது கரைக் கருத்திட்டம், குண்டசாலை - ஹாரகமை நீர் வழங்கல் கருத்திட்டம், அநுராதபுரம் வடக்கு மற்றும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் கருத்திடடம் போன்றன வற்றை உள்ளடக்குகின்றது.

(தொடரும்)

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

ராஜீவ் கொலை வழக்கில் சிக்கி 25 ஆண்டுகள் சிறையிலிருக்கும் நளினியின்

# இருட்டறையில் எனது வாழ்வு



வலிகளைச் சுமந்த நெடுந்தொடர் நாளை முதல்...

# சீனாவினதும் இந்தியாவினதும் உதவிகள் எமக்குத் தேவையே

## அமைச்சர் நிமால் விளக்கம்

(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு சீனாவினதும் இந்தியாவினதும் உதவி தேவைப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, "எதற்காக அரசாங்கம் சீனாவை நோக்கித் திரும்பியது என்று சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்கின்றனர்.

பின்னர், நாங்கள் எங்கிருந்து பணத்தைப் பெற முடியும்?

இந்தியாவின் கடனுதவி கிடைக்காமல் விட்டால், இலங்கை தொடரூந்து வலையமைப்பை அபிவிருத்தி செய்திருக்க முடியாது.

சில அரசியல்வாதிகளால் சீனாவை நோக்கியோ, இந்தியாவை நோக்கியோ நாம் திரும்பக் கூடாது என்று மக்கள் முன் கூற முடியும்.

ஆனால் நடைமுறையில் அது சாத்தியமற்றது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# 50 சதம் நட்டஈடு பெற ஐம்பது ரூபா முத்திரை

## எம்.பியின் தந்தைக்கு கடிதம்

50 சதம் நட்டஈடு பெறுவதற்காக 25 ரூபாய் முத்திரைகள் இரண்டுடன் வருமாறு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவின் தந்தையின் பெயருக்கு பதிவுத் தபாலில் கடிதமொன்று கிடைத்துள்ளது. ஆனால் அவர் 3 வருடங்களுக்கு முன் இறந்துவிட்டதாக புத்திக பத்திரண எம்.பி.தெரிவித்தார்.

நெடுஞ்சாலை அமைச்சு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈடு வழங்குவது தொடர்பில் பிமல் ரத்நாயக்க நெடுஞ்சாலை அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்காக நேற்று முன்தினம் சபையில் பதில் வழங்கிய அமைச்சரிடம் புத்திக பத்திரண எம்.பி. குறுக்குக் கேள்வி ஒன்றை முன்வைத்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தகவலைத் தெரிவித்தார்.

எனது தந்தை இறந்து 3 வருடங்களாகிறது. தந்தையின் முகவரிக்கு வந்த கடிதத்தில் 50 சதம் நட்டஈடு பெற இரு 25 ரூபா முத்திரை எடுத்து வருமாறு கோரப்பட்டிருந்தது. இதுதவிர 50 சத நட்டஈடு பெற 25 ரூபாய் முத்திரைகள் இரண்டுடன் வருமாறு எனக்கும் தங்கைக்கும் கடிதம் வந்தது எனவும் தெரிவித்தார்.(இ-7-10)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 90 | 100 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 50 | 80 | 50 | 80 | 80 |
| தக்காளி | 60 | 60 | 45 | 80 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 50 | 60 | 45 | 80 | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 120 | 90 | 80-160 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 30 | 60 | 40 |
| புடோல் | 80 | 40 | 40 | 80 | 50 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 35 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 90 | 100 | 110 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 250 | 130 | 180 | 130 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 60 | 80 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 70 | 100 | 60 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 160 | 100 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 120 | 90 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 60 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 160 | 120 | 120 | 160 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 90 | 140 | 80 | 120 | 140 |
| போஞ்சி | 200 | 250 | — | 200 | 180 | 200 | 220 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 70 | 70 | — | 80 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 30 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 500 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-30 | 50 | 30 | 30-40 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 150 | — | — | — | — | — | 200 |
| முள்ளங்கி | 60 | — | 50 | 60 | — | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | — | 10 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | — | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | 80 | 80 | — | 60 |

# சிறைக்குள் பேரறிவு

23

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...




**"தற்காலிகமாகத்தான் உங்களிடமிருந்து நான் விடைபெறுகிறேன். எனது உணர்வுகளை, ஆதங்கங்களை, கடந்து வந்த வலிகளை சிலவேனும் உங்களுடன் உங்களுக்குப் புரியும் வகையில் எடுத்துச் சொல்லியிருப்பேன் என நம்புகிறேன். உங்களது உள்ளத்தைத் தொட்டுவிட வேண்டும் என்பதைக்காட்டிலும் என் தரப்பு உண்மைகளை உங்களுக்குப் புரிய வைத்துவிட வேண்டும் என்கிற முயற்சிதான் என்னில் அதிகம் இருந்தது."**

...உங்களுடனான எனது இந்தக் குறுகிய காலப் பகிர்தலில் எனது ஒட்டுமொத்த வாழ்வையும் வழக்கையும் நான் விவரித்து விடவில்லை. நீதிமன்றத் தீர்ப்புகள் அனைத்தும் நீதியானவையாக மட்டுமே இருந்துவிடுவதில்லை என்ற புரிதலோடு இருப்பினும், எனக்குத் தூக்குத் தண்டனை அளித்த உச்ச நீதிமன்ற நீதிபதியே, தான் தவறிழைத்து விட்டதாகப் பொதுவெளியில் ஒப்புக்கொண்ட பின்பும், எனது ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுசெய்த பொலிஸ் உயரதிகாரியே எழுத்துப்பூர்வமாக நான் நிரபராதி என வாக்குமூலம் அளித்த பின்பும் என்னை நிரபராதி என ஏற்பதில் சிலருக்குத் தயக்கம் இருப்பின், அதற்கான நோக்கத்தை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

பேரறிவாளன் 9 வோல்ட் பற்றரி மட்டும் வாங்கித் தரவில்லை சிவராசனுக்கு தனது சொந்த பெயரில் மோட்டார் சைக்கிள் ஒன்று வாங்கித் தந்தார் எனவும் இன்னும் பலவாறு குற்றச்சாட்டுகளை அடுக்கிறார்கள். அவர்கள் குறிப்பிடுவதுபோல் எந்தக் குற்றச்சாட்டுக்காகவும் எனக்குத் தண்டனை - தூக்கு வழங்கப்படவில்லை. ராஜீவ் கொலைக்கு மோட்டார் சைக்கிள் எங்கு பயன்படுத்தப்பட்டது என்பதும் தெரியவில்ல்லை. அவர்களின் வாதத்தை அப்படியே ஏற்றாலும், உலகமே அதிர்ச்சிக்குள்ளான ஒரு கொலை வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளிக்கு, கொலைக்குப் பயன்படுத்த எனத் தெரிந்து, தனது சொந்த பெயரில் மோட்டார் சைக்கிள் வாங்கித் தந்த முதல் மனிதன் நானாகத்தான் இருப்பேன்.

கள்ளச்சாராயம் காய்ச்சி விற்கும் சட்டவிரோதச் செயல் செய்பவர்கள்கூட சட்டப்படியான ஆவணத்துடன் வாகனங்களைப் பயன்படுத்துவதில்லை என்பதை அந்த அன்பர்கள் அறிவார்களா, தெரியவில்லை. இதே வழக்கில் 23ஆவது எதிரியாக இருந்த தனசேகரன் பொய்யான பெயர், முகவரி கொடுத்து ஆவணங்கள் பெற்று 6 ஜிப்சி ஜீப் வாங்கினார் என்பதும், அவற்றில் ஒன்றுதான் ராஜீவ் கொலைக்குப் பின்னர் சிவராசன் பயன்படுத்தியது என்பதும், இறுதியில் தனசேகரன் சதிகாரரர் இல்லை என உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார் என்பதையும் அந்த அன்பர்கள் அறிவார்களா, தெரியவில்லை. வழக்கின் 12ஆவது எதிரியான விஜயன் ராஜீவ் காந்தியை கொன்ற தனு சென்னையில் சென்றுவர ஒரு மிதிவண்டி வாங்கித் தந்தார் எனக் குற்றம்சாட்டப்பட்ட நிலையில் அவரை உச்ச நீதிமன்றம் சதிகாரரர் இல்லை என விடுவித்துவிட்டது என்பதையும் அந்த அன்பர்கள் அறிவார்களா, தெரியவில்லை. எனவே, எனக்கு தண்டனை பெற்றுத்தர காரணமான குற்றச்சாட்டு 9 வோல்ட் பற்றரி மட்டுமே. அதற்கான விடையை, தியாகராசன் ஐ.பி.எஸ் பகிர்ந்து விட்டார். எது எப்படி இருப்பினும், எல்லாப் பொய்மைகளையும் உடைத்தெறியும் வலிமை உண்மைக்கு இருக்கிறது. அது, இப்போது சிறைப்பட்டு இருக்கிறது. பொய்மை எனும் கூடு உடைத்து அது சிறகடிக்கும் நாளுக்காகக் காத்திருக்கிறேன். நீங்களும் அதற்காகக் காத்திருங்கள்.



தற்காலிகமாகத்தான் உங்களிடமிருந்து நான் விடைபெறுகிறேன். எனது உணர்வுகளை, ஆதங்கங்களைக் கடந்து வந்த வலிகளை சிலவேனும் உங்களுடன், உங்களுக்குப் புரியும் வகையில் எடுத்துச் சொல்லியிருப்பேன் என நம்புகிறேன். உங்களது உள்ளத்தைத் தொட்டுவிட வேண்டும் என்புதைக் காட்டிலும் என் தரப்பு உண்மைகளை உங்களுக்குப் புரியவைத்துவிட வேண்டும் என்கிற முயற்சிதான் என்னில் அதிகம் இருந்தது.

எனக்காக அனுதாபப்படுவதை நான் ஒரு நாளும் விரும்பவில்லை. நீதிக்காக அனுதாபப்படுங்கள். ஏனெனில், அதுதான் மிக மோசமாகத் தற்போது காயப்பட்டுக் குற்றுயிராகக் கிடக்கிறது.

நீதிக்கான இந்த நீண்ட போராட்டத்தில் வென்று எவ்வாறேனும் விடுதலைக் காற்றைச் சுவாசித்துவிட வேண்டும் என்றுதான் ஒவ்வொரு நாளும் முயன்று வருகிறேன். அந்த முயற்சிகளில் தோற்று விழுகிற ஒவ்வொரு முறையும் 'செவ்வியான் கேடு' என்றே அவை நினைக்கப்படும் என்ற நம்பிக்கையோடுதான் மீண்டும் எழுந்திருக்கிறேன்.

எது எப்படி இருப்பினும் இறுதியில் நீதி வீழ்த்தப்பட்டுவிடக்கூடாது - தோற்றுவிடக் கூடாது. எனவே, நீதி வெல்வதற்காக நீங்களும் குரல் எழுப்புங்கள்.

உங்களின் குரல் இந்திய நீதித்துறை வரலாற்றில் புதிய அத்தியாயங்களை எழுத உதவட்டும். தமிழகம் அதற்கு முன்னோடியாக இருக்கட்டும். நீதி வெல்லட்டும். வணக்கத்துடன்.

**அ.ஞா.பேரறிவாளன்**
**நடுவண் சிறை,**
**வேலூர்.**

(முற்றும்)

# முத்தமிழ் விழாவும் முத்தமிழ் அறிஞர் நினைவு தினமும்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முத்தமிழ் விழாவும் சுவாமி விபுலானந்தர் நினைவு தினமும் இன்று புதன்கிழமை இடம்பெறுவதை முன்னிட்டு பிரசுரமாகின்றது.

முத்தமிழ் அறிஞர் சுவாமி விபுலானந்தர் கிழக்கிலங்கையிலே காரைதீவு எனும் இடத்தில் பிறந்து தமிழ்மொழிக்கும் சைவத்திற்கும் பண்பாட்டு பேணுகைக்கும் அர்ப்பணிப்பான சேவையாற்றியதுடன்தமிழ்ததுறையின் முதல் துறைத்தலைவர் எனும் பெருமைக்கும் உரியவராவார்.

இவர் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அதிபராக இருந்து அவ்அரியாசனத்தினை அலங்கரித்ததுடன் அக்காலப்பகுதியில் யாழ். நூல் எனும் அற்புதமான நூலினை யார்த்து இலக்கிய உலகிற்கு காத்திரமான பங்களிப்பினை ஆற்றியிருந்தார்.

முத்தமிழ்களாக இயல், இசை. நாடகம் விளங்குகின்றன. இத்துறைகளின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணி காத்திரமானதாகும்.


இத்தகைய பெருமை வாய்ந்த அறிஞர் கல்லூரியில் அதிபராக சேவையாற்றியமையை எண்ணி மானிப்பாய் இந்துக்கல்லூரி சமூகம் பெருமையடைகின்றது.

அவரை கௌரவப்படுத்தும் வகையில் முத்தழிழ் விழாவினை வருடம் தோறும் நிகழ்த்தி வருகின்றனர். விபுலானந்தர் இறந்த தினத்தினை கடந்த ஆண்டுகளில் தமிழ் மன்றம் முத்தமிழ் விழாவாக சிறப்பாகக் கொண்டாடியது.

கடந்த ஆண்டு பிறந்த தினத்தினை தமிழ்ச்சங்கத்தினரால் முத்தமிழ் விழாவாக கொண்டாடுவதாக தீர்மானிக்கப்பட்டது. கல்லூரியின் ஓய்வு நிலை முதல்வர் எஸ். சிவநேஸ்வரனின் சிந்தனையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி தழிழ்ச்சங்கமானது உருவாக்கப்பட்டு மிகச்சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சமூகம் சுவாமி விபுலானந்தரை கௌரவப்படுத்தும் முகமாகவும் அவரை நினைவு கூரும் முகமாகவும் தமிழ்ச்சங்கம் அமைத்து ஜனனதினத்தினை முத்தமிழ் விழாவாக கொண்டாடினர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியினை பொறுத்தவரையில் கலைகளினது இயங்கியலிற்கு சான்றாக பல கலைஞர்களினை கடந்தகாலத்தில் பிரசவித்தது டன் நிகழ்காலத்திலும் பிரசவித்துக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



நாடகத்தந்தை சொர்ணலிங்கம்,கட்டடக் கலைஞர் வி.எஸ்.துரைராஜா, திரைப்படக்கலைஞர் அருமைநாயகன் போன்ற பல கலைஞர்கள் உருவாக மானிப்பாய் இந்துக்கல்லூரி களமாக விளங்கியது.

நிகழ்காலத்தில் பேச்சுப் போட்டியில் வசீகரன், தனியிசையில் தயூரன் ,க.தனுசன், நடனத்துறையில் செல்வி அன்ரனி கொலன்சியா ,நாடகத்துறையில் 2012ஆம்ஆண்டு கு.திலக்சன், 2013ஆம் ஆண்டு யே.சானுஜன், 2014ஆம் ஆண்டு உ.கரிஸ், 2014ஆம ஆண்டு ந.மோகனராஜன் , கு.லோன்சன், கு.தவேன்சன், 2016ஆம் ஆண்டு ஜெ.ஜெயகபிலன்ஆகியோர் தேசிய வெற்றிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர்.

இத்தகைய பெருமைகளை உடைய கல்லூரி முத்தமிழ்களுக்கும் முதன்மை கொடுக்கும் வகையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் தமிழ்ச்சங்கத்தினரால் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் சுவாமி விபுலானந்தரினை நினைவு கூரும் வகையில் முத்தமிழ் விழா இன்று (30.11.2016 ) கல்லூரி மண்டபத்தில் தமிழ்ச் சங்கப் போசகரும் அதிபருமாகிய எம்.இந்திரபாலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப பல்கலைக்கழகத்தின் ஓய்வு நிலை தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் காலை மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து சுவாமி விபுலானந்தரின் உருவப்படம் பாரம்பரிய முறைப்படி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு வீதியெங்கும் பூரண கும்பம் வைத்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

தழிழ்த்துறையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பான சேவையினை ஆற்றிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸிற்கு "சுவாமி விபுலானந்தர் விருது" வழங்கிக்கௌரவிக்கப்படவுள்ளது.

நிகழ்வில் மாணவர்களது வரவேற்பு நடனம், பேச்சு, தனியிசை, நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

விழாக்களது மிக முக்கியமான நோக்கம் மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதும் அவர்களது இயங்கியலிற்கு களம் அமைத்துக் கொடுத்து அதன் மூலம் ஆளுமையுள்ள தலைமுறையினை உருவாக்குவதாகும்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியானது நூற்றாண்டினைக் கடந்து தேசிய பாடசாலையாக உயர்ந்து நிற்கின்ற வேளையில் முத்தமிழையும் வளர்க்கும் நோக்கில் தமிழ்ச்சங்கம் அமைத்து பணியாற்றும் தருணத்தில் எதிர்காலத்தில மேலும் சிறப்பான முறையில் மேற்கொள்வதுடன் மாணவர்களது இயங்கியலிற்கும் முத்தமிழிற்கும் முதன்மை கொடுத்து மேற்கொள்ளப் படவேண்டியதும் அவசிய மாகும்.

எஸ்.ரி.அருள்குமரன்
ஆசிரியர்
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.
(தேசிய பாடசாலை)

# தமிழ் சினிமா வரலாறு

## லலிதாவுக்கு திருமணம் மணமகன் - வக்கீல் சிவசங்கரன் (23.01.1957)

311

...ஆனால் கதையின் வலிமை சிவாஜி-பத்மினியின் நடிப்பு வலம்புரி சோமநாதனின் வசனம், எல்.வி.பிரசாத்தின் டைரக்ஷன் ஆகியவற்றால் படம் சுப்பர்ஹிட் ஆகியது.

ஒப்பற்ற அழகால் ரசிகர்களை கவர்ந்திருந்த பத்மினி அருமையான நடிப்பால் ரசிகர்களின் மனதில் இடம் பிடிக்கக் காரணமான படம் மங்கையர் திலகம்.

### தேவதாஸ்

லலிதா நடித்த படங்களில் சிறந்தவை தேவதாஸ், கணவனே கண்கண்ட தெய்வம் ஆகியவையாகும்.

தேவதாஸ் படத்தில் ஏ.நாகேஸ்வரராவும் சாவித்திரியும் அற்புதமாக நடித்தனர். அத்தகைய படத்தில் தாசி சந்திரமுகி வேடத்தில் மிகச் சிறப்பாக நடித்து பெயர் பெற்றார் லலிதா.

கணவனே கண்கண்ட தெய்வம் படத்தில் ஜெமினி கணேசனை காதலித்து தோல்வி அடையும் நாகதேவதை வேடத்தில் கச்சிதமாக செய்திருந்தார். மயக்க மருந்து குடித்ததால் உன்னைக் கண் தேடுதே.. என்று விக்கலுடன் அவர் பாடிய பாடல் மிகப்பிரபலம்.

### திருமணம்

லலிதாவுக்கு அழகும் திறமையும் இருந்த போதிலும் பத்மினியைப்போல் தனித்து நின்று சாதனை புரியமுடியவில்லை.

தமிழ் நடிகைகளில் நம்பர் -1 இடத்தை பத்மினி எட்டிப் பிடித்துவிட லலிதா பின் தங்கியிருந்தார்.

எனினும் பல்வேறு மொழிகளிலும் 100இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துவிட்டதாலும் 24 வயது ஆகிவிட்டதாலும் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையில் செட்டில் ஆகி விடத் தீர்மானித்தார்.

லலிதா திரை உலகைச் சேர்ந்த யாரையாவது மணப்பார் என்று பெரும்பாலான ரசிகர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் திரை உலகைச் சேராத குடும்பத்தில் மாப்பிள்ளை பார்த்தார் லலிதாவின் தாயார்.

### வக்கீல்

கடைசியில் மாப்பிள்ளை முடிவாகி திருமணத் திகதியும் நிச்சயிக்கப்பட்டது.

மாப்பிள்ளையின் பெயர் சிவசங்கரன் நாயர். இவர் கேரள ஐகோர்ட்டில் வக்கீலாகப் பணிபுரிந்து வந்தார். கே.பி. பணிக்கர் என்ற பிரபல



லலிதா.

வைத்தியரின் மகன் பிரான்ஸ் நாட்டில் இந்தியத் துதராக இருந்த சர்தார் கே.எம். பணிக்கரின் மருமகன்.

அந்தக் காலத்தில் சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்துக்கு எதிரே ஆபட்ஸ்பரி என்ற மாளிகை இருந்தது. பெரிய இடத்துத் திருமணங்கள் எல்லாம் அப்போது அங்குதான் நடைபெறுவது வழக்கம்.

### திருமணம்

லலிதா, சிவசங்கரன் திருமணம் ஆபட்ஸ்பரி மாளிகையில் 23.01.1957அன்று நடைபெற்றது.

காலை 8.45 மணிக்கு மணமகன் திருமணமேடைக்கு அழைத்து வரப்பட்டார். மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண்கள் கையில் விளக்கும் பூத் தட்டுக்களும் ஏந்தி திருமண மேடையைச் சுற்றிவர மாப்பிள்ளையும் அவர்களுடன் மண மேடையைச் சுற்றி வந்தார்.

(தொடரும்)

# நடுநிசியில் 40 மில்லியன் கொள்ளை

அநுராதபுரம் புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற நிதி நிறுவனமொன்றுக்கும் அதற்கருகிலுள்ள கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்துக்குள்ளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் நுழைந்துள்ள கொள்ளையர்கள் சிலர், அங்கிருந்து சுமார் 40 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதற்காக நானகு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிதி நிறுவனத்தின் காப்பகத்தில் 30 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய தங்க நகைகள் மற்றும் பணம் இருந்ததாக, பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், அதன் பெறுமதி தொடர்பில், சரியாகக் கணக்கிடப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், மேற்படி கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையத்தின் காப்பகத்தில், 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம் காணப்பட்டதாகவும், அதுவும் கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7-10)

# கூட்டுப்பயிற்சிகள் தொடர்பில் இந்தியா-இலங்கை உடன்பாடு

(கொழும்பு)

**கூட்டுப் பயிற்சிகளை நடத்துவது தொடர்பாக இலங்கையுடன் இந்திய கடலோரக் காவற்படை புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளது என இந்திய கடலோரக் காவற்படை பணிப்பாளர் நாயகம் இராஜேந்திர சிங் தெரிவித்தார்.**

கூட்டுப் பயிற்சிகளை நடத்துவது தொடர்பாக இந்திய கடலோரக் காவற்படை ஜப்பான், தென்கொரியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், வியட்நாம், ஓமான் ஆகிய ஆறு நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்பாடுகளை செய்து கொண்டுள்ளது.

மேலும், இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்பாடுகளை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# போக்குவரத்து விதி மீறல்களுக்கு தண்டப் பணம் அதிகரிப்பு; மீளாய்வு

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கான தண்டப் பணத்தை அதிகரிக்கும் முன்மொழிவில் திருத்தம் செய்யக் கூடிய சாத்தியங்கள் குறித்து மீளாய்வு செய்யவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

குறித்த முன்மொழிவு தொடர்பில் பெற்ற பின்னூட்டல் ஆய்வை அடுத்து இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.



போக்குவரத்து விதிகளை மறுவோருக்கு தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கையில் சிறிய அளவான செயற்றிறனே காணப்படுவதை அரசாங்கம் அவதானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிதி வசூலிப்பை நோக்காக கொண்டு தண்டப் பண அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை எனவும் போக்குவரத்து விதிகள் மீறப்படுவதை இலக்காக கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நிமால் சிறிபால டி சில்வா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி விபத்துக்களை குறைபபதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து வீதிப பாதுகாப்பு தொடர்பான தேசிய பேரவை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் பொதுப்போக்குவரத்துதுறையை மேம்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் சுடடிக்காட்டியுள்ளார். (இ-7-10)

# அமைச்சரவையில் அடுத்த ஆண்டில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படலாம்

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் முதல் முறையாக அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படலாம் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 20 மாதங்களில் அமைச்சர்களின் செயற்றிறனை அடிப்படையாகக்கொண்டு இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இடையிலான கலந்தாய்வுகளை அடுத்து தேசிய அரசாங்கத்தை பலப்படுத்தும் வகையில் அமைச்சரவை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பிரதான அமைச்சரவை பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் திறமை வெளிப்பாடுகளை அடையாளம் காண்பது கடினமான விடயம் அல்லவெனவும் அரசாங்கத்தின் மூத்த பேச்சாளர் ஒருவர் கொழும்பிலுள்ள ஆங்கிலக ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் தலைவர்கள் என்ற வகையில் ஜனாதிபதியும் பிரதமரும் அனைத்து அரசாங்க அமைச்சர்களின் முன்னேற்றங்களையும் மிகவும் உன்னிப்பாக அவதானித்துவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரிசெய்ய வேண்டிய விடயங்களை ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளதாகவும் அமைச்சரவை மறுசீரமைப்பினால் அமைச்சரவையின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படாதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### பதில்களை இனம் பிரிப்பது எப்படி?

திருமணத்திற்கோ பிற விசேடங்களுக்கோ பலரையும் நாம் நேரில் அழைக்கிறோம். எல்லோரும் கண்டிப்பா வாறேன் என்று தான் சொல்கிறார்கள். எல்லோருமா வந்துவிடுகிறார்கள்? இல்லை சற்று நுணுக்கமாக , கண்டிப்பா வர்றேன் என்று சொல்கிறவர்களைக் கவனித்தால் அவர்கள் வருவார்கள் மாட்டார்கள் என்பதை அந்த இடத்திலேயே சொல்லிவிட முடியும்.

ஒரு போன் செய்து கொள்கிறேனே! என்பவரிடம் உரியவர், ஓ எஸ்! தாராளமாப் பண்ணிக்குங்க என்று சொன்னாலும், அதை அவர் எந்த அளவிற்கு இதய பூர்வமாகச் சொன்னார் என இனம் பிரிப்பது நல்லது.

கடன் தரும்– கைமாற்று வழங்கும் அத்தனை பேரும் ஒரே மாதிரியா தருகிறார்கள்? இல்லவே இல்லை! எரிச்சல்பட்டுக் கொண்டு தருகிறவர்கள்; தர்ம சங்கடத்தில் ஆழ்ந்து விட்டு தருகிறவர்கள்; வேறு வழியில்லாமல் தருகிறவர்கள்; சரி தந்து வைப்போமே என்று தருபவர்கள்; மனப் பூர்வமாகத் தருகிற வர்கள்; மகிழ்ந்து தருபவர்கள்; தந்துதவுவதைப் பாக்கியமாக நினைத்துத் தருபவர்கள் என்று எத்தனை ரகத்தினர்கள் இருக்கிறார்கள் தெரியுமா? அவர்களின் பதிலை வைத்தும் நடவடிக்கைகளை வைத்தும் நமக்கு உதவியவர்கள் நாம் இனம் பிரித்தே ஆக வேண்டும்.

பலர் எப்படியாவது தொகை வந்தால் சரி– நிலைமையைச் சமாளிப்போம் என்று அடுத்த கட்டத்தைப் பற்றித் தான் சிந்திக்கிறார்கள்.

கடன் என்று அல்ல– வேறு எந்த விடயத்திலும் நமக்கு உதவுகிற அத்தனை பேரையும் இப்படி ரகம் ரகமாக இனம் பிரித்து விடலாம்.

அவர் அதற்குச் சரி என்று சொன்னாலும், அந்த சரியைச் சற்று இழுத்த மாதிரியல்லவா சொன்னார்? மனப் பூர்வமாகச் சொல்லவில்லையே ஏன்?

ஆமாம் என்று இவர் சொன்னாரே இதில் ஒரு விதத் தயக்கம் இழையோடியதே அதற்கு என்னதான் காரணம்?

அன்று அவரை வழியில் பார்த்த போது அவசரமாகப் போகிறேன்– இன்னொரு நாள் பார்க்கிறேன் என்றாரே , அது உண்மையான அவசரம் தானா அல்லது நம்மைத் தவிர்ப்பதற்கான அல்லது நம்மிடம் இருந்து தப்பிப்பதற்கா?

இப்படியெல்லாம் எதையுமே கொஞ்சம் அசை போட்டால் பல உண்மைகள் நமக்குப் புலப்படும்.

இதை சந்தேகக் கண்ணோடு பார்க்கும் ரகத்திலோ எவரையும் விரோதக் கோணத்திலோ பார்ப்பதற்காகப் புரிந்து கொள்ளக் கூடாது. நடந்த ஒன்றைப் பற்றி அதிகம் சிந்தித்துக் குழப்பிக் கொள்ளும் ரகத்திலும் இதை அடக்கி விடக் கூடாது.


மாறாக மனிதர்களைப் புரிந்து கொள்வதில் அவர்களை மிகத் துல்லியமாக எடை போடுவதில், பிறர் உணர்வுகளை நாமும் இதயத்தில் ஏந்திக் கொள்ளுவதில் இந்த முறை மிக மிகப் பயன்படப் போகிறது என்பதே உண்மை.

பிறர் எங்கே இருக்கிறீர்கள்? நாம் எங்கே இருக்கிறோம் அல்லது இருக்க வேண்டும்? நம்மிடத்தில் உண்மையாக நடந்து கொள்கிறவர்கள் யார்? என்பதையெல்லாம் இனம் பிரித்து அறிய இந்த இயல்பு மிக அவசியம்.

**லேனா தமிழ்வாணன்**

# கலைத் தரிசனம்

## மாஸ்டர் மா.இரத்தினசோதி அவர்களுடனான ஒரு நேர்காணல்



*கராத்தே, யோகா, மல்யுத்தம் , குத்துச்சண்டை, சிலம்பு, நெஞ் சாக் போன்ற பல்துறைகளில் சிறந்து விளங்குகின்றார்.*

*1943.11.26 ஆம் திகதி பருத் தித்துறையில் பிறந்த இவர் கராத்தே - யோகா இரண்டையும் 1973 தொடக்கம் தனது 73 வயதான இற்றை வரை இலவசமாகப் பயிற்று வித்து வருகின்றார்.*

*2011 இல் யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளராகவும் இதே ஆண்டில் வடமாகாண கராத்தே சங்கத் தலைவராகவும் 2012 இல் ஆளுநர் விருதையும் 2012 இல் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் கலைப்பரிதி என்ற விருதையும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களினால் மூன்று முறைகள் பரிசுகளைப் பெற்றவர்.*

*தேசிய கராத்தே A தரத்து நடுவ ராகவும் உள்ளார். 2013- 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கை கராத்தே உறுப்பினர் தெரிவுக்குழு வின் முக்கியஸ்தர்களில் ஒருவராக வும் சிறந்து விளங்கினார்.*

*1974 இல் தற்காப்புக் கலைய கம், யோகக் கலையகம் போன்ற னவற்றை நிறுவினார். ஒவ்வொரு வருடமும் கொல்கத்தா சென்று ஜப் பான் கராத்தே ஆசிரியர்களின் கீழ் பயில்வதோடு ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டிற்குச் சென்று யோகக் கலையையும் தவறாது பயின்று வருகின்றார்.*

*இக் கலைகளில் அதி சிறந்த வராக விளங்கி வருகின்ற வேளை யிலும் தன்னடக்கத்துடன் 73 வயதி லும் ஓர் இளைஞனாகக் காட்சி தருகிறார்.*

*இந்தப் பிதாமகனை எல்லோரும் மாஸ்டர் என்றே அழைப்பார்கள். இலங்கையில் உள்ள தமிழர்களில் 7 ஆவது கறுத்தப்பட்டி பெற்ற ஒரே ஒரு தமிழனாக மாஸ்டர் மாணிக்கவாசகம் இரத்தினசோதி அவர்கள் திகழ்கிறார்.*

*அவர் வலம்புரிக்கு அளித்த செவ்வியினை இங்கே தருகின் றோம்.*

**★ கராத்தே கலையில் எவ்வாறு கால்பதித்தீர்கள்?**

சிறுவயதிலிருந்தே கராத்தேக் கலையில் ஆர்வம் இருந்தது. என்னுடைய தந்தையார் கராத்தேயில் ஈடுபாடுடையவர். ஆரம்பத்தில்யோகா, பின்னர் மல்யுத்தம் பின்னர் குத்துச் சண்டை பின்னர் சிலம்பு அதற்குப் பிறகு தான் கராத்தே பழகினேன். இலங்கையின் கராத்தே சம்மேளனத் தலைவராக இருந்த சென்சி வொனி றொபேட் அவர்களிடம் நேரடியாக கொழும்பு சென்று சனி – ஞாயிறுஆகிய தினங்களில் பயின்றேன்.

அவ்வாறு பயின்று கொண்டிருந்த போது அவர்களுடைய மாணவர் கணேசலிங்கம் இலங்கை வங்கியின் உத்தியோகத்தர். அவர் மாற்றலாகி யாழ்ப்பாணம் வந்த போது கராத்தே வகுப்புக்களை நடத்தினார். நானும் அவரிடம் போய் கராத்தேயினைக் கற்றேன். இதற்கு முன்னர் பத்திரிகைகளில் கராத்தே சார்ந்து வரும் விடயங்களை நகல் செய்து வைத்துப் படிப்பேன். 1973 ஆம் ஆண்டுகளில் கராத்தேக் கலையில் கால் பதித்தேன்.

**★ கராத்தே கலையில் மாணவர்களின் ஆர்வம் எப்படியிருக்கிறது?**

யுத்தத்திற்கு முன்னர் கராத்தே கலையில் ஒரு எழுச்சி இருந்தது. யுத்தத்திற்கு பின்னர் முழுமையாக மழுங்கடிக்கப்பட்டது.

தற்பொழுது நிறையமாணவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். இலங்கை கராத்தே சம்மேளனம் ஆறு வயதிலிருந்து 70 வயதிற்கு மேற்பட்டவர்களும் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை தந்திருக்கிறார்கள். அதனால் பதக்கங்களை வருடா வருடம் பெறக்கூடியதாக இருக்கிறது. பாடசாலை மாணவர்களுக்கு கராத்தே போட்டிகளை நடத்துகின்றார்கள். தென்னிலங்கையைப் பொறுத்தவரை ஒவ்வொரு பாடசாலையினும் யோகா, கராத்தே ஆகியவற்றுக்கு ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு ஒரு கொடுப்பனவு கொடுத்து அவர்களை பயிற்று விப்பாளர்களாக வைத்திருக்கிறார்கள்.

வட மாகாணத்தைப் பொறுத்தவரை அவ்வாறான சந்தர்ப்பங்கள் – சலுகைகள் இல்லை. அப்படிப் பாடசாலைகளில் ஊக்குவிப்புக் கொடுத்தால் ஆண்களும் பெண்களும் நிறையப் பதக்கங்களை எடுக்கலாம். யுத்தம் முடிவதற்கு முன்னர் வாய்ப்புக்கள் குறைவு. தமிழ் ஆட்களை பயிற்றுவிப்பதற்கு தகுந்த ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. நாங்களே எங்கள் மாணவர்களுக்குத் தெரிந்தவைகளை மட்டும் சொல்லிக்கொடுத்தோம். அதால அகில இலங்கைப் போட்டிகளில் வெற்றியீட்டுகின்ற வாய்ப்புக் குறைவாக இருந்தது. தமிழ் ஆட்கள் என்ற புறக்கணிப்பும் இருந்தது. தற்பொழுது இலங்கைக் கராத்தே சம்மேளனம் தமிழ் மாணவர்களுக்கு கூடுதலாக உதவி செய்ய வேண்டுமென்ற மனப்பாங்கு இருக்கிறது.

**★ இலங்கையில் உள்ள தமிழர்க ளில் 7 ஆவது கறுத்தப்பட்டி பெற்ற ஒரே ஒரு தமிழனாகத் தாங்கள் உள்ளீர்கள் இது பற்றி?**

2005 இல் லண்டன் சென்று ஜப்பான் மாஸ்டர் கவாஸ்கோ அவர்களிடம் 5 ஆவது கறுத்தப்பட்டி பெற்றேன். இலங்கையில் 8 ஆவது கறுத்தப்பட்டி பெற்று இரண்டு பேர் உள்ளார்கள். இலங்கைக் கராத்தே சம்மேளனத்தினால் 2015.06.11 அன்று 7 ஆவது கறுத்தப்பட்டியினைப் பெற்றேன்.

இலங்கையில் உள்ள தமிழர்களில் 7 ஆவது கறுத்தப்பட்டியைப் பெற்ற முதல் தமிழன் என்ற பெருமையடைகிறேன். அதிலும் இலங்கைக் கராத்தே சம்மேளனத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய வயது கூடியவர்களில் நான் மட்டும் தான். அதிலும் 73 வயதிலும் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வருடா வருடம் பெற்றுக்கொள்கின்றேன். கராத்தே சம்மேளனத்தில் கராத்தே A தரத்து நடுவர் பரீட்சையில் சித்தியடைந்து தேசிய கராத்தே A தரத்து நடுவராகவும் உள்ளேன்.

**★ கராத்தேக் கலையில் தங்களின் மாணவர்களின் சாதனைகள் பற்றி?**

இவ்வாண்டு இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் அகில இலங்கைரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் 35 மாணவர்கள் பங்குபற்றியிருந்தார்கள். அதில் 19 மாணவர்கள் வெற்றியீட்டிப் பதக்கங்களைப் பெற்றனர். இவற்றோடு வள்ளுவன் -6வது கறுத்தப்பட்டி, பிரபாகரன்-6ஆவது கறுத்தப்பட்டி, துளசிதாஸ்-4ஆவது கறுத்தப்பட்டி, துஷாந்தன்-3ஆவது கறுத்தப்பட்டி, பிரசாந்தினி-3ஆவதுகறுத்தப்பட்டி, கமலேந்திரன்-3ஆவது கறுத்தப்பட்டி, சுரேஸ்-3ஆவது கறுத்தப்பட்டி, திலீபன்-3ஆவது கறுத்தப்பட்டி, செந்தூரன்-2ஆவது கறுத்தப்பட்டி, மகிந்தன்-2ஆவது கறுத்தப்பட்டி, ஆழிக்குமரன்-மண்ணிறப்பட்டி, காந்தரூபன் போன்ற மாணவர்களின் சாதனையைக் குறிப்பிடலாம்.

**★ 73 வயதிலும் சோர்வின்றித் தொடர்ந்து தங்களால் எப்படிக் கராத்தேக் கலையில் பயணிக்க முடிகிறது?**

நான் கராத்தே வகுப்புக்களை பருத்தித்துறையில் மூன்று இடங்களிலும் யாழ்ப்பாணத்தில் தனிப்பட்ட முறையில் வகுப்புக்களை நடத்தி வந்தாலும் நான் தினந்தோறும் வீட்டில் ஒரு மணித்தியாலயம் பயிற்சி செய்து கொள்வேன். இவற்றோடு லண்டன், கொல்கத்தா, நெதர்லாந்து, பெல்ஜியம் போன்ற நாடுகளுக்குச் சென்று பயிற்சிகளை எடுத்தவண்ணம் உள்ளேன். இவற்றோடு இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகின்ற போட்டிகளில் பங்குபற்றி அதில் வெற்றியீட்டி பதக்கங்களைப் பெறுகின்றேன். அப்போது நான் எனது நிலையை சுயபரிசோதனை செய்து கொள்வேன். சோர்வின்றி பயணிக்கின்றேன்.

**★ தாங்கள் யோகாக் கலையிலும் விற்பன்னராக உள்ளீர்கள் இக்கலையை எங்கிருந்து கற்றீர்கள்?**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கின்ற போது எமது கல்லூரி மேடையிலே அல்வாயைச் சேர்ந்த ஆசிரியர் கனகரட்ணசிங்கம் அவர்கள் யோகாவை செய்து காட்டினார். பார்த்தவுடன் எனக்கு மிகவும் யோகாவில் ஈடுபாடு ஏற்பட்டது. நான் வீட்டிற்கு வந்து செய்து பார்த்தேன்.

தொடர்ந்து செய்து வந்த ஆசனங்கள் சரியோ என்று பார்க்க திருகோணமலைக்குச்சென்று கேரளா சுவாமி கெங்கா அவர்களிடம் பழகினேன். அவரும் என்னை ஆசீர்வதித்து விட்டார். பின்னர் கதிர்காமத்திற்குச் சென்று ஆச்சிரமம் போட்டிருந்த சுவாமி ஜோதீர் மயானந்தா அவர்களிடம் பழகினேன். பிறகு யாழ்ப்பாணத்தில் சிவானந்தா யோகி அவர்களிடம் பழகினேன். பின்னர் நண்பர் ரவி அவர்களின் யோகா வகுப்புக்களுக்குச் சென்றேன்.

இவற்றோடு இது சார்ந்த புத்தகங்கள், இறுவெட்டுக்களிலிருந்தும் தேடிக் கற்றுக் கொண்டேன். இவற்றோடு இன்றும் ஒவ்வொரு வருடமும் கோயம் புத்தூர், தமிழ்நாடு, மலேசியா, கேரளா போன்ற இடங்களுக்குச் சென்று யோகாவை இன்றும் பயின்று கொண்டிருக்கின்றேன்.

**★ தற்பொழுது எங்கெங்கு யோகா வகுப்புக்களை நடத்தி வருகிறீர்கள்?**

தும்பளை அஞ்சலியகம் என்கின்ற உளவளத்துணை நிலையத்திலும் பருத்தித்துறை ஞானாலயத்திலும் புற்றளை பிள்ளையார் கோவிலிலும் பயிற்றுவித்து வருகின்றேன்.

**★ கராத்தேக்கும் யோகாவிற்கும் உள்ள தொடர்புகள் பற்றி?**

கராத்தேக்காட்டாவில் 60 அல்லது 70 ஒழுங்கமைக்கப்பட்ட அசைவுகள் இருக்கும். மனம் சரியாகச் சீராக இருந்தால்தான் காட்டாவைச் சீராகச் செய்ய முடியும். மன ஒருங்கிணைப்பை வைத்திருக்க முடியாவிட்டால் காட்டாவை இடையில் மறந்து போய்விடுவோம். ஆக கராத்தேயிலும் மன ஒருமைப்பாடு இருக்கிறது. யோகாவிலும் மன ஒருமைப்பாடிருக்கிறது. கராத்தேயில் அமைதியாக இருந்து கொண்டே பயிற்சிகளை மேற்கொள்வர். யோகாவில் தியானம் இருக்கிறது. இரண்டும் மன அமைதியை ஏற்படுத்துகின்றது.

கராத்தேயில் மூச்சுப் பயிற்சி இருக்கிறது. யோகாவிலும் மூச்சுப் பயிற்சி இருக்கிறது. இவ்வாறு இரண்டிற்கும் ஒற்றுமையுள்ளன.

**★ இறுதியாக நீங்கள் கராத்தே யோகா உலகிற்கு மனம் திறந்து கூறுவது?**

உண்மையாக எந்தக் கலையாக இருந்தாலும் ஆசிரியர்கள் போலியாக இருக்கக்கூடாது. உண்மையாக எங்களை நம்பி மாணவர்கள் வருகின்றார்கள்.

மனம் திறந்து தமது கேள்விகளை கேட்கின்றார்கள். நாம் அவர்களுக்கு விடை சொல்கின்றவர்களாக இருக்க வேண்டுமே தவிர அரை குறையாக இருக்கக் கூடாது. ஆசிரியர்கள் பூரணத்துவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்கு தகுதி இருக்கா? இல்லையா? இல்லை என்றால் எந்தத் துறையில் தகுதி இருக்கிறதோ அந்தத் துறைக்குள் போக வேண்டியது தான்.

எனக்கு நிறையத் தெரியும் என்று விட்டு பணம் உழைப்பதை நோக்கமாகக் கொள்ளக் கூடாது .

உளப்பூர்வமாகச் செய்ய வேண்டும். எங்களை நாங்களே புடமிட்டுப் பார்க்க வேண்டும். நான் கூட ஒவ்வொரு வருடமும் கராத்தேப் போட்டியில் கலந்து கொள்ளுவதற்குக் காரணம் நான் எங்க நிற்கிறேன் என்று பார்க்கத்தான். எனக்குத் தகுதி இருந்தால் தான் எனது மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும். அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தக்கலையையும் நாங்கள் பூரணமாகக் கற்றால் தான் நாங்கள் மற்றவர்களுக்குக் கற்பிக்க முடியும். சாகும் வரைக்கும் படித்துக் கொண்டு படிப்பிக்க வேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**



# வசீம் தாஜுடீன் கொலை வழக்கு; மேலும் மூவர் விரைவில் கைது

(கொழும்பு)

**பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் படுகொலை வழக்கில் மேலும் மூவர் வெகுவிரைவில் கைது செய்யப்படவுள்ளனர். எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் குறித்த மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்படவிருப்பதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.**

தாஜுடீன் கொலை வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள சாலிகா மைதானத்திற்கு அருகில் தீயினால் கருகிய நிலையிலிருந்த காரிலிருந்து தாஜுடீன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் ஒரு விபத்து எனக் கூறிய போதிலும் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில் இதுவொரு திட்டமிடப்பட்ட கொலை என தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து வசீம் தாஜுடீன் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில சாட்சியங்களை மறைதத குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் விளக்கமறியலில் வைககப்பட்டுள்ளனர்.

கடந்த வழக்கு விசாரணையின்போது இந்த வழக்கு சம்பநதப்பட்ட விசாரணைகளை விரைவுபடுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் போதியளவு சாட்சியங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் இதனடிப்படையில் மேலும் மூவர் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# அத்துமீறும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு ரூ.17 கோடி அபராதம்

## இலங்கை அரசு அதிரடி அறிவிப்பு



இலங்கைக் கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாகப் பிரவேசிக்கும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு 17 கோடி ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படும் என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர எச்சரித்தார்.

நாட்டின் கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடுவதற்காக பிரவேசிக்கும் தென்னிந்திய மீன்பிடி படகுகள் உள்ளிட்ட வெளிநாட்டு படகுகள் மீது 30 இலட்சம் ரூபா முதல் 17 கோடி ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படவுள்ளது. இதற்காக நாட்டின் சர்வதேச மீன்பிடிச் சட்டத்தை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்க அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

நாட்டுக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு எவ்வித அபராதமும் இதுவரையில் விதிக்கப்படவில்லை. மீன்பிடிப்படகுகள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டு வந்தது.

எதிர்வரும் காலங்களில் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன், குறித்த படகுகளை விடுவிப்பதற்கு உண்மையான உரிமையாளர்கள் நாட்டுக்கு வர வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்படவுள்ளது. சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு படகுகளில் மீன்பிடியில் ஈடுபடுவதனால் உள்நாட்டு மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த விவாதத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

# அம்பாந்தோட்டை துறைமுகம் தனியாருக்கு விற்பனை செய்யப்படமாட்டாது - அர்ஜுன

(கொழும்பு)


அம்பாந்தோட்டை துறைமுகம் தனியாருக்கு விற்பனை செய்யப்படமாட்டாது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மீதான வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டு வளங்களை தனியாருக்கு விற்பனை செய்யக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே நல்லாட்சி அரசு இருக்கின்றது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதே எமது நோக்கம். முதலீட்டாளர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.

தனியாரையும் இணைத்துக்கொண்டு உரித்தையும் விட்டுக்கொடுக்காது முன்னோக்கிப் பயணிப்பதே எமது திட்டமாகும். மாறாக துறைமுகத்தை தனியார் மயப்படுத்தும் திட்டமில்லை என



அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மரண தண்டனையிலிருந்து தப்பித்த ராணியைப் பார்க்க தலதா விஜயம்



சவுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அதில் இருந்து விடுவிக்கப்பட்டு நாடு திரும்பிய கலேவெலயைச் சேர்ந்த மாணிக்கம்ராணி என்ற பணிப்பெண்ணை சந்திக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள நேற்று முன்தினம் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தார்.

இதன்போது குறித்த பெண்ணுக்கு வாழ்வாதாரத்துக்கு தேவையான வசதிகளையும் அவரின் வீட்டு நிர்மாணப் பணிகளையும் செய்து தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

சவுதிக்கான இலங்கை தூதரக அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வழிநடத்தலின் கீழ் குறித்த பெண்ணை மரணதண்டனையிலிருந்து விடுவிக்க முடியுமானதாக தெரிவித்தார்.

இதன் மூலம் இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியில் கிடைக்கப்பெற்றுள்ள அங்கீகாரம் தெளிவாகுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண் ஒருவரை காப்பாற்ற முடியாமல் போனதையும் அவர் இங்கு நினைவுபடுத்தினார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி இந்த பணிப்பெண்ணின் பாதுகாப்பில் இருந்த 9 மாதக் குழந்தை உயிரிழந்தது.

இதனை அடுத்து அவருக்கு 10 ஆண்டு காலம் சிறைத் தண்டனையுடன் மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.

எனினும் மேன்முறையீட்டை அடுத்து அவருக்கான தண்டனை ஒன்றரை யாண்டுசிறைவாசமாக குறைக்கப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சில தவறுகளுக்கான அபராதம் ஒருவருடம் தாமதமாகும்-நிமால்

வீதி விதிமுறைகளை மீறி இடம்பெறும் சில தவறுகளுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடுவதை ஒரு வருடகாலம் வரை தாமதித்து சலுகை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இடதுபக்கமாக முந்திச் சென்றால் 25 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடுவது அதிகம். எனினும் அது குறித்து மறுபரிசீலனை செய்ய முடியும் என்றும் பஸ் சங்கங்களுடன் பேசி இது தொடர்பில் முடிவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். போக்குவரத்து மற்றும் துறைமுக அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில்இவ்வருடம்இலங்கை போக்குவரத்து சபைக்கும் தனியார் பேருந்துகளுக்கு மிடையில் ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரிப்பதை பிரதான இலக்காக கொண்டுள்ளோம்.

தனியார் பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை தற்பொழுது அதிகரித்துள்ளன. இதனால் புதிதாக பேருந்துகள் இறக்குமதி செய்வதனை நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.

எம்மிடம்பணம்இல்லாமையினால் தான் நாம் சீனாவிடமும் இந்தியாவிடமும் உதவி கேட்க வேண்டியுள்ளது. எம்மிடம்பணம்இருந்தால்இந்நிலை எமக்கு ஏற்படாது. நாம் 6 மில்லியன் மக்களை எதிர்பார்த்தே விமான ஓடுபாதைகளை தீர்மானித்தோம்.

தற்பொழுது பயணிகளின் எண்ணிக்கை 9 மில்லியனாக அதிகரித்துள்ளது. இநத ஓடுபாதைகளை திருததி அமைக்காவிடில் எதிர்காலத்தில் விமானங்கள் இலங்கை விமான நிலையத்தில் தரை இறக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படலாம்.

இதனால் நாம் காப்புறுதிகளை இழக்க நேரிடும். எதிர்காலத்தில் இலங்கைக்கு வரக்கூடிய 30 மில்லியன் மக்களை கருத்தில் கொண்டு நாம் ஓடுபாதைகளை தீர்மானிக்கவுள்ளோம்.

இ.போ.சவிலுள்ள ஊழியர்களுக்கான ஊழியர் சேம இலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் பணிக்கொடை அனைத்தையும் நாம வழங்கியுள்ளோம். அடுத்த வருடம் அனைத்து பேருந்துகளுக்கும் புதிதாக ஒரு டிக்கெட் வழங்கும் இயந்திரத்தை வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## சைவ வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று

யாழ். சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் திருமதி ம.குணபாலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், கௌரவ விருந்தினராக தேசிய சமூக சேவைகள் திணைக்கள சிரேஷ்ட விரிவுரையாளரும் பழைய மாணவனுமான வ.ஜெயரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


## நோயாளர் நலன்புரிச் சங்கம் மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி

### பணிநிலை வேண்டுகை

பதிவெண்-KR/DS/SS/Ngo/2016/50

**பதவி:-** பொதுமக்கள் தொடர்பு அலுவலர்:-1

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் தினத்தன்று கீழ்வரும் சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**வயது:-** 30 வருடங்களுக்கும்-45 வருடங்களுக்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமை:-**

1. இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த.(சாதாரண) பரீட்சையில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
2. க.பொ.த. உயர் தர் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமை:-**

1. கணனி அறிவு, ஆங்கில மொழியறிவு என்பவற்றுடன் இலகுரக வாகன (Light vehicle) அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. நலிவுற்ற மக்களுக்கு உதவும் மனப்பாங்கும் சமூக வேலைத் திட்டங்களில் பங்குகொள்ளும் திறனும் இருத்தல் வேண்டும்.

சம்பளம் நேர்முகத் தேர்வில் தெரிவிக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தாமாகவே தயாரிக்கப்பட்ட சுய விபரத்தினை 15.12.2016 ஆம் திகதிக்கு முன்னர் கி.சின்னராசா, தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**சி.ஜீவநாயகம், செயலாளர்.**

(சி-6517)



## இராமநாதன் நுண்கலைக்கழகம் கலைப்பீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கல்வியாண்டு 2014/2015

**நுண்கலைமாணி இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் 2ம், 3ம், 4ம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டிற்கான பரீட்சைகள்**

நுண்கலைமாணி இசை,நடனம் மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறி இரண்டாம் மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இரண்டாம் மூன்றாம் நான்காம் வருட இசை,நடனம் மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறி மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து 09.12.2016 ஆம் திகதிக்கு முன்னர் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மீள்பரீட்சார்த்திகளும் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளப்பட்டோரும் பரீட்சை பெறுபேற்றினை தரமுயர்த்துவதற்கு ஒவ்வொரு பாட அலகிற்கு ரூபா 250 வீதமும் யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.


விண்ணப்ப முடிவுத் திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர் யாழ்.பல்கலைக்கழகம்
23.11.2016

(சி-6513)


## 2 ஆம் ஆண்டு நினைவில் அகவை அறுபது

தோற்றம் 30 II 1956



மறைவு 14 II 2014

**அமரர் பேரம்பலம் ஞானசூரியன்**

சூரியன் மறைந்திட சூழ்ந்தது இருள்
இன்றைய நாள் மணிவிழா நாயகன்
மதி உணர் அகவை மணியர்பதியான் கழலடி
சேர்ந்து ஆண்டுகள் இரண்டு விதிவலியது
இனி எதுவரினும்
'ஒரு பொல்லாப்பும் இல்லை'

(6741)

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில்.

என்றும் நினைவுடன்
மனைவி
தேவகாந்தி ஞானசூரியன்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 914

Search for people, places and things  Nagendram  Home


சர்மி





சிந்து




லிங்கா ரூபன்




கமல்




தர்மா




அனு அனுஜன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதிப்பது தொடர்பான வாக்கெடுப்பு இன்று

(பியாங்யாங்)

**வடகொரியா மீது புதிய பொருளாதாரத் தடை விதிப்பது தொடர்பான வாக்கெடுப்பை ஐ.நா. பாதுகாப்புச் சபை இன்று புதன்கிழமை நடத்தவுள்ளது.**

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உத்தரவை மீறி தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை அரங்கேற்றி வரும் வடகொரியா உலக நாடுகளின் எதிர்ப்பையும் சம்பாதித்து வருகின்றது. இந்நிலையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின் மீது இந்த வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய 5 நாடுகளுக்கு வீற்றோ அதிகாரம் உள்ளது. பாதுகாப்புச் சபையில் உள்ள 15 நாடுகளுக்கும் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று இதற்கான வாக்கெடுப்பு இடம்பெறும். பெரும்பாலும் வடகொரியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்கள் மீது தடை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் பல்வேறு பொருளாதாரத் தடைகளுக்கு உள்ளாகியிருக்கும் வடகொரியாவுக்கு இத்தடையும் பேரிடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

## பாக். முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு பிடியாணை



பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்புக்கு பலுசிஸ்தான் உயர் நீதிமன்றம், பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு நடந்த இராணுவ நடவடிக்கையின் போது, பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாண தேசிய தலைவராக இருந்த நவாப் அக்தர் கான் புக்டி கொல்லப்பட்டார். இக்கொலைக்கு பாகிஸ்தானின் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த முஷாரப்புக்கு தொடர்பு இருப்பதாக, புக்டியின் மகன் நவாப்சதா ஜமில் புக்டி வழக்குப் பதிவு செய்தார்.

நீண்ட நாள் நடந்து வந்த குறித்த வழக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரித்த உயர் நீதிமன்றம், முஷாரப்புக்கு பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் முஷாரப் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அக்தர் ஷா, தனது கட்சிக்காரர் இந்த உயர் நீதிமன்றத்தை மதிப்பதாகவும், ஆனால் பாதுகாப்புக் காரணங்களால் அவரால் உயர் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது எனவும் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து உயர் நீதிமன்றத்தில் ஆஜராக வரும் முஷாரப்புக்கு கூடுதல் பாதுகாப்பு வசதிகளை செய்ய வேண்டும் என அரச நிர்வாகத்துக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். (இ-7)

## ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்றுக்காலை தாக்குதல் நடத்தியுள்ளன.

சிரியாவில் ஐ.எஸ் .தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள Golan Heights என்ற பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினரால் முன்னதாக பயன்படுத்தப்பட்ட ஓர் முகாமை ஐ.எஸ். தீவிரவாதிகள் பயன்படுத்தி வருவதாகவும் அந்த இடத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இஸ்ரேலிய படையினர் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருந்ததற்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

## தாய்லாந்தில் குரங்குத் திருவிழா



தாய்லாந்தில் நடைபெற்ற குரங்குகளுக்கு பழங்கள் வழங்கும் விழாவில் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குரங்குகளுக்கு பழங்கள் வழங்கி மகிழ்ந்தனர்.

தாய்லாந்தில் உள்ள Lopburi மாகாணத்தில், ஆயிரக்கணக்கான குரங்குகள் காணப்படுகின்றன. இதனால் இம்மாகாணம் குரங்கு மாகாணம் என்றே அழைக்கப்படுகிறது.

இங்கு ஒவ்வொரு வருடமும் குரங்குகளுக்கு பழங்கள் உள்ளிட்ட உணவு வகைகளை வழங்கும் விழா நடைபெறுவது வழக்கம். அதன்படி நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் குரங்குகளுக்கு பல்வேறு வகையான பழங்களை சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் வழங்கி மகிழ்ந்தனர்.

இதற்காக பல்வேறு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சுமார் 3 ஆயிரம் குரங்குகளுக்கு பழங்கள் உள்ளிட்ட உணவுகள் வழங்கப்பட்டன. (இ-7)

## இரு முக்கிய மாவட்டங்கள் அரச படைகள் வசமானது





சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் முக்கிய நிகழ்வாக கிளர்ச்சியாளர்களிடம் இருந்து இரண்டு முக்கிய மாவட்டங்களை அரசுப் படைகள் மீட்டன.

சிரியா நாட்டில் ஜனாதிபதி Bashar al-Assad இற்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் பல ஆண்டுகளாக ஆயுத மேந்திப் போராடி வருகின்றனர். இவர்களது கட்டுப்பாட்டில் பல பகுதிகள் உள்ளன.

இந்தப் பகுதிகளை மீட்க அரசுப் படைகள் கடுமையாக போரிட்டு வருகின்றன. இராணுவத்தினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஐந்தரை ஆண்டுகளுக்கும் மேலாக மோதல் நீடித்து வருகிறது. இந்நிலையில், முக்கிய கேந்திரமான Aleppo நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள Jabal Badro மற்றும் Hanano என்ற இரண்டு மாவட்டங்களை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து சிரியா அரசுப்படைகள் தற்போது மீட்டுள்ளன.

கடந்த இரண்டு நாட்களாக ரஷ்ய விமானப் படையின் உதவியுடன் தீவிரமாக வான்வழித் தாக்குதல் நடத்தி இப்பகுதிகளை மீட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இந்தியா பேச்சுவார்த்தைக்கு முயன்றால் பாக்.,வரவேற்கும்

### தூதுவர் அப்துல் பாசித் தெரிவிப்பு

இந்தியா-பாகிஸ்தான் பேச்சுவார்த்தைக்கு இந்தியா முயன்றால் அதை பாகிஸ்தான் சாதகமானதாக பரிசீலனை செய்யும் என அந்நாட்டுத் தூதர் அப்துல் பாசித் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் எல்லைக் கோட்டு பகுதியில் ஊரி, சர்ஜிக்கல் தாக்குதல்களைத் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகின்றது. அத்துமீறல்களில் ஈடுபடுவதாக இருநாட்டு இராணுவ வீரர்களும் ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைக்கு தயார் என்று பாகிஸ்தான் கடந்த வாரம் வலியுறுத்தி இருந்தது. மேலும், பேச்சுவார்த்தைக்கு தயார் ஆனால் காஷ்மீர் பிரச்சினை குறித்து கண்டிப்பாக விவாதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் நிபந்தனை விதித்தது. இந்நிலையில், இருநாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு இந்தியா முயன்றால் பாகிஸ்தான் அதனை சாதகமானதாக பரிசீலிக்கும் என்று இந்தியாவிற்கான அந்நாட்டுத் தூதர் அப்துல் பாசித் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறும் ஆசியாவின் அமைதி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அந்நாட்டின் வெளியுறவுத்துறை ஆலோசகர் சர்தாஜ் அஜிஸ் அடுத்த வாரம் இந்தியா வருகின்ற நிலையில் இந்தக் கருத்தினை அவர் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பதவி விலகத் தயார் ஜனாதிபதி அறிவிப்பு



ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருக்கும் தென்கொரியாவின் பெண் ஜனாதிபதி பார்க் கியுன் ஹே பதவியில் இருந்து விலகத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளார்.

தென்கொரியாவில் ஜனாதிபதி பார்க் கியுன் ஹே தலைமையிலான அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் பெருகிவருகிறது. ஜனாதிபதியின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரசு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகவும், அரசின் மிகமுக்கிய இரகசிய கோப்புகளை ஆய்வு செய்து வருவதாகவும் குற்றச்சாட்டுகள் கிளம்பின.

மேலும், ஜனாதிபதியுடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தை பயன்படுத்தி, பல நிறுவனங்களிடம் இருந்தும் நன்கொடைகளை பெற்று, இவர் ஆதாயம் அடைந்து வருவதாகவும் அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் குற்றம்சுமத்தின.

இதையடுத்து, கடந்த முதலாம் திகதி சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் விசாரணை நடைபெற்றும், வழக்குகள் பதிவு செய்யப்பட்டும் வருகிறது.

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருக்கும் சோய் சூன் சில்லுடன் தொடர்பு வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் 'சாம்சங்' எலக்ட்ரோனிக்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான அலுவலகங்களில் அந்நாட்டு அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

தனது தோழியின் செயலுக்கு வருத்தம் தெரிவித்த ஜனாதிபதி பார்க் கியுன் ஹே, இவ்விவகாரத்தில் மக்களிடம் வெளிப்படையாக மன்னிப்பும் கேட்டார். இதற்கிடையில், ஜனாதிபதி பார்க் கியூன் ஹே, அரசுப் பணத்தை செலவிட்டு ஆண்களுக்கான பாலின எழுச்சியை தூண்டும் வயகரா மாத்திரைகளை அதிகளவில் வாங்கி இருப்பது தெரிய வந்துள்ளது.

இதுபற்றி ஜனாதிபதி மாளிகை அளித்த விளக்கத்தில் ஆபிரிக்கா உள்ளிட்ட கடல்மட்டத்துக்கு மேலே அமைந்துள்ள நாடுகளுக்கு ஜனாதிபதி செல்லும் போது அவருடன் செல்லும் அதிகாரிகளுக்கு ஏற்படும் படபடப்பை போக்க இந்த மாத்திரைகள் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்த விளக்கத்தை எதிக்கட்சியினரும் பொதுமக்களில் பெரும்பாலானவர்களும் ஏற்றுக்கொண்டதாக தெரியவில்லை.

இந்நிலையில்,ஜனாதிபதி பார்க் கியுன் ஹேவுக்கு மக்களிடையே இருக்கும் ஆதரவு மற்றும் எதிர்ப்பு தொடர்பாக இந்தவாரம் வெளியான கருத்துக்கணிப்பில் அவர் மேலும் 4 சதவீதம் பின்தங்கியுள்ளார். அவரது செயற்பாட்டை எதிர்த்து கருத்து தெரிவிப்பவர்களின் எண்ணிக்கை 93 சதவீதமாக உயர்ந்துள்ளது.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் தென்கொரியா ஜனாதிபதியின் செல்வாக்கு இதற்கு முன்னர் எப்போதும் இல்லாதவகையில் தற்போது அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளதாக அந்நாட்டின் பிரபல ஊடகங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.

இந்நிலையில், ஜனாதிபதி பார்க் கியூன் ஹே உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் சுமார் 13 இலட்சம் மக்கள் பங்கேற்ற பேரணியும் ஆர்ப்பாட்டமும் சியோல் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மெழுகுவர்த்திகளை ஏந்தியபடி ஆட்டம், பாட்டத்துடன் பேரணியில் பங்கேற்ற மக்கள் பார்க் கியூன் ஹே கைது செய்யப்பட வேண்டும், அவரை சிறையில் அடைக்க வேண்டும் என்று முழக்கமிட்டபடி ஜனாதிபதி மாளிகையை நோக்கி அணிவகுத்து சென்றனர்.

இந்நிலையில், நேற்று தொலைக்காட்சி வழியாக நாட்டு மக்களிடையே பார்க் உரையாற்றினார்.

சட்டப்படி ஒரு நிலையை பாராளுமன்றம் எடுத்தால் ஜனாதிபதி பதவியைவிட்டு விலகவும், ஆட்சி அதிகாரத்தை பாராளுமன்றத்தால் அடையாளம் காட்டப்படும் நபரிடம் ஒப்படைக்கவும் நான் தயாராக இருக்கிறேன்.

தற்போது, நாட்டில் நிலவும அமைதியின்மையையும், இறுக்கமான சூழ்நிலையையும் போக்க என்ன செய்ய வேண்டும் என்பதை ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளை சேர்ந்த எம்.பிக்கள் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும் என தனது உரையின் போது பார்க் தெரிவித்துள்ளார். (இ-7)

# விமான விபத்தில் 76பேர் உயிரிழப்பு!

(பொலிவியா)

**பொலிவியாவில் இருந்து கொலம்பியாவிற்கு பயணித்த நிலையில் விபத்திற்கு உள்ளாகிய விமானத்தில் பயணித்தவர்களில் 76 பேர் உயிரிழந்துள்ளனர் என கொலம்பிய அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது.**




72 பயணிகள் மற்றும் 9 விமான பணியாளர்களுடன் பயணித்த தனியாருக்கு சொந்தமான குறித்த விமானம் நேற்று முன்தினம் நள்ளிரவு மெடெலின் பகுதியில் விபத்திற்கு உள்ளாகியிருந்தது.

மின்சாரக் கோளாறு காரணமாக ஏற்பட்ட இவ்விபத்தில் விமானம் மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டது. இந்த நிலையில், ஐந்து பேர் மாத்திரமே காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் உயிரிழந்துள்ளதாகவும் அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரேசிலின் உள்ளூர் காற்பந்து அணியான Chapecoense இன் வீரர்களும் குறித்த விமானத்தில் பயணித்த நிலையில் அவர்களில் மூவர் மாத்திரமே உயிர் பிழைத்துள்ளதாகவும், அவர்களுடன் மேலும் ஒரு விமான ஊழியர் மற்றும் ஊடகவியலாளர் ஆகியோரும் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிவியாவில் இருந்து கொலம்பியாவிற்கு பயணித்த நிலையில் 81 பேருடன் நள்ளிரவு விபத்திற்கு உள்ளான விமானத்தில் இருந்து இதுவரை 6 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் 2 பிரேசில் காற்பந்து வீரர்கள் அதில் உள்ளடங்குவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மோடியின் அதிகாரத்தை பறிக்கும் வரை போராட்டம்

## மம்தா பானர்ஜி ஆவேசம்



"பழைய ரூபாய் நாணயத்தாள் செல்லாத விவகாரத்தில் பிரதமர் இல்லம் முன் போராட்டம் நடத்த உள்ளதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கொல்கத்தாவில் நேற்று முன்தினம் கல்லூரி சதுக்கத்தில் இருந்து எஸ் பிளனேடு வரை வீதியில் ஊர்வலமாக சென்று மோடிக்கு எதிராக கோஷம் எழுப்பினார்.

பின்னர் நடந்த ஆர்ப்பாட்டத்தில் அவர் பேசியதாவது, பழைய ரூபாய் நாணயத்தாள்கள் செல்லாது என்ற அறிவிப்பால் ஒட்டு மொத்த நாடும் பாதிக்கப்பட்டுள்ளது. வங்கிகளில், ஏரிஎமகளில் பணம் இல்லை. ஏற்கனவே 80பேர் இறந்து விட்டார்கள்.

ஆனால், மோடி இந்த விவகாரத்தில் தொடர்ச்சியாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நல்ல தூக்கத்தில் இருக்கிறார். அதே சமயம் பணமில்லா பொருளாதாரத்திற்கு மாறும்படி நாட்டு மக்களுக்கு பாடம் எடுக்கிறார்.

இந்தியாவில் உள்ள பெரும்பாலான கிராமப்புற மக்கள்பணம் இல்லாவிட்டால் மக்கள் எதை சாப்பிடுவார்கள்? அவர்கள் டெபிட் கார்டுகளையும், மொபைல் போனையும் சாப்பிடுவார்களா? மோடியால் எனது குரலை தடுக்க முடியாது.

நான் மீண்டும் டில்லி சென்று மோடிக்கு எதிராக குரல் எழுப்புவேன். பேரணி நடத்துவேன். தேவைப்பட்டால் மோடியின் இல்லம் முன் போராட்டம் நடத்துவேன். அவரது அதிகாரத்தை பறிக்கும் வரையிலும் எனது போராட்டத்தை நான் நிறுத்த மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# மத்திய அரசைக் கண்டித்து நாடு முழுவதும் போராட்டம்

ரூபாய் நாணயத்தாள் பிரச்சினையில் மத்திய அரசைக் கண்டித்து இந்தியா முழுவதும் எதிர்க்கட்சிகள் போராட்டம நடத்தின. இதில் கேரளா மற்றும் திரிபுராவில் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

கறுப்பு பண புழக்கத்தை ஒழிக்கும் வகையில் ரூ.500, ரூ.1,000 நாணயத்தாள்கள் செல்லாது என மத்திய அரசு அறிவித்தது. இதனால் நாடு முழுவதும் பணத்தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே இந்த பிரச்சினையை முன்வைத்து மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன.

இந்த போராட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்தும் வகையில் காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் நாடு தழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து இருந்தன. நேற்றைய தினத்தை 'மக்களின் கோபாவேச நாளாக' அறிவித்து இருந்த காங்கிரஸ் கட்சி ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணிகளுக்கும், இடதுசாரிகள் 12 மணி நேர முழு அடைப்புக்கும் அழைப்பு விடுத்து இருந்தன.

நாடு முழுவதும் அமைதியான முறையில் நடந்த இந்த போராட்டங்களுக்கு அதிக ஆதரவு காணப்பட்டது. ஆனால இடதுசாரிகள் ஆளும் கேரளா மற்றும் திரிபுராவில் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

கேரளாவில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் பெரும்பாலும் இயக்கப்படவில்லை. இதனால் பல இடங்களில் ரயில் பயணிகள் மற்றும் நோயாளிகள் பொலிஸ் வாகனங்கள் மூலம் அழைத்து செல்லப்பட்டனர். மேலும் கார், ஆட்டோ போன்ற தனியார் வாகனங்கள் இயங்கின.

மாநிலம் முழுவதும் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டு இருந்தன. எனினும் வங்கிகள் உள்ளிட்ட அரசு அலுவலகங்களும் முக்கிய தனியார் நிறுவனங்களும் பொலிஸ் பாதுகாப்புடன் இயங்கின. ஆனால் போக்குவரத்து வசதி இல்லாததால் இந்த நிறுவனங்களில் ஊழியர்களின் வருகை குறைவாக இருந்தது.

மத்திய அரசின் நடவடிக்கையால் கூட்டுறவுத்துறை அனுபவித்து வரும் சிக்கல்களை களைய வலியுறுத்தி திருவனந்தபுரத்தில் ராஜபவன் நோக்கி காங்கிரஸார் பேரணி நடத்தினர். (இ-7)

# கம்போடியப் பிரதமரின் இலங்கை விஜயம் ரத்து



(கொழும்பு)


கம்போடியப் பிரதமர் ஹூன் சென், இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை இரத்துச் செய்துள்ளார்.

கம்போடிய பிரதமர் இலங்கை உள்ளிட்ட நான்கு நாடுகளுக்கு விஜயம் செய்வதற்கு திட்டமிட்டிருந்ததாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதானமாக பாகிஸ்தானுக்கும் கம்போடியாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 65 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு கம்போடியப் பிரதமர் திட்டமிட்டிருந்தார்.

இந்த நிலையில் ஹூன் சென்னுக்கும் பாகிஸ்தான் செனட் சபையின் தலைவர் மியான் ரசா ராபானிக்கும் இடையிலான கலந்துரையாடலை அடுத்து கம்போடியப் பிரதமரின் விஜயத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் நிறைவு செய்யப்பட வேண்டிய மிக முக்கிய பணிகள் இருப்பதனால் இந்த விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக கம்போடியப் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-7-10)




# இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் அதிகரிக்கும் ஐ.எஸ். செயற்பாடுகள்

## அட்மிரல் ஹரி ஹரிஸ் கவலை

(சென்னை)

**இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்திவரும் இஸ்லாமிய அரசின் (ஐ.எஸ்.) நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை தொடர்பில் அமெரிக்கா கவலையடைந்துள்ளதாக அமெரிக்காவின பசுபிக் கட்டளைப் பீடத்தின் தளபதி அட்மிரல் ஹரி ஹரிஸ் தெரிவித்துள்ளார்.**



நேற்றுமுன்தினம் இலங்கையில் ஆரம்பமாகிய காலி கடல்சார் பாதுகாப்புக் கலந்துரையாடல் -2016இல் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவர் தனது உரையில், இந்திய பசுபிக் பிராந்திய நாடுகள் மத்தியில் கடல்சார் பாதுகாப்புத் தகவல்களைப் பரிமாறுவது தொடர்பாகவும் கடல்சார் ஆதிக்க விழிப்புணர்வு தொடர்பாகவும் ஆழமான கருத்துக்களைப் பதிவு செய்தார்.

எந்தவொரு தனிப்பட்ட நாட்டினாலும் கட்டுப்படுத்த முடியாத கடற்பரப்பில் எவரும் சுதந்திரமாகப் பயணிக்க முடியும் எனவும் தென்சீனக் கடலில் சுதந்திரமாகப் பயணிப்பதற்கான முறைமை ஒனறு உருவாக்கப்பட வேணடும் எனவும் அமெரிக்கக் கடற்படைத் தளபதி கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை இந்திய பசுபிக் பிராந்திய நாடுகள் எதிர்நோக்கும் பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் இப்பிராந்தியத்தின் கடல்சார் கூட்டுறவை ஏற்படுத்தக்கூடிய மையம் ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் காலி கடல்சார் பாதுகாப்புக்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லம்பா தெரிவித்தார்.

அத்துடன் பிராந்திய கடலசார் ஒத்துழைப்பிற்கான பொறிமுறை ஒன்றையும் உருவாக்க வேண்டும் எனவும் இந்தியக் கடற்படைத் தளபதி கோரிக்கை விடுத்தார்.

பிராந்திய கடல்சார் ஒத்துழைப்பு தொடர்பில் இந்தியாவினால் உருவாக்கப்பட்டு வரும் முறைமைகள் தொடர்பான விரிவான விளக்கம் ஒன்றையும் அட்மிரல் லம்பா தெரிவித்தார். இந்தியாவானது தனது பிராந்திய நாடுகளுடன் பல்வேறு கூட்டு கடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இந்தியக் கடற்படைத் தளபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

இவ்வாறான ஒத்துழைப்பின் பயனாகவே, 2014 தொடக்கம் அரேபியக் கடலில் எவ்வித கடற்கொள்ளையும் இடம்பெறவில்லை எனவும் இந்தியக் கடற்படைத் தளபதி சுட்டிக்காட்டினார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 'முதலில் அயல்நாடுகள்' என்கின்ற கோட்பாடானது இப்பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை உருவாக்க உதவியுள்ளது எனவும் இந்தியக் கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

தீவிரவாதிகள், கடற்கொள்ளையர்கள், ஆட்கடத்தல்கள், கடல் ஆதிக்கம் போன்ற பல்வேறு பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்கள் நிலவுகின்றன. நாடுகளுக்கு இடையிலான கடல்சார் முரண்பாடுகள் போன்ற பாரம்பரிய அச்சுறுத்தல்கள் பல தற்போது தீர்க்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, 2014இல ஐ.நா. நிரந்தர நீதிமன்றான ஹேக்கில் வைத்து இந்தியா மற்றும் பங்களாதேஷ ஆகிய இரு நாடுகளும் நீதிமன்றின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டதன் காரணமாக இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான கடல்சார் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

கடல் அலைகள் உயருதல் போன்ற காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குவதற்கான பொறிமுறைகளை வரைவதன் மூலம் கரையோரத்தில் வாழும் மக்கள் சந்திக்கும் இழப்புக்களைத் தவிரக்க முடியும் எனவும் ஆகவே இதற்கான முயற்சிகளை கடல்சார் வல்லுநர்கள் முன்னெடுக்க வேண்டும் எனவும் இந்தியக் கடற்படைத் தளபதி தனது உரையின் போது கேட்டுக் கொண்டார்.

ஐ.நா. கடல்சார் சட்டத்தின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகளுக்கு ஏற்ப தென்சீனக் கடலில் சுதந்திரமாகப் பயணிப்பதற்கான நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உதவுமாறும் அட்மிரல் லமபா வலியுறுத்தினார்.

இதேவேளை கடல்சார் பிரச்சினைகளுக்கு ஜனநாயக அணுகுமுறை மூலம் தீர்வு காணுமாறும் எந்தவொரு நாடும் கடல்சார் பாதுகாப்புத் தொடர்பில் 'சர்வவல்லமை படைத்தவர்கள்' என்றோ அல்லது 'அதிலிருந்து தூரவிலக வேண்டும்' என்றோ நினைக்க முடியாது எனவும் சீனக் கடற் படையின் துணைத் தளபதி றியர் அட்மிரல் வாங்க டசோங்க் தெரிவித்தார்.

அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்ட பின்னர் கடல்சார் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் சீனத் துணைத் தளபதி கோரிக்கை விடுத்தார்.

சமாதானம் மற்றும் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட பூகோள அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமாகவே சீனாவால் ஒரு அணை மற்றும் ஒரு பாதை என்கின்ற கடல்சார் பாதுகாப்புத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படுவதாகவும் அட்மிரல் டசோங்க் தெரிவித்தார்.

இலங்கை தனது கடற்பரப்பில் நிலவிய பயங்கரவாத அச்சுறுத்தல்களைத் தோற்கடித்துள்ளதாகவும் இதன்காரணமாக இது தனது பிராந்தியக் கடற்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்காற்ற முடிவதாகவும் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜயகுணவர்த்தன தெரிவித்தார். (இ-7-10)

# இந்தியக் கடற்படைத் தளபதி பாதுகாப்பு செயலர் சந்திப்பு



இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா, இலங்கை பாதுகாப்புச் செயலரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஐந்து நாள் அதிகார பூர்வ பயணமாக இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா கடந்த 27 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தார்.

காலி கலந்துரையாடலில் பங்கேற்கும் வகையிலும், இலங்கை அரச மற்றும் பாதுகாப்பு தரப்பினரைச் சந்திக்கும் நோக்கிலும், அட்மிரல் சுனில் லன்பாவின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்ற இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா, இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியுடன் பேச்சுக்களை நடத்தினார்.

இருதரப்பு முக்கியத்துவம வாய்ந்த விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திபபில் கலந்துரையாடப்பட்டுள்ளது.(இ-7-10)

வாழ்க்கையில் ஏதாவது அதிசயம் நிகழ்த்த வேண்டும் என்று நினைத்தேன். அது இவ்வளவு சீக்கிரம் நடந்துவிட்டது. ~ *அக்பானி டாரிகே*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியல்வாதி அஞ்சாத சிங்கன்

நடிகர் கவுண்டமணியின் நகைச்சுவைகள் வித்தியாசமானவை. நினைத்து நினைத்துச் சிரிக்க வைப்பவை.

செந்திலுடனான ஒரு வாழைப்பழத்துக்கான சண்டை முதல் கரகாட்டக்காரன் படத்தில் சொர்ப்பன சுந்தரி வைத்திருந்த கார் வரையான நகைச் சுவைகள் நிறைந்த அர்த்தத்தோடு எந்தக் காலத்துக்கும் பொருந்தக்கூடியான நகைச்சுவைகள்.

இதில் அரசியல்வாதி அஞ்சாத சிங்கன் என தன்னை அறிமுகப்படுத்தும் கவுண்டமணி ஒரு மரக் காலைக்குச் சென்று தன்னைப் பிரபல்யமானவனாகக் காட்டுவதற்காக அந்த மேசையில் இருந்த தொலைபேசியை எடுத்து ஓர் அமைச்சருடன் உரையாடுவது போல பேசிக் கொள்கிறார்.

அரசியல்வாதி அஞ்சாத சிங்கனுக்கு அமைச்சர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு என்பதைக் காட்டுவதற்காக அப்படி ஒரு திட்டம்.

கவுண்டமணி கதைத்து முடித்த பின்னர் அந்த மரக்காலையின் முகாமையாளர் ரெலிபோன் வயரை எடுத்துக் காட்டி வயர் அறுந்து ஒரு கிழமையாகிறது என்கிறார்.

எதுவும் சொல்ல முடியாத கவுண்டமணி தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்கிறார்.

இங்குதான் அரசியல்வாதிகளின் திருகுதாளத்தை கவுண்டமணி மிகச் சிறப்பாக வெளிப்படுத்துவார் .

அது சரி, அரசியல்வாதி அஞ்சாத சிங்கன் பற்றி இப்போது எதற்கு என்று நீங்கள் கேட்டால் எல்லாம் எங்கள்அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கருத்தால் எழுந்ததுதான்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன ஒரு நல்ல மனிதர். தமிழ் மக்களின் விவகாரத்தில் நியாயபூர்வமாக நடந்தவர் – நடப்பவர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் போக்கில் திருப்தி இல்லாததால் மகிந்த ராஜபக்ஷவை விட்டு வெளியேறியவர்களில் முதலாமவர் என்று கூறக்கூடியவர்.

அவரின் நேர்மையான நியாயமான கருத்துக்களால் தமிழ் மக்கள் அவர் மீது மிகுந்த மரியாதை கொண்டுள்ளனர்.

எனினும் மாவீரர் தினத்துக்கு முன்னதாக மாவீரர் தின நிகழ்வில் எத்தனை பேர் வருகிறார்கள் பார்க்கலாம் என்று கூறியிருந்தார்.

அமைச்சர் ராஜிதவின் மேற்போந்த கூற்றை வாசித்தவர்கள் அமைச்சர் ராஜிதவா இப்படிக் கூறியவர்; இருக்க முடியாது என்று நினைத்தனர்.

எனினும் அவர் கூறியது உண்மை என்ற போது அப்படியானால் அதற்குக் காரணம் இருக்கும் என்று கருதினர்.

அந்தக் காரணத்தை இரண்டு வகையாக எடுத்துக் கொள்ளலாம். அதிலொன்று மாவீரர் தின நிகழ்வில் அதிகளவில் தமிழ் மக்கள் பங்கேற்க வேண்டும் என்று விரும்பி அமைச்சர் ராஜித, மாவீரர் நிகழ்வில் எத்தனை பேர் வருகிறார்கள் பார்க்கலாம் என்று கூறுவதன் மூலம் அதிகமானவர்களை அந்த நிகழ்வில் பங்கேற்கச் செய்யலாம் என்று கருதியிருக்கலாம். இது ஒரு காரணம்.

மற்றைய காரணம். மாவீரர் தின நிகழ்வில் எத்தனை பேர் வருகிறார்கள் பார்க்கலாம் என்று கூறுவதன் ஊடாக மாவீரர் தின நிகழ்வில் பலர் பங்குபற்ற மாட்டார்கள்; எனவே அது பற்றி சிங்கள மக்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று கூறுவதற்காக அப்படிச் சொல்லியிருக்கலாம்.

அதாவது தென்பகுதிப் பேரினவாதிகளின் எதிர்ப் பிரசாரங்களில் இருந்து சிங்கள மக்களை விடுப்பதற்காக இப்படியொரு கருத்தை அவர் பிரயோகித்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

எதுவாயினும் இதை அரசியல்வாதி அஞ்சாத சிங்கனின் மொழியில் கூறுவதானால் அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்பதே சாலப் பொருந்துடையது.

## உணவின் தரம் மற்றும் மோசடி; 51 பேருக்கு எதிராக வழக்கு

உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு உணவகங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்கள் மூலம் இதுவரை 51 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய உணவு பாதுகாப்பு வாரம் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியது. நாடு பூராகவும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பேக்கரி, சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகில் அமைந்துள்ள சிறிய சிற்றுண்டிச்சாலைகளை சோதனை செய்து வருகின்றனர். அதனடிப்படையில் சுகாதார அதிகாரிகள் இதுவரை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 4421 பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப நாளான திங்கட்கிழமை ஹோட்டல்கள், பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் என 4421 உணவகங்கள் சோதிக்கப்பட்டுள்ளன. அதில் 208 உணவகங்களின் உணவு வகைகள் ஆகாரத்துக்கு உகந்ததல்ல என தெரிவித்து அவை அழிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பாடசாலை சிற்று ண்டிச்சாலைகள் மற்றும் பாடசாலைக்கு அருகில் அமைந்திருக்கும் சிற்றுண்டிச்சாலைகள் என 682 சிற்றுண்டிச்சாலைகள் சோதிக்கப்பட்டுள்ள. அவற்றில் 112 சிற்றுண்டிச்சாலைகளில் ஆகாரத்துக்கு பொருத்தமற்ற உணவு வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 12 சிற்றுண்டிச்சாலைகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (இ-7-10)

## அதிரடிப்படையை தொல்லைப்படுத்த வேண்டாம் கூட்டு எதிர்க்கட்சி அரசாங்கத்திற்கு அறிவுரை

நாட்டிற்கு மகத்தான சேவையைப் புரிந்துவரும் STF அதிரடிப் படையை தொல்லைக்குட்படுத்த வேண்டாம் என இணைந்த எதிர்க்கட்சித் தலைவர் தினேஷ் குணவர்த்தன அரசிற்கு நேற்று அறிவுறுத்தியிருந்தார்.

அரசுக்கு அவர் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தும்படி கூறிப் பெற்றுக் கொள்ளாது அவரைக் கைது செய்தது தேவையற்ற நடவடிக்கையாகும் என அவர் அதனைக் கண்டித்துக் கூறுகிறார்.

அரச வாகனத்தைப் பயன படுத்துவதற்கான ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயைச் செலுத்தாது போனதற்காக அவரைக் கைது செய்யாது அத்தொகையை அவரிடமே கேட்டுப் பெற்றுக் கொண்டிருக்கலாம் எனக் கூறுகிறார் தினேஷ்.

நாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்த STF மற்றும் அது போன்ற ஏனைய தரப்புக்களையும் இந்த அரசு ஏன் இவ்வாறு தொல்லைக்குட்படுத்துகிறது என்று தொடர்ந்தும் கேட்டிருந்த உறுப்பினருககு சட்டம்- ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க பதிலளிக்கும்போது சட்டம் அதனைச் செய்யுமென்றும் அவரைப் பிணையில் விடுவது பற்றி நீதிமன்றம் கவனித்துக் கொள்ளுமென்று இவற்றுக்கெல்லாம் அரசின் அனுசரணையிருக்குமென்றும் கூறினார். பாவித்த அவ்வாகனத்தை ஒய்வுக்கு முன்னர் கையளிக்க அவர் மறுத்திருந்தது பற்றியும் அவர் எடுத்துக் கூறியிருந்தார்.

## போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை 72 சீனிக் கொள்கலன்கள் பொலிஸால் தடுத்துவைப்பு

பிரேஸில் நாட்டிலிருந்து வந்த மேலும் 72 சீனிக் கொள்கலன்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் சுங்கத் திணைக்களத்தில் பரிசோதனைகளுக்காகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளன.

ஏற்கனவே வந்திருந்த 34 கொள்கலன்களில் சுங்கப் பரிசோதனையை மாத்திரம் முடித்துக்கொண்டு வெளியேறிய 20 கொள்கலன்கள் மீதான விசாரணை பொலிஸ போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப் படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கை வழியாக போர்த்துக்கல்லுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் அனுப்பப்படும் இத்தகைய கொள்கலன்களில் கொக்கெய்ன் போதைப் பொருள் கடத்தப்படும் சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்நிலையில், கொள்கலன்களைத் தீவிரப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு இலங்கை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் சர்வதேச பொலிஸாருக்கு அறிவித்தல் கொடுத்திருப்பதாக பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## ஐக்கிய நாடுகளின் சமாதானப் படைச் செயற்பாடுகளில் இணைந்து செயற்படவிருக்கும் இலங்கை இராணுவம்

தற்போது மாலியில் இடம் பெற்றுவரும் ஐ.நா. சமாதானப் படை நடவடிக்கைகளில் போருக்கும் தயாரான வழிப்பாதுகாப்பு அணிகளுடன் ஓர் பாதுகாப்பு பட்டாலியனாக இலங்கை இராணுவ அணியொன்றை ஈடுபடுத்துவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக தெரிகிறது.

ஐ.நா. சமாதானப் படை நடவடிக்கைகளில் இலங்கை முப்படைகளுடன் பொலிஸ் காவற்படையும் சேர்த்து மொத்தமாக ஆயிரத்து 215 படைவீரர்களையும் சேவையில் அர்ப்பணிப்புடன் கூடிய ஓர் சமாதானப் படைப்பங்காளியாக இலங்கையின் அரச படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

வெவ்வேறான எழுவித சமாதான நடவடிக்கைகளில் இவர்களெல்லோரும் எழு அணிகளாக கடப்பாட்டுடன் கூடிய அணிகளாக பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர். சமாதானத்திற்கான அவர்களது இப்பணிகளை இதுவரையில் 12 ஆயிரத்து 210 இலங்கை இராணுவ மற்றும் பொலிஸ் படையினர் சேவையாற்றியுள்ளதுடன் சமாதானப் படை நடவடிக்கைகளின் போது ஐந்து வீரர்கள் மரணமடைந்துமுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு சமர்ப்பித்துள்ள அமைச்சரவை ஆவணங்களின்படி இலங்கை இராணுவம் படைத்துறை வாகனங்கள், உபகரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளது. கண்ணி வெடி அகற்றுவது மற்றும் வெடிபொருள் செயலிழக்க வைப்பது போன்ற உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன.

இவற்றின்பொருட்டு முறையான சர்வதேச விலை கோரலுக்கான போட்டி முறைகள் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுமட்டில் விலைகூறலுக்கான 13 போட்டியாளர்களில் இதுவரை ஐந்து பேர் தமது ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர். இக்கம்பனிகள் பிரித்தானியா, இஸ்ரேல, ஜேர்மனிமற்றும்சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்தவையாகும்.

## ‘அவதானம் பிரதானம்’

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் “அவதானம் பிரதானம்” எனும் வீதி நாடகம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது.

இன்று புதன்கிழமை முற் பகல் 11.30 மணிக்கு ஆனைக்கோட்டை தமிழ்க் கலவன் பாடசாலையிலும் பிற்பகல் 2.30 மணிக்கு கட்டுவன் மேற்கு பிரதேசத் தலும் இடம் பெறும். (இ-3-51)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

“அடர்ந்த காட்டின் நடுவில் ஏற்படக்கூடிய அபாயம், சன நெருக்கமுள்ள நகரத்தின் தெருவைக் கடக்கும் ஒரு பாதசாரிக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை விடக் குறைவானதாகவே இருக்கும் என்று அடித்துச் சொல்லலாம்.”

*–ஹென்னத் அண்டர்சன் (வேட்டைக்காரராக இருந்து இயற்கையியலாளராக மாறியவர்)*

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

JSAC

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16
2016

உடலியலில் மாற்றமுண்டேனும் பெண்கள் வலுவிழந்தவர்கள் அல்ல... வேற்றுமையை ஒழிப்போம். ஒன்றுபட்டு வாழ்வோம்.

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நிஜமான படிப்பு எது?




✦ மீன்கொத்திப் பறவை போன்று உலகத்தில் வாழ்ந்திரு. அது நீருக்குள் மூழ்குகின்ற போது சிறகுகளில் கொஞ்சம் நீர் ஒட்டிக் கொண்டிருக்கிறது. வெளியில் வந்து சிறகுகளைக் குலுக்கியதும் ஒட்டிக் கொண்டிருக்கும் நீர் அகன்று விடுகிறது. அதுபோல் உலக வாழ்க்கையில் பற்றற்றவராய் இருங்கள்.

✦ பணபலம் உடையவர்கள் தங்களுடைய செல்வத்தை சொந்த நலனுக்கு மட்டுமல்லாது தங்களுக்குத் தெரிந்து கஷ்டப்படுகின்ற மக்களுக்கும், பிணியால் வாடும் நோயாளிகளுக்கும் உதவி புரிவதைத் தங்களின் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். உலகைப் படைத்த இறைவனே அனைத்துமாய் இருக்கிறான் என்ற மெய்ஞ்ஞானம் வரும் வரையில் மனிதனுக்குப் பிறவிகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும்.வெறும் படிப்பால் மட்டுமே பயன் ஒன்றும் விளையாது. கற்பது என்பதே கடவுளைப் பற்றி அறிவதற்கான உபாயம் என்பதை உணர்ந்து கற்க வேண்டும்.மற்ற படிப்பெல்லாம் வெறும் உலகியல் கல்வியாகும்.

✦ கடவுளை அறிவது என்பது என்றென்றும் உறுதுணையாய் நம்முடனே வரும்.தெய்வீகப் படங்களை, நமது அறையில் கண் பார்வையில் படும்படி மாட்டி இருப்பது நல்லது. ஏனென்றால் நாம் காணுகின்ற காட்சியினால் மனம் நல்ல அருள் உணர்வுகளை மேலும் பலப்படுத்திக் கொள்ளும்.

# அரச உத்தியோகத்தர் வலைப்பந்தாட்டம் வடமாகாண கல்வித்திணைக்களம் சம்பியன்




இலங்கை அரச சேவைகள் சங்கம் நடத்திய அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாண கல்வித்திணைக்கள அணி கிண்ணத்தை சுவீகரித்தது.

அண்மையில் இரண்டு பிரிவுகளாக கொழும்பு பல்கலைக்கழக மைதானத்திலும் கொழும்பு ரொரிண்டன் விளையாட்டு மைதானத்திலும் இப்போட்டி நடைபெற்றது.

குறித்த போட்டியின் இறுதியாட்டத்தில் வடமாகாண கல்வித்திணைக்கள அணியை எதிர்த்து அநுராதபுரம் தாதியர் அணி மோதிக் கொண்டது.

போட்டியின் முதல் பாதியாட்டத்தில் வடமாகாணக் கல்வித்திணைக்கள அணி 11.7 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியாட்டத்திலும் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்திய வடமாகாண கல்வித்திணைக்கள அணி போட்டி முடிவில் 30:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

மேலும் குறித்த போட்டியின் கலப்பு ஆட்டத்தில் யாழ்.மாவட்டச் செயலக அணி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# பிரேசில் காற்பந்தாட்ட அணியை ஏற்றிச் சென்ற விமானம் விபத்து



## COPA SUDAMERICANA 2016

பிரேசில் நாட்டின் செப்போசோஷஸ் காறபந்தாட்ட கழக அணியை ஏற்றிச்சென்ற விமானமொன்று கொலம்பியாவின் மெடலின் விமான நிலையத்தில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து இடம்பெறும் போது விமானத்தில் வீரர்கள் உட்பட 72 பயணிகள் இருந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க காற்பந்தாட்ட கிண்ணத்தின் இறுதிப்போட்டிக்கு குறித்த வீரர்கள் அழைத்துச் செல்லப்படும் போதே குறித்த விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பாகிஸ்தானை வீழ்த்தி தொடரை வென்று வரலாறு படைத்தது நியூசிலாந்து அணி




பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் வாக்னர், சவுத்தீ மிரட்ட நியூசிலாந்து அணி 138 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தவிர, தொடரையும் 2-0 என கைப்பற்றி வரலாறு படைத்தது.

நியூசிலாந்து சென்ற பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் போட்டியில் நியூசிலாந்து வென்றது. இரண்டாவது டெஸ்ட் ஹாமில்டனில் நடந்தது. முதல் இன்னிங்சில் நியூசிலாந்து 271, பாகிஸதான் 216 ஓட்டங்கள் எடுத்தன. நியூசிலாந்து இரண்டாவது இன்னிங் சில் 313 ஓட்டங்களுக்கு 'டிக்ளேர்' செய்தது. 369 ஓட்டங்கள் இலக்குடன் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில், விக்கெட் இழப்பின்றி ஒரு ஓட்டங்கள் எடுத்திருந்தது. சமி அஸ்லாம் (1), அசார் அலி (0) அவுட்டாகாமல் இருந்தனர்.

நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. சமி, அசார் அபாரமாக செயற்பட்டனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். சான்ட்னர் 'சுழலில்' அசார் அலி (58) சிக்கினார். தேநீர் இடைவேளையின்போது, பாகிஸ்தானுக்கு 211 ஓட்டங்கள் (34 ஓவர்) தேவைப்பட்டது. 9 விக்கெட் கைவசம் இருந்ததால், வெற்றி பெறும் நிலை இருந்தது. இதன்பின் ஆட்டம் தலை கீழானது.

### வாக்னர் அசத்தல்:



எதிரணி 'வேகங்கள்' அசத்தினர். பாபர் 16, சர்பராஸ் 19 ஓட்டங்களில் கிளம்பினர். சமி (91) சத வாய்ப்பை இழந்தார். சவுத்தீ பந்தில் யூனிஸ் கான் (11) ஆட்டமிழந்தார். அசாத் சபிக் டக்-அவுட்டானார். வாக்னர் 'வேகத்தில்' முகமது ஆமிர், வகாப் ரியாஸ் டக்-அவுட்டாகினர். மற்றவர்களும் ஏமாற்ற, பாகிஸ்தான் அணி 230 ஓட்டங்களுக்கு ஒல்-அவுட்டாகி வீழ்ந்தது. முகமது ரிஸ்வான் (13) அவுட்டாகாமல் இருந்தனர். நியூசிலாந்து சார்பில் அதிகபட்சமாக வாக்னர் 3 விக்கெட் வீழ்த்தினார்.

### வரலாற்று வெற்றி:

கடநத 1985இல் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை நியூசிலாந்து வென்றிருந்தது. இதன் பின், நடந்த இரு அணிகளுக்கு இடையிலான 12 தொடரில் (7 தோல்வி, 5 'சமநிலை') ஒரு முறை கூட நியூசிலாந்து கைப்பற்றியது இல்லை.

தற்போது, இதற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

# ஜெயசூர்யாவுக்கு பிறகு சாதித்து காட்டிய தரங்க


இலங்கை அணி அண்மையில் சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடர் மற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடியது.

டெஸ்ட் தொடரை கைப்பற்றிய இலங்கை அணி முத்தரப்பு ஒரு நாள தொடரையும் கைப்பற்றி அசத்தியுளளது. இத்தொடரில் இலங்கை அணியின் தலைவராக இளம் வீரர் உபுல தரங்க தெரிவு செய்யப்பட்டார்.

அவர் தலைமையிலான இலங்கை அணியும் தொடரை வெற்றிகரமாக முடித்தது. இந்நிலையில் இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான ஜெயசூர்யா மற்றும் டிலசானுக்கு பிறகு இலங்கை அணியின் தலைவராக தரங்க சாதித்து காட்டியுள்ளார். இதற்கு முன்னர் இலங்கை அணியின் தலைவராக ஜெயசூர்யா பதவி வகித்த போது முதல் தொடரை வெற்றிகரமாக முடித்தார், அதே போன்று டில்சானும் வெற்றிகரமாக முடித்தார். அதற்கு பின்னர் தற்போது இலங்கை அணியின் தலைவராக பதவி ஏற்று முதல் தொடரை தராங்க வெற்றிகரமாக முடித்துள்ளார.

இதைத் தொடர்ந்து தொடரை வெற்றிகரமாக முடித்த இவருக்கு ஜெயசூர்யா, ஜெயவர்த்தன மற்றும் இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள் பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர். (க)

# உலக சுப்பர் சீரிஸ் பட்மின்டன் தொடர் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து தகுதி



டுபாயில் நடைபெறும் உலக சுப்பர் சீரிஸ் பட்மின்டன் தொடரில் விளையாட இந்திய வீராங்கனை பி.வி.சிந்து தகுதி பெற்றுள்ளார்.

இதேபோல் டிசெம்பர் 14 - 18 வரை நடைபெறும் உலக சுப்பர் சீரிஸ் பட்மினடன் தொடரில் விளையாடும் வாய்ப்பை சாய்னா நேவால் நழுவ விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கருணா கைதாகி...

அரச வாகனத்தை தவறான முறையில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான சுமார் 9 கோடி ரூபாயிற்கும் மேல் பெறுமதியான வாகனமொன்றை தவறான முறையில் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் பாரிய நிதி மோசடிகளை ஆராயும் விசேட பொலிஸ் பிரிவிற்கு நேற்று செவ்வாய்க்கிழமை காலை அழைக்கப்பட்ட கருணா அம்மானிடம் பொலிஸார் வாக்குமூலமொன்றை பதிவு செய்தனர்.

பின்னர். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவர் கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி முன் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

நீதிமன்றத்தில் கருத்துக்களை தெரிவித்த பொலிஸார். விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாததால் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள். அமைச்சு பதவி முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட வாகனத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளுமாறு சந்தேக நபர் ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவித்த போதிலும். அந்த செயலகத்தின் அதிகாரிகள் எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை என்று அறிவித்தார்.

கருத்துக்களை ஆராய்ந்த நீதிபதி. சந்தேக நபரை வரும் 07ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேக நபருக்கு பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்கள் இருப்பதாக அவரது வழக்கறிஞர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி சிறைச்சாலைக்குள் அவருக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (இ-11)

## அரச மருத்துவ...

பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர் எனவும் அவசர சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் இடம்பெறாது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதாக வடமாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்க இணைப்பாளர் வைத்திய கலாநிதி த.காண்டீபன் அறிவித்துள்ளார். (செ-9,4)

## விடுதலைப் புலிகளை...

இவ்வாறான சம்பவங்களால் இனவாதம மீண்டும் தலைதூக்குமென எச்சரித்துள்ளார். (இ-11)

## குழந்தைகளின்...

தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தனின் 75ஆவது அகவையை முன்னிட்டு சிவசேனை அமைப்பு சைவ அறப்பணி நிதியத்தினூடாக இந்த செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது. 4ஆவது. 5ஆவது குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களுக்கு தமிழில் பெயர் சூட்டினால் அவர்கள் இந்த உதவியைப் பெறமுடியும். அதிலும் அந்தக் குழந்தைகளை பராமரிப்பதற்கான உதவி தேவைப்படுவோர் அல்லது பொருளாதாரத்தில் பின்னடைந்தோர் இந்த உதவியைப் பெறமுடியும்.

கார்த்திகை மாதம் இறுதியில். சச்சிதானந்தனின் பிறந்த நாளன்று முதற்கட்டமாக 75 மழலைகளின் பெயரில் பணம் வைப்பிலிடப்படவுள்ளது. 2016ஆம் ஆண்டு 4ஆவது. 5ஆவது குழந்தையாகப் பெற்றெடுத்த, உதவி தேவைப்படுவோர் இதற்காக தெரிவுசெய்யப்படவுள்ளனர். கஷ்ட நிலைக்கு மத்தியிலும் குழந்தைகளைப் பெற்றெடுத்து தமிழிலில் பெயர் சூட்டப்பட்டிருக்கும் குழந்தைகளைத் தேர்வு செய்வதற்கான பணியில் சிவசேனையின் மாவட்ட இணைப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சைவத் தமிழ் அன்பர்களின் நிதியுதவிகளைப் பெற்றே சிவசேனை இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது. எனவே. இந்தப் பணி தொடர்வதற்கு அனைவரையும் ஆதரவுக்கரம் நீட்டுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த தொடர் பணியிலும் பெண் தலைமைத்துவ மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் பணிகளிலும் ஈடுபட விரும்புபவர்கள் ஆகக்குறைந்தது 200 ரூபாயை மாதாந்தம் வைப்பிலிட முன்வருமாறும் சைவத் தமிழ் உறவுகளிடம் சிவசேனை அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை சிவசேனையின் இணைப்பாளர்கள் சிவத்திரு கோடீசுவரன் 0779994424. காண்டீபன் 0770870414 ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளலாம். இந்த சைவ அறப்பணி நிதியத்தின் மாதாந்த நிதிக் கூற்று அறியத்தரப்படும் என்றும் சிவசேனை அறிவித்துள்ளது. (இ-4)

## 500 ஏக்கர் காணி...

சம்பூரில் தங்களை மீள்குடியேற்றம் செய்யுமாறு அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில். சம்பூர் காணியை தொடர்ந்தும் மின் உற்பத்தி வலயமாகவே வைத்திருப்பதற்கு தீர்மானித்திருப்பதாக மின்சக்தி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக சம்பூர் பகுதியில் இடம்பெயர்ந்து 4 முகாம் களில் வாழ்கின்ற சிலர் மாற்றுக் காணிகளில் மீள்குடியேற்றப்பட்டுள்ள போதிலும். இன்னும் சிலர் முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

தமது சொந்தக் காணியிலேயே தங்களை குடியேற்றுமாறு அவர்கள் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அங்கு நிர்மாணிப்பதற்காக முன்மொழியப்பட்டிருந்த அனல் மின் நிலையம். நிர்மாணிக்கப்பட மாட்டாது என்று. மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு கடந்த செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் சம்பூரிலுள்ள 500 ஏக்கர் காணி தொடர்ந்தும் மின் உற்பத்தி வலயமாகவே வைத்திருப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக நேற்று அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது எழுப்பப்பட்ட வினாவுக்கு பதிலளிக்கும் போதே மின்சக்தி அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

“இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 500 ஏக்கர் காணி சம்பூரில் உள்ளது. அந்தக் காணியில் என்ன செய்வது என்பது குறித்த இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கவில்லை. எவ்வாறாயினும் இந்தப் பகுதியை மின்சக்தி உற்பத்தி வலயமாகவே வைத்திருப்பதே எமது கருத்தாகும். இது குறித்து பிரதமரும் எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான மின்சாரப் பாவனை காணப்படுவதனால் கெரவலப்பிட்டியவை மையமாகக் கொண்டும். அத்துடன் அம்பாந்தோட்டையிலும் சூரிய சக்தியி லான மின்சார உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு எதிர் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7,10)

## கருணாகுழுவுடன்...

ண்டாவது பிரதிவாதியின் சட்டத்தரணியான சிரேஷ்ட சட்டத்தரணி அசித் சிறிவர்தனவின் குறுக்கு கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே குறித்த சாட்சியாளர் மேற்படி சாட்சியத்தைப் பதிவு செய்தார். இந்த விடயத்தை சாட்சியாளர் வெளிப்படுத்திய போது மன்றில் பிரசன்னமாகியிருந்த சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய கடும் எதிர்ப்பினை முன்வைத்ததால் மன்றில் சிறிது நேரம் வாதப் பிரதிவாதங்கள் நீடித்தன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் அவரது மெய் பாதுகாவலராக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் லக்ஷ்மன் ஆகியோரை படுகொலை செய்த விவகாரம் தொடர்பிலான சாட்சி விசாரணைகள் நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்திய திலகவின் நேரடி கண்காணிப்பில் சிறப்பு ஜூரிகள் முன்னிலையில் ஆரம்பமானது.

முதலாவது சாட்சியாளரான அரச சாட்சியாக மாற்றப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பிரித்திவிராஜ் மனம்பேரி முதலாவது சாட்சியாக நேற்றுமுன்தினமும் சாட்சியமளிக்க ஆரம்பித்தார்.

பிரதிவாதி சட்டத்தரணிகளான அசித் சிறிவர்தன மற்றும் அனோஜ பிரேமரத்னவின் குறுக்குக் கேள்விகளுக்கு பதிலளித்தவாறு அவர் அளித்த சாட்சியம் வருமாறு.

அசித்:2005ஆம் ஆண்டு காலப்பகுதியின் கிழக்கில் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் சேவையாற்றிய காலப்பகுதியில் கருணா குழுவுடன் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டீரா?

பதில்:ஆம்

அசித்: அந் நடவடிக்கைகள் எவ்வாறானது என விளக்கமுடியுமா?

பதில்: அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்ட, உட்படாத பகுதிகளில் புலிகள் அமைப்புக்கு எதிராக கருணா குழுவினருடன் இணைந்து தாக்குதல்களை நடத்துவது. அவர்களை கொலை செய்வது.

அசித்: நீர் கூறுவது அனைத்தும் உண்மை என்பது தானே உம்முடைய நிலைப்பாடு?

பதில்:ஆம்

அசித்: இவ்வழக்கின் குற்றம் மற்றும் சதி தொடர்பில் நீர் கூறுவதும் அப்படியானால் உண்மை தானா?

பதில்:ஆம்

அசித்:உம்மை பொறுத்தவரை இரு நிலைப்பாடுகள் உள்ளன. ஒன்று, ரவிராஜ் கொலையை வெளியே கூறாமைக்கு உயிர் அச்சுறுத்தல் காரணம். மற்றையது, கொல்லப்பட்டது ரவிராஜ் தான் என்பதை நீர் வானொலி ஊடாகவே அறிந்துள்ளீர். அப்படித்தானே?


பதில்:ஆம்

அசித்: நீர் பொய் சாட்சி கூறுகின்றீர் என நான் பரிந்துரைக்கின்றேன்.

பதில்:அதனை நான் நிராகரிக்கின்றேன்.

அசித்: ரவிராஜை கொல்லப் போகும் திட்டம் உமக்கு ஏற்கெனவே தெரியும் தானே?

பதில்:இல்லை. *(சாட்சி நாளை தொடரும்)*




2017ஆம் ஆண்டு தரம் 8இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கவென அரசாங்கத்தால் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடப் புத்தகத்தின் முன் பக்கத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் என சரியான முறையில் எழுதப்பட்டிருந்தது. இருப்பினும் அதே புத்தகத்தின் பக்கவாட்டு பகுதியில் தமிழ்மொழியும் அலக்கியமும் என எழுதப்பட்டுள்ளது. (இ-1)

### எனது குடும்பத்துக்குப் பாதுகாப்புத் தேவை

# கஞ்சா வைத்து கணவனை கைது செய்ய புலனாய்வுத்துறை திட்டம் தீட்டுகிறது

## குடும்பப் பெண் குற்றச்சாட்டு






கூறும் குழுமத்தின் அமர்வு நேற்றைய தினம் யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.அதில் கலந்து கொண்டு சாட்சியம் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் சாட்சியம் அளிக்கையில்.

நான் அல்லாரை வடக்கு கொடிகாமம் பகுதியில் வசித்துவருகிறேன். எனது கணவன் தமிழீழ காவல் துறையில் கடமையாற்றி இருந்தார். கடந்த 2009ஆம் ஆண்டு எனது கணவர் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். பின்னர் தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு தற்போது என்னுடன் உள்ளார்.

அவர் கடும் சித்திரவதைகளுக்குள்ளான காரணமாக அவர் உடல் ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். உடல்நிலை முடியாத நிலையிலும் சில வேளைகளில் கூலி வேலைக்கு சென்று வருகிறார்.

அண்மையில் எமது வீட்டுக்கு பொலிஸ் புலனாய்வுத் துறையினர் என தெரிவித்து வந்த சிலர் கஞ்சாவை கொண்டு வந்து எமது வீட்டில் வைத்துவிட்டு எனது கணவரை கைது செய்ய முற்பட்டார்கள். கஞ்சா என்றாலே எவ்வாறு இருக்கும் என்று அன்றுதான் எமக்கு தெரியும். நாம் அனைவரும் கூக்குரல் இட்டு மிகவும் போராடியதில் எனது கணவரை விட்டுச்சென்றார்கள்

இந்த விடயத்தை வெளியில் சொல்லக் கூடாது என சொன்னார்கள். அதனால் நான் இது தொடர்பாக யாரிடமும் முறைப்பாடு செய்யவில்லை. பயத்தின் காரணமாகவே இத்தனை நாளாக வெளியில் சொல்லாமல் இருந்தேன்.

இவ்வாறான அச்சுறுத்தல் காரணமாக எனது கணவர் பயத்தில் வேலைகளுக்கு வெளியில் போவதில்லை. எனக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத காரணத்தினால் நான் கூலிவேலைக்கு சென்று வருகிறேன்.

பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு மிகவும் துன்பமான நிலையில் இருந்து மீண்டு வந்த போதிலும் மீண்டும் மீண்டும் எம்மை இராணுவத்தினர் துன்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். எமக்கு உதவி செய்வதாக கூறி எனது கணவர் இருப்பதை உறுதி செய்வதற்காகவே அடிக்கடி தொலைபேசியில் விரட்டுகிறார்கள். மாவீரர் தினத்தன்றும் அவர்களிடம் இருந்து எனது கணவனை தேடி தொலைபேசி அழைப்பு வந்திருந்தது.

எமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனது கணவருக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு தேவைப்படுவதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் எமக்கான வாழ்வாதார உதவிகளையும் பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார். (இ-9)

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-6511)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப் பெண் தேவை. தொடர்புகளுக்கு:
077 704 1767, 075 203 5424

## சிறுநீரகம் தேவை

யாழ் நகரில் வசிக்கும் ஒருவருக்கு A அல்லது O இரத்த வகையிலுள்ள சிறுநீரகம் தேவை.
0775026827
0775723236
(6704)


## படுகொலைப்...

புக்கொள்ள வேண்டும். எனினும் இந்த எண்ணிக்கையில் பெருந்தொகையான தமிழ் ஊடகவியலாளர்கள் வடக்கில் யுத்தம் காரணமாகவே உயிரிழந்தனர். ஐந்து ஊடகவியலாளர்கள் தெற்கில் கொலை செய்யப்பட்டனர். இது தொடர்பில் விசாரணை நடைபெறுகின்றது.

ஊடகவியலாளர்கள் படுகொலை தொடர்பில் முன்னைய ஆட்சியின் மீது குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் இலங்கை வரலாற்றில் முதல் ஊடகவியலாளர் படுகொலை 1981 ஆம் ஆண்டிலேயே பதிவாகியது. விமல எஸ்.சுரேந்திரகுமார் கொலை செய்யப்பட்டார். அக்கொலையை அப்போதைய பிரபல அமைச்சரே செய்தார். எனினும் அது விபத்து என மூடிமறைக்கப்பட்டது. காரணம் இந்த கொலையுடன் தொடர்புடையவர் தற்போதும் பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவம் செய்பவர். எனினும் தண்டனை இல்லை.

இதுபோல முன்னைய ஆட்சிகளின் போது பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1981 முதல் 1991 வரை 62 ஊடகவியலாளர்களும் 1994 முதல் 2005 வரை 37 ஊடகவியலாளரகளும் 2005 முதல் 2010 வரை 44 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர். தகவல் அறியும் சட்ட மூலத்தில் விதிக்கப்பட்ட தடைகளை நீக்க வேண்டும். தகவல் பெறுவதற்காக அனைத்திற்கும் அனுமதி வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-7-10)


## Mobile Phone Repairing Course



(C-6516)

SmartPhoneகள் உட்பட அனைத்து Phoneகளிலும் பயிற்சியளிக்கப்படும்

9th Batch start on
03.12.2016
Weekend Batches

சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

## அதிரடி விலைக்குறைப்பு!!



என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

இப்பொழுது

அனைத்து விளம்பரப் பலகைகள் மற்றும் பனர் பிறிண்டிங் வேலைகளுக்குமான விலைகள் சடுதியாக குறைக்கப்பட்டுள்ளன!

எமது உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களை நாம் இப்போது குறைந்த விலையில் நேரடியாக இறக்குமதி செய்வதனால் இவ் விலைக்குறைப்பானது சாத்தியமாகியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



3 வருட உத்தரவாதத்துடன்

| ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற் இல்லாமல்) High Quality | ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற்றுடன்) High Quality | ஒருபக்க ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை (Backlit Light Board) High Quality |
|---|---|---|
| ~~250/-~~ | ~~350/-~~ | ~~650/-~~ |
| 190/- சதுர அடி | 250/- சதுர அடி | 490/- சதுர அடி |

(C-6509)

அதி உயர்தர டிஜிற்றல்பனர் பிறிண்டிங்
சதுர அடி ~~50/-~~ 38/- இலிருந்து

ANDRA DIGITAL IMAGE

டிஜிற்றல் பிறிண்டிங் துறையில் 200க்கு மேற்பட்ட கொழும்பு மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்

021 221 7279 / 021 222 8929 / 077 7481696

## GROUP CLASSES
## தரம் 6 முதல் O/L வரை

| பாடம் | தமிழ்மொழி மூலம் | ஆங்கிலமொழி மூலம் |
|---|---|---|
| கணிதம் | A. ஜெயம் | T. தயாளன் |
| விஞ்ஞானம் | R.S. உமாசுதன் V. சண் | A. கஜேந்திரன் |
| தமிழ் | K. துஷ்யந்தன் | M. நித்தி |
| ஆங்கிலம் | P. மதன் | R. மோகன் |
| ஆங்கில இலக்கியம் | P. மதன் | |

விரும்பிய பாடம் கற்கலாம்

ஆரம்பம்
3-12-2016 சனிக்கிழமை
பி.ப.3.15

(6746)

UNIVERSAL
கந்தர்மடம்
(யாழ். இந்துமகளிர் கல்லூரி அருகில்)
T.P. 077 0459855 , 077 5442160


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## தமியம்பிள்ளை அருட்பிரகாசம்

(முன்னை நாள் இ.போ.ச. ஊழியர்)

பிறப்பு : 08.04.1930 – இறப்பு : 30.11.2015



காலத்தின் வேகத்தில் உம் ஜீவன் ஓய்ந்து
ஓராண்டும் ஆனதோ
ஓராண்டு என்ன பல்லாண்டு ஆனாலும்
மறந்திடுமோ உம் கண்டிப்பும் அரவணைப்பும்

உம் பிள்ளைகட்காய் வாழ்ந்தீர்
உம் பிள்ளையை இழந்த பேரப்பிள்ளைகள்
எமக்காயும் வாழ்ந்தீர்
எமக்கோர் தேவையெனில் உமக்கேது ஓய்வு
தேவையின் நிறைவுகண்டு ஓயுமே உம் கால்கள்

நாம் உயர்வடைய நல்லாசானாயும்
நல் தந்தையாயும் இருந்தீரே ஐயா
உம் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

(6749)


## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK – 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி
● நெல்லியடி ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6359)

## SILVER SHIELD SOCKS



கடந்த 30 வருடங்களாக யாழ்.நகர் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தரமான நீடித்த பாவனை மலிவு விலை சிறந்த தயாரிப்பு

SILVER SOCKS
SHIELD காலுறைகள்

பாடசாலைகளுக்கு தேவையான சொக்ஸ் வகைகள் பாடசாலைக்கு ஏற்ற வர்ணங்களில் மிக மலிவு விலையில் தயாரித்து பெற்றுக்கொள்ள முன்கூட்டி பதிவு செய்து கொள்ளலாம்.

(சி-6515)

தொடர்பு :
ஸ்ரீ முருகன்
தொலைத்தொடர்பு நிலையம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5392


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.